இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 145 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 07 வியாழக்கிழமை 20.04.2017

## கேப்பாபிலவு மக்களின்
# 111 ஏக்கரையும் ஒரு வீதியையும் விடுவிப்பதற்கு படை இணக்கம்

ஆயினும் திகதி குறித்து இன்னும் முடிவு இல்லை



யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

கேப்பாபிலவில் 67 குடும்பங்களுக்குச் சொந்தமான 111 ஏக்கர் காணியையும், வற்றாப்பளை-புதுக்குடியிருப்பு முதன்மை வீதியையும் விடுவிப்பதற்குப் பாதுகாப்புத் தரப்பினர் முடிவு செய்துள்ளனர். மக்கள் அடர்த்தியாக வாழ்ந்த பகுதியில் பாதுகாப்புத் தரப்பின் முக்கிய கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் விடுவிப்புத் தொடர்பில் அடுத்த மட்டத்தில் - அரச தலைவர் - தலைமை அமைச்சர் மட்டத்தில் >> 24

## கொழும்பு வருகையை கைவிட்டார் பிரி. அமைச்சர்

கொழும்பு, ஏப். 20
பிரிட்டனின் ஆசிய, பசுபிக் பிராந்தியத் துக்கான அயலுறவு மற்றும் பொதுநலவாய பணியக அமைச்சர் அலோக் சர்மா, இலங்கைக்கு மேற்கொள்ளவிருந்த பயணத்தைக் கைவிட்டார் என்று அறிவிக்கப்பட்டது. >> 23

## உணர்வுபூர்வமாக நேற்று அன்னை பூபதி நினைவு



யாழ்ப்பாணம், ஏப். 20
அன்னை பூபதியின் 29 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வு மட்டக்களப்பிலும் கிளிநொச்சியிலும் உணர்வு பூர்வமாக நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. >> 24

## வட்டுவாகலில் காணிகளை விடுவிக்க 14 நாள் அவகாசம்

இல்லையேல் அங்கு தொடர் போராட்டம்
நேற்றுக் கவனவீர்ப்பில் ஈடுபட்ட மக்கள் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப். 20
வட்டுவாகலில் கடற்படை சுவீகரித்த பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசுக்கு 14 நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. >> 24

## ஆலய வழிபாட்டிலும் வாழ்வாதாரத்திலும் இராணுவத் தலையீடு

ஏற்றுக்கொள்ளவே முடியாதென வட்டுவாகல் மக்கள் கொதிப்பு

முல்லைத்தீவு, ஏப். 20
எங்கள் மத வழிபாட்டிலும், எங்கள் வாழ்வாதாரத் தொழிலிலும் இராணுவத் தலையீடு இருப்பதை நாம் ஏற்றுக் கொள்ளமுடியாது என வட்டுவாகல் மக்கள் தெரிவித்தனர். >> 24

## பாடசாலை அமைந்துள்ள 500 மீற்றருள் சிகரெட் தடை

கொழும்பு, ஏப். 20
பாடசாலைக்ளை அண்மித்து 500 மீற்றர் தொலைவுக்குள் சிகரெட் விற்பனை செய்யச் சுகாதார அமைச்சு தடை விதித்துள்ளது. >> 22

## ஈ-மெயில் வடிவத்தில் புதிய கணினி வைரஸ்

இலங்கையில் பரவுவதாக எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 20
மின்னஞ்சல் வடிவத்தில் புதிய கணினி வைரஸ் இணையத்தளங்களில் வேகமாகப் பரவி வருவதாக, இலங்கை >> 04

## நான்கு நாள் காய்ச்சலால் குழந்தை சாவு

யாழ்ப்பாணம், ஏப். 20
நான்கு நாள்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட ஒரு வயதுக் குழந்தை சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
திருகோணமலையைச் சேர்ந்த பிரதௌஷ் பாத்திமா அஹ்னா என்ற குழந்தையே உயிரிழந்தது.
கடந்த 15ஆம் திகதி >> 23

## ராணுவம் சொகுசு வாழ்வு காணி விடுவிப்பு சந்தேகம்

கேப்பாபிலவுக் காணிகளை நேரில் பார்வையிட்ட பின் மக்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 20
எங்கள் காணிகளில் இராணுவத்தினர் சொகுசாக இருக்கின்றனர். காணிகளை விடுவிப்பார்கள் என்பதில் நம்பிக்கை குறைவாகவே உள்ளது. இன்று காணிகளை விடுவிப்பார்கள் என்றே எதிர்பார்த்தோம். ஏமாற்றமாக இருக்கின்றது. போராடாமல் இருந்திருந்தால் ஜென்மத்துக்கும் காணிக்குள்ளே சென்றிருக்கவே முடியாது. >> 04

## இப்படியே சென்றால் ராணுவப் புரட்சிதான்

அரசுக்கு டியூ எச்சரிக்கை



கொழும்பு, ஏப். 20
கூட்டரசு இப்படியே பயணித்துக்கொண்டிருந்தால் இந்த நாட்டில் இளைஞர்களின் புரட்சி அல்லது இராணுவப் புரட்சி ஏற்படும் என்று >> 24



## பேரவலம் நிகழ்ந்த வட்டுவாகலிலேயே எங்களைச் சுடுங்கள்

ஒளிப்படம் எடுத்த கடற்படையினரிடம் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கூறினர்

முல்லைத்தீவு, ஏப். 20
எங்கள் காணியைத் தாருங்கள் என்றே உங்களிடம் கேட்கிறோம். இது பெரும் குற்றம் என்றால், மனிதப் பேரவலம் நடந்த இந்த வட்டுவாகல் மண்ணிலேயே எம்மைச் சுடுங்கள். >> 24

## மகிந்தவின் சகாக்கள் திருடிய பணத்தை மீட்க வெளிநாடுகளிடம் உதவி

ஐ.தே.க. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 20
மகிந்த ஆட்சியில் அமைச்சர்கள் திருடிய பணத்தைக் கண்டு பிடிப்பதற்காக வெளிநாட்டு உதவிகள் கோரப்பட்டிருக்கின்றன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் விஜயமான தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஊழல், மோசடியால் இந்த நாடு கடுமையாகப் பாதிக்கப்பட்டி >> 24

## பணியாளர்களுக்கு சம்பளம் வழங்காதுள்ள 4 சங்கங்கள்

18 சங்கங்கள் நட்டத்தில் செயற்பாடு
வடக்குக் கூட்டுறவின் நிலமை இது

யாழ்ப்பாணம், ஏப். 20
வடக்கு மாகாணத்தில் உள்ள நான்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாளர்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை. அத்துடன் 18 சங்கங்கள் நட்டத்தில் இயங்குவதாகவும், 29 சங்கங்க்ள் மாத்திரமே இலாபத்தில் இயங்குவதாகவும், வடக்கு மாகாண கூட்டுறவுத் >> 22

## மீதொட்டமுல்ல மக்களுக்கு வீடமைப்பு இன்று ஆரம்பம்

அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 20
குப்பைமேடு சரிந்து, வீடிழந்த மீதொட்டமுல்ல மக்களுக்குப் புதிய வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளை இன்றைய தினமே ஆரம்பிக்குமாறு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
இடருக்குள்ளான மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான க்லந்துரையாடல் இடர் முகாமைத்துவ >> 24

## மீதொட்டமுல்ல இடர் ஒரு இனப்படுகொலை

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 20
மீதொட்டமுல்லவில் இடம்பெற்றது விபத்து அல்ல. அதுவொரு இனப்படுகொலை என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது. >> 24

## வெளிநாட்டிலிருந்து வந்தவரிடம் கப்பம் கோரிய நான்காவது சந்தேகநபரும் கைது

வீட்டில் வாளும் மீட்பு



யாழ்ப்பாணம், ஏப். 20
வெளிநாட்டிலிருந்து தாயகம் வந்திருந்தவரிடம் கப்பம் கோரிய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நான்காவது சந்தேகநபர் நாகர்கோவில் கிழக்கில் அவரது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டார் எனப் பருத்தித்துறைப் >> 04

## காணிகளை விடுவிக்க கோரி மன்னாரில் நேற்றுப் பேரணி

மன்னார், ஏப்.20
இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்க வற்புறுத்தி கவனவீர்ப்புப் பேரணி நடத்தப்பட்டது.

விரிவு: பக். 11

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# பிரிவுகளுக்குச் செல்லார் கிராம அலுவலர்கள்

## இன்று முதல் மறு அறிவித்தல் வரை பிரதேச செயலகத்திலேயே கடமை

தென்மராட்சி ஏப். 20
தென்மராட்சி பிரதேச கிராம அலுவலர்கள் இன்று தொடக்கம் மறு அறிவித்தல் வரை தமது பிரிவுக்குக் கடமைக்குச் செல்வதில்லை எனவும் அதுவரை பிரதேச செயலகத்தில் கையொப்பமிட்டு கடமையாற்றவுள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அல்லாரை கிராம அலுவலர் தாக்கப்பட்டு நான்கு நாள்களாகியும் தாக்கியவர்களைக் கைது செய்யப் பொலிஸார் தயக்கம் காட்டுவதைக் கண்டித்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதெனக் கிராம அலுவலர்கள் தெரிவித்தனர்.

தமது முடிவைப் பிரதேச செயலர் ஊடாக யாழ். மாவட்டச் செயலருக்கு மனு மூலம் அறிவித்துள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

கிராம அலுவலரைத் தாக்கியவர்களைக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்தும் வரை தாம் தமது பாதுகாப்புக் கருதி பிரிவுக்குக் கடமைக்குச் செல்லாமல் பிரதேச செயலகத்தில் கடமையாற்றவுள்ளோம் என அவர்கள் குறிப்பிட்டனர். (த-9)



# பொலிஸாருக்கு எதிராக நேற்று கிராம அலுவலர்கள் பணிப்புறக்கணிப்பு

## தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாக

தென்மராட்சி ஏப்.20
கிராம அலுவலர் தாக்கப்பட்டமைக்கு உரிய நடவடிக்கை எடுக்காத கொடிகாமம் பொலிஸாரைக் கண்டித்துத் தென்மராட்சி பிரதேச கிராம அலுவலர்களும் பிரதேச செயலக அலுவலர்களும் நேற்று மு.ப. 10.30 மணி தொடக்கம் ஒரு மணி நேரப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த அல்லாரைப் பகுதியில் உள்ள ஒருவர் மூன்று தினங்களாகத் தொடர்ச்சியாகப் பாடல்களை அதிக சத்தத்துடன் ஒலிபரப்பி வருவதால் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகப் பொது மக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிராம அலுவலரிடம் முறைப்பாடு செய்தனர். இந்த முறைப்பாட்டை விசாரிக்கச் சென்ற கிராம அலுவலரை அங்கிருந்த மூவர் குடியிருப்பாளர் முன்னிலையில் தாக்கியதுடன் அவரது அலைபேசியையும் உடைத்துச் சேதப்படுத்தியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகக் குறித்த கிராம அலுவலர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் பி.ப. 3.15 மணிக்கு முறைப்பாடு செய்யச் சென்றுள்ளார். அங்கு வாகனங்கள் இல்லையெனத் தெரிவித்துச் சம்பவ இடத்திற்குப் பொலிஸார் செல்லவில்லை. பி.ப. 3.30 மணிக்கும் மாலை 4.30 மணிக்கும் வெளியே சென்றிருந்த வாகனங்கள் பொலிஸ் நிலையத்திற்கு வந்தபோதிலும் பொலிஸார் இது குறித்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ளாமல் இரவு 7.45 மணி வரை கிராம அலுவலரைப் பொலிஸ் நிலையத்தில் தங்க வைத்து அதன் பின்னர் சம்பவ இடத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு சென்றபோது தாக்கியவர்களும் வீட்டுக்காரரும் தலைமறைவாகியுள்ளனர்.

பொலிஸாரின் செயற்பாட்டைக் கண்டித்து நேற்றுப் பிரதேசத்தின் அனைத்து கிராம அலுவலர்களும் பிரதேச செயலக அலுவலர்களும் ஒரு மணிநேரம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

நேற்றுப் புதன்கிழமை என்பதால் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் பிரதேச செயலகத்துக்கு வந்திருந்தபோதிலும் அலுவலர்களின் பணிப்புறக்கணிப்பால் மணிக்கணக்கில் காத்திருக்கவேண்டிய நிலை காணப்பட்டது. (த-9)

# 2 ஆலயங்களின் திருவிழாக்களை ஒரே காலத்தில் நடத்தவேண்டுமா?

## விளக்கம் தருமாறு இந்துக் குருமார்களுக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் அழைப்பு

மல்லாகம், ஏப். 20
மல்லாகம் மத்தியிலுள்ள 2ஆலயங்களின் திருவிழாக்களை ஒரே காலப்பகுதியில் நடத்த வேண்டும் என்ற முடிவு குறித்து காளிகாதேவி அம்மன் ஆலய நிர்வாக சபையினர் பல விளக்கங்களை மன்றில் முன்வைத்தனர். ஒரே காலத்தில்தான் 2 ஆலயங்களின் திருவிழாக்களை நடத்த வேண்டுமா? என்று விளக்கமளிக்குமாறு பன்னாட்டு இந்துமத குருமார் பீடத்தைச் சேர்ந்த ஐந்து குருமாரை நாளை மன்றில் முன்னிலையாகுமாறு மல்லாகம் நீதிமன்று அழைப்பு விடுத்தது.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றின் நீதிபதி அந்தோனிப்பிள்ளை ஜூட்சன் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு இரண்டாவது தடவையாக விளக்கத்துக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் சட்டத்தரணி ஜெ.டி.எ. ரஞ்சித்குமாரும் எதிர் மனுதாரர்களான ஆலய நிர்வாக சபையினர் சார்பில் சட்டத்தரணிகளான சுகாஸ், சோபிதன் ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

"இந்துக் குருமாரிடம் கேட்டுத்தான் ஆலய நிர்வாக சபையின் பொதுக் கூட்டத்தில் இவ்வாறு ஒரே காலப்பகுதியில் திருவிழா நடத்துவது என்ற முடிவுக்கு வரப்பட்டது உள்ளிட்ட பல விளக்கங்களை காளிகாதேவி அம்மன் ஆலய பரிபாலன சபையினர் மன்றில் முன்வைத்தனர்.

இவற்றைப் பரிசீலித்த நீதிபதி, ஒரே நாளில் இரண்டு ஆலயங்களிலும் திருவிழாக்களை நடத்த வேண்டுமா? என்று பன்னாட்டு இந்துக்குருமார் பீடத்தினரிடம் கேட்போம் என்றார். பன்னாட்டு இந்து மதக்குரு பீடத்தின் தலைவர், செயலாளர் உட்பட ஐந்து குருமாரை நாளை வெள்ளிக்கிழமை மன்றில் முன்னிலையாகுமாறு அழைப்புவிடுக்குமாறு பதிவாளருக்கு நீதிபதி கட்டளையிட்டார்.

**பின்னணி**

மல்லாகம் மத்தியில் உள்ள பழம்பதி முருகன் ஆலயம், காளிகாதேவி அம்மன் ஆலயம் ஆகிய இரண்டு ஆலயங்களிலும் ஒரே காலப்பகுதியில் வருடாந்தத் திருவிழாக்களை நடத்த வேண்டும் என்று காளிகாதேவி அம்மன் ஆலய நிர்வாகத்தினர் முடிவெடுத்தனர். அந்த முடிவை ஏற்க மறுத்த ஆலய உபயகாரர் மற்றும் அந்த ஊர் மக்கள் மல்லாகம் மன்றில் ஆட்சேபணை மனுவைத் தாக்கல் செய்தனர். (வ-12)

# மகிந்த இல்லாவிடின் மைத்திரியும் ரணிலும் அமரர்களாகியிருப்பர்

## இப்படிக் கூறுகிறார் விமலவீர எம்.பி.

கொழும்பு, ஏப். 20
"மகிந்த ராஜபக்ச மட்டும் இல்லையென்றால் இன்று ரணில் விக்கிரமசிங்கவும் மைத்திரிபால சிறிசேனவும் உயிருடன் இருந்திருக்கமாட்டார்கள். அவர்களை விடுதலைப் புலிகள் எப்போதோ கொன்று முடித்திருப்பார்கள்"

இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:

மகிந்த போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முன் இந்த நாடு எப்படி இருந்தது என்று நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். வடக்குகிழக்கில் தமிழர்கள்கூட உரிமைகளை இழந்து காணப்பட்டனர். யாழ்ப்பாண சிறுவர்களின் கைகளில் பேனா இருக்கவில்லை. அவர்களிடம் துப்பாக்கி தான் இருந்தது. அவர்களின் கைகளில் பந்து இருக்கவில்லை. அவர்களிடம் வெடி குண்டுதான் இருந்தது.

புத்தகங்கள் இருக்க வேண்டிய அவர்களின் கைகளில் துப்பாக்கியும் ஸ்சனைட் குப்பிகளும்தான் இருந்தன. இவை அனைத்தையும் மகிந்த மாற்றி அமைத்தார். அவர்களுக்குக் கல்வியைக் கொடுத்தார். அவர்களுடைய பாடசாலைகளை அபிவிருத்தி செய்தார். அங்கு வீதிகளைச் சீரமைத்துக் கொடுத்தார்.

அது மாத்திரமன்றி, அனைவரது உயிரையும் அவர் காப்பாற்றினார். நாட்டு மக்கள் அனைவரும் உயிர்விடும் பயத்தில் இருந்து விடுபட்டு நிம்மதியாக வாழ்வதற்கு மகிந்ததான் காரணம். அவர் இந்த நாட்டு மக்களை மாத்திரமல்ல இப்போதைய அரச தலைவர் மைத்திரிபால மற்றும் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் உயிர்களையும் காப்பாற்றியுள்ளார்.

அப்படியானதொரு பேராபத்தில் இருந்து எம்மையெல்லாம் காப்பாற்றிய மகிந்தவை இன்று திருடர் என்று கூறுகின்றனர்.

அவர் ஒரு ரூபாவைக்கூட திருடியதற்கான ஆதாரம் இல்லை. இருந்தும், அரசியல் லாபத்துக்காக கீழ்த்தரமான வேலைகளை இந்த அரசு செய்து வருகின்றது- என்றார். (வ-4)

# அரச ஆலோசனைக்கேற்ப செயற்பட சைட்டம் தயார்

## அதன் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 20
மாணவர்களின் நலன்கருதி அரசு முன்வைக்கும் ஆலோசனைகளை ஏற்று நடக்கத் தயாராக இருப்பதாக சைட்டம் தலைவர் மருத்துவர் நெவில் பர்னாந்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நீதிமன்ற ஆணைப்படி எனது கல்லூரி மாணவர்களுக்கு வழங்கும் எம்.பி.பி.எஸ். பட்டத்தை அங்கீகரிப்பதற்காக அரசு முன்வைக்கும் எந்த ஆலோசனையையும் ஏற்றுக்கொள்ள நான் தயாராகவுள்ளேன். இலங்கையில் வழங்கப்படும் மருத்துவப் பட்டத்துக்கான உச்சபட்ச தகுதிகளை எனது கல்லூரி மாணவர்களுக்கு வழங்குவேன். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் உயர் கல்வியமைச்சும் இது தொடர்பில் முன்வைக்கும் ஆலோசனைகளை ஏற்பதில் எனக்குத் தயக்கமேதும் கிடையாது. (த-4)

# மக்களை அலையவிடுபவர்களாக அதிகாரிகள் செயற்படவே கூடாது

## யாழ்ப்பாண மாவட்டச் செயலர் அறிவுரை

யாழ்ப்பாணம், ஏப்.20
"தமது பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கேட்டு அலுவலர்களான எம்மை நாடிவரும் பாமர மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையிலேயே அதிகாரிகள் செயற்படவேண்டும். மாறாக அவர்களை அலைய விடுபவர்களாக அதிகாரிகள் செயற்படக் கூடாது"

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

சமூக பாதுகாப்புச் சபையின் புலமைப்பரிசில் திட்டத்தில் இணைந்த கோப்பாய் பிரதேச செயலக மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கோப்பாய் பிரதேச செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது. அதில் மதிப்புறு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்ததாவது:

தமது அன்றாட சிறு விடயங்களுக்குத் தீர்வு வேண்டி அலுவலர்களான எம்மை நாடிவரும் பாமர மக்களின் பிரச்சினைகளை முடிந்தவரையில் தீர்த்து வைப்பவர்களாகவே அதிகாரிகளாகிய நாம் செயற்பட வேண்டும். மாறாக அவர்களை அலைய விடுபவர்களாக விளங்கக்கூடாது . இதில் சில அதிகாரிகள் தொடர்ந்தும் அலைய விடுபவர்களாகவே இருக்கின்றனர். அலுவலர்கள் தீர்த்து வைப்பார்கள் என்ற நம்பிக்கையிலேயே மக்கள் எம்மை நாடி வருகின்றனர். அதனால் அவர்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வை வழங்க வேண்டும்.

அவ்வாறு தீர்வை வழங்க முடியாத பட்சத்தில் உரிய இடங்களில் தொடர்பு கொண்டு உரிய தீர்வையும் அதிகாரிகளே பெற்றுக் கொடுக்க வேண்டும். இன்னும் சில அதிகாரிகளோ நிர்வாக மட்டத்தில் தீர்வு எட்டக்கூடிய விடயங்களுக்குக்கூட மக்களை நீதிமன்றங்களை நாடுமாறுகூறி அவர்களை அலைய விடுகின்றனர். அதனால் அவர்களின் பணமும் விரயமாகின்றது. நிர்வாக ரீதியில் தீர்வை எட்டமுடியாத விடயங்களையே நீதிமன்றங்களுக்கு அனுப்பிவைப்பதோடு, குற்றச் செயல்களையே நீதியின் முன்பாக நிறுத்த வேண்டும்.

மாறாக அதிகாரிகள் தமது இலகுக்காக மக்களை நீதிமன்றுக்கு அனுப்பும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. மக்களுக்காக தமது சொந்தப் பணத்தை தமது பொக்கெற்றால் வழங்கி சேவை புரியும் அதிகாரிகளையும் பார்த்திருக்கின்றோம். இதேநேரம் இதற்கு மாறான செயலில் ஈடுபடும் அலுவலர்களும் உண்டு. எந்த விடயத்திலும் பிரச்சினை இல்லாமல் இருக்க வேண்டுமானால் அந்த விடயங்களில் வெளிப்படைத் தன்மை மிக அவசியம் என்றார். (வ-101)

# குப்பைமேடு சரிவில் உயிரிழந்தவர்களுக்கு தரமற்ற சவப்பெட்டி

## விசாரணை நடத்த அரசு உத்தரவு

கொழும்பு, ஏப். 20

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்ததில் உயிரிழந்தவர்களைக் கொண்டு செல்வதற்கு வழங்கப்பட்ட தரமற்ற சவப்பெட்டிகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படுமென்று இடர் முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

முதற்கட்டமாக 14 பேரின் சடலங்களை எடுத்துச் செல்வதற்காக வழங்கப்பட்ட பெட்டிகளைச் சுமந்து சென்றபோது அவற்றின் கீழ்ப் பலகைகள் கழன்று விழுந்ததாகவும், தரம் குறைந்த பலகைகளால் செய்யப்பட்ட இந்தப் பெட்டிகளைச் சரியாக மூட முடியாமல் இருந்ததாகவும் இறந்தவர்களைச் சுமந்து சென்றவர்கள் விசனம் தெரிவித்தனர்

இதனையடுத்து இந்த விடயம் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கத் தனது அமைச்சின் குழுவொன்றை நேற்றுமுன்தினம் மீதொட்டமுல்ல பகுதிக்கு அனுப்பிவைத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

14 பேரின் சடலங்களும் கடந்த திங்கட்கிழமை கொலன்னாவ பொது மயானத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது சவப்பெட்டிகளின் கீழ்ப் பலகைகள் கழன்றும் மூடிகள் தாமாகவே திறந்தும் சிக்கல் ஏற்பட்டதால் ஏற்கனவே மனம் நொந்துபோயிருந்த ஏழை மக்கள் மேலும் மனவேதனைக்கு உள்ளானதாகவும் இது மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை எனவும் பிரதேச வாசிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (த-4)

# டிஜிற்றல் வகுப்பறை விரைவில் ஆரம்பம்

## மாதிரி வகுப்பறை நேற்று கல்வி அமைச்சில் திறப்பு




கொழும்பு, ஏப். 20

தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அமையப் பாடசாலைகளில் டிஜிற்றல் முறையில் கல்வி பயிலும் மாதிரி வகுப்பறைகளை, தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் அமைப்பதற்கான நடவடிக்கைகளைக் கல்வி அமைச்சு முன்னெடுத்து வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக மாதிரி டிஜிற்றல் முறையில் கல்வி பயிலும் வகுப்பறை ஒன்று கல்வி அமைச்சில் நேற்றுக் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி உட்பட அமைச்சின் மேலதிக செயலாளர்கள், அதிகாரிகள், அனுசரணையாளர்கள் கலந்துகொண்டார்கள்.

தற்போது அமைக்கப்பட்டிருக்கும் இந்த டிஜிற்றல் முறையில் கல்வி பயிலும் வகுப்பறைகளை மாணவர்கள் ஆசிரியர்கள், அதிபர்கள் பார்வையிடவும் பயன் பெறவும் முடியும்.

தற்போது நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த உபகரணங்கள் வழங்கல் உட்பட ஏனைய நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (த-4)

# சிறுவர்கள் எப்போதும் பெற்றோருடன் வாழும் சூழலே பாதுகாப்பானது

## சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் நியமன நிகழ்வில் வடக்கு சுகாதார அமைச்சர்

யாழ்ப்பாணம், ஏப். 20

சிறுவர்கள் என்றும் தம் பெற்றோருடன் வாழும் சூழலையே சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் ஏற்படுத்தவேண்டும் அதுவே சிறுவர்களுக்கான முதலாவது பாதுகாப்பாகும் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சுகாதார அமைச்சின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

போருக்குப் பின்னர் எமது மாகாணத்தில் பல சிறார்கள் தாய், தந்தையர்களை இழந்து சிறுவர் இல்லங்களில் வாழ்ந்து வருகின்றார்கள். இது மிகவும் கொடுமையானது. நாங்கள் எவ்வாறான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தாலும் அவர்கள் தமது பெற்றோர்களுடன் வாழ்வதைப் போன்றதொரு சந்தோசம் இருக்காது. சிறுவர்கள் வாழ்வதற்கான சிறந்த சூழல் அவர்களது வீடுகள்தான். பெற்றோரில் இருவருமே இல்லாத சிறுவர்களா யின் அதற்கான சந்தர்ப்பத்தை நாமே ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

சில பெற்றோர்கள் பிள்ளைகளைச் சுமைகளாகக் கருதி சிறுவர் இல்லங்களில் சேர்ப்பதற்கு முயற்சிக்கின்ற சம்பவங்களும் இடம்பெறுகின்றன. இது ஓர் தவறான அணுகுமுறையாகும்.

ஆகவே நீங்கள் இயலுமானவரை பிள்ளைகளை அவர்களின் பெற்றோர்களுடன் வாழ்வதற்கான சூழலையே ஏற்படுத்திக்கொடுங்கள் என்றார்.

இந்த நிகழ்வில் 7 சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் அமைச்சரால் வழங்கப்பட்டன. இவர்களில் வவுனியா மாவட்டத்துக்கு ஒருவரும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 2 பேரும், மன்னார் மாவட்டத்துக்கு 4 பேரும் நியமனம் பெற்றுள்ளனர்.

இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரன், உதவிச் செயலாளர் சுஜீவா, சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் விஸ்வரூபன் உட்பட அமைச்சின் உத்தியோகத்தர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (த-101)

# யானை சுட்டுக்கொலை குறித்து இருவேறு குழுக்கள் விசாரணை

## அடுத்த வாரம் அறிக்கை வரும் என்கிறது அமைச்சு

வவுனியா, ஏப். 20

"வவுனியா, ஓமந்தை கொம்பு வைத்தகுளம் பகுதியில் யானையொன்று சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் அமைச்சு மற்றும் திணைக்கள மட்டங்களில் தனித்தனியே இடம்பெறுகின்றன.

அது தொடர்பான முழுமையான அறிக்கை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன் கிடைத்துவிடும்"

இவ்வாறு நிலையான அபிவிருத்தி மற்றும் வன விலங்குகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்தார்.

"யானை மீதான துப்பாக்கிச் சூடு குறித்து தற்போது சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இது தண்டனைக்குரிய குற்றம் எனவும் தெரிவிக்கப்பட்டுவருகின்றது. இந்த விடயம் தொடர்பில் 2 குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளன.

வன விலங்குகள் அமைச்சின் அதிகாரிகள் குழு நேற்றுச் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை களை முன்னெடுத்தது.

இரு யானைகளில் ஒன்று குழப்பத்தை விளைவிக்க முற்பட்டமை யாலேயே அதன் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு தற்காலிக இடமாற்றம் வழங்கப்பட்டது" என்று அமைச்சர் காமினி ஜயவிக்ரம மேலும் தெரிவித்தார். (வ - 4)

# கடற்பாறையில் நின்று செல்பி எடுத்த மாணவியை காவுகொண்டது கடலலை

## பிறந்த நாளன்று அவலம்

கொழும்பு, ஏப். 20

மாத்தறையில் 11 வயது மாணவியொருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார்.

சக மாணவிகளுடன் கடற்கரைப் பாறையில் நின்று செல்பி எடுத்துக்கொண்டிருந்தபோது கடலலை வீசியதால் நீரில் இழுக்கப்பட்டு மூழ்கி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவரது பிறந்த தினத்தில்தான் சம்பவம் நடைபெற்றது என்று விசாரணையில் உறவினர்கள் தெரிவித்தனர்.

மாத்தறை, கந்தர பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் சம்பவம் இடம்பெற்றது. நுகேகொட, கங்கொடவில பிரதேசத்தைச் சேர்ந்த ருஸ்தி தருமினி ஜயசிங்க என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்தார். தமிழ் சிங்கள புத்தாண்டைக் கொண்டாட அவர் தனது உறவினர் வீடொன்றுக்கு சென்றுள்ளார். பின்னர் நண்பிகளுடன் இணைந்து மாணவி கடற்கரைக்குச் சென்றுள்ளார்.

இவருடன் 7 பேர் அதே கடற்பாறையின் மீது நின்று செல்பி எடுத்துள்ளனர். திடீரென வந்த பெரிய அலையொன்றால் அவர் கள் கடலுக்குள் அள்ளுண்டு சென்றுள்ளனர். 6 பேர் சிறுகாயங்க ளுடன் தப்பிக் கரை சேர்ந்தபோதும் குறித்த மாணவி நீரில் மூழ்கி உயிரிழந்தார்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4)

# சட்டவிரோத கருக்கலைப்பால் பெண் உயிரிழக்கக் காரணமான ஒருவருக்கு 10 ஆண்டு கடூழியம்

கொழும்பு, ஏப். 20

சட்டவிரோதமாகக் கருக்கலைப்பு செய்ததன் மூலம் பெண்ணொருவரின் உயிரிழப்புக்குக் காரணமானவருக்குப் பாணந்துறை மேல் நீதிமன்று 10 வ்ருடங்கள் கடூழியச்சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித் தது.

2003ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி பாணந்துறை, நல்லூரவ, கலவெட்டிமோதர பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் சட்டவிரோதமாகக் கருக்கலைப்புச் செய்யப்பட்டதால் உயிரிழந்தார்.

எதிராளி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக் கப்பட்டிருப்பதால் அவருக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டது. அத்துடன் 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக் கப்பட் டது. (த-4)

# சொந்தக் கட்டடத்தில் கலால் திணைக்களம்

கொழும்பு, ஏப். 20

இதுவரை காலமும் கொழும்பு 2, ஆர்.ஏ.டி. ராமநாயக்க மாவத்தையில் வாடகைக் கட்டடமொன்றில் இயங்கிவந்த கலால் திணைக்களமும், அதன் தலைமையகமும் இன்று முதல் ராஜகிரியவிலுள்ள அதன் சொந்தக் கட்டடமொன்றுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளன.

103 வருடங்களாக வாடகைக் கட்டடங்களிலேயே இயங்கிவந்த கலால் திணைக்களம் இப்போது அதன் சொந்தக் கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்படுவது ஒரு வரலாற்று நிகழ்வென அந்தத் திணைக்கள வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு ராஜகிரியவில் ஆரம்பிக்கப்பட்ட கட்டட நிர்மாணப் பணிகள் எட்டு மாடிகளுடன் பூர்த்தியாகியுள்ளதாகவும், திணைக்களத்தைச் சேர்ந்த சகல பிரிவுகளும் இலக்கம் 353, கோட்டே வீதி, ராஜகிரியவிலுள்ள இந்தக் கட்டடத்திலேயே இயங்கும் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின. (த-4)

# அகிலதாஸின் நிதி மூலம் 3 குடும்பங்களுக்கு வீடுகள்



கரணவாய், ஏப். 20
வடக்கு மாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸின் நிதியின் மூலம் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மூன்று குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

கரணவாய் தெற்கு கிராமத்தில் விநாயகம் விஜயராசா, கரணவாய் மேற்கைச் சேர்ந்த இளையதம்பி நிர்மலராசா மற்றும் அல்வாய் கிழக்கைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை மங்களேஸ்வரி ஆகிய மூவருக்கும் தலா 6 இலட்சத்து 65ஆயிரம் ரூபா செலவில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான அனுமதி வடக்கு மாகாண அமைச்சர்களிடம் பெறப்பட்டு அதற்குரிய சான்றிதழ்கள் குறிப்பிட்ட குடும்பத்தினரிடம் வழங்கப்பட்டுள்ளன என்று வடமாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் தெரிவித்தார். (த-108)

# தமிழக விவசாயிகளின் அறப்போர் தற்காலிகமாக கைவிடப்பட்டது

சென்னை, ஏப். 20
பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தியத் தலைநகர் புதுடெல்லியில் கிட்டத்தட்ட 40 நாள்களாகப் போராடிவந்த தமிழக விவசாயிகளின் போராட்டம் தற்காலிகமாக நேற்று இரவு கைவிடப்பட்டது.

தேசிய, தனியார் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க் கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்வது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தமிழக விவசாயிகள் டெல்லியில் கடந்த மாதம் 14ஆம் திகதி முதல் போராட்டம் நடத்தி வந்தனர்.

இந்திய நடுவண் அரசு கண்டும் காணாமலும் போல் இருக்கிறது என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த நிலையில் மத்திய அமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன் நேற்று மாலை விவசாயிகளைச் சந்தித்து அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் பரிசீலிப்பது என வாக்குறுதி வழங்கினார். இதனால் அடுத்த இரு நாள்களுக்கு விவசாயிகள் தமது அறப்போரைக் கைவிடுவதாக அறிவித்தனர்.

கொடுத்த வாக்குறுதி தொடர்பில் கலந்தாலோசிக்காவிட்டால் நாளை மறுதினம் போராட்டம் மீண்டும் ஆரம்பமாகும் என்றும் அவர்கள் காலக்கெடு விதித்துள்ளனர். (ம)

# உடுவிலில் வீடொன்றின் மீது நேற்று இரவு குண்டு வீச்சு

## ஒருவர் காயமுற்று வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஏப். 20
உடுவிலில் உள்ள மருத்துவர் வீட்டின் மீது நேற்று முன்னிரவு பெற்றோல் குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டது. இதில் மருத்துவரின் தந்தையார் காயமடைந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இரவு 7.30 மணிக்கு, மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் இந்தக் குண்டு வீசப்பட்டதாக முதல் கட்ட விசாரணைகளில் கண்டறிந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். பெற்றோல் குண்டு வெடித்த சத்தத்தினால் பிரதேசத்தில் சிறிது பதற்றம் நிலவியது.

வீட்டில் நின்ற மருத்துவரின் தந்தை குண்டுத் தாக்குதலால் காயமடைந்தார். சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு முறையிட்டதையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டனர். (த-5-101)

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஈமெயில்...

கணினி அவசர நடவடிக்கைச் செயலணி அறிவித்துள்ளது. மின்னஞ்சலுக்கு வரும், சந்தேகத்துக்கு இடமான மின்னஞ்சலைத் திறக்கவேண்டாம் என்று, அந்தச் செயலணியின் தலைமை தகவல் பொறியியலாளர் ரொசான் சந்திர குப்தா தெரிவித்தார்.

இந்த வைரஸ், ரன்சொம்வேர் என்று இனங்காணப்பட்டுள்ளது. கணினிக்குக் கிடைக்கும் மின்னஞ்சலைத் திறக்கும்போது, கணினியானது வைரஸினால் பாதிக்கப்படும். செய்தி, காணொலிகள், பீடீஎப் கோப்புகள் என்று பலவகையான பெயர்களில் கிடைக்கும் போலியான மின்னஞ்சல்களில் புதிய வைரஸ் இருக்கும். கணினிக்குள் இந்த வைரஸ் புகுந்து கொண்டால், கணினியில் இருக்கின்ற சகல ஆவணங்களின் கோப்புகள், படங்கள், மின்னஞ்சல் செய்திகள் ஆகியன மீளவும் செயற்படுத்தமுடியாத அளவுக்கு, மறைந்து கொள்ளும்.

கணினியில் இருக்கின்ற, முக்கியமான ஆவணங்கள் அடங்கிய கோப்புகள், படங்கள் உள்ளிட்டவற்றை, பிறிதொரு இடத்தில், பிரதி செய்து வைத்துக் கொள்ளுதல் உசிதமானதும் பாதுகாப்பானதும் ஆகும். கணினியில் இருக்கின்ற வைரஸ் எதிர்ப்பு அட்டையை, புதுப்பித்துக்கொள்வது உகந்ததாகும். இந்த வைரஸ், கணினிகளைத் தாக்கியுள்ளதாக, முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன - என்றார். (த-5)

### வெளிநாட்டிலிருந்து...

பொலிஸார் தெரிவித்தனர். அவர் கைது செய்யப்படும்போது அவருடைய வீட்டிலிருந்து வாளும் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவரிடம், நாகர்கோவிலைச் சேர்ந்த 4 பேர் கப்பம் கோரியதாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. மார்ச் மாதம் 29 ஆம் திகதி, சந்தேக நபர்களைக் கைது செய்வதற்காகப் பொலிஸார் நாகர்கோவில் பகுதிக்குச் சென்றிருந்தனர். இதன்போது பொலிஸ் வாகனத்தின் மீது கல் வீச்சு நடைபெற்றிருந்தது. சந்தேக நபர்களைக் கைது செய்யாமல் பொலிஸார் திரும்பியிருந்தனர்.

தொடர் நடவடிக்கையின் விளைவாக மூன்று சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். நான்காவது சந்தேக நபரைத் தேடி வருவதாகப் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில், நான்காவது சந்தேக நபரை அவரது வீட்டில் வைத்து நேற்று மாலை கைது செய்துள்ளதாகப் பருத்தித்துறைப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். அந்த வீட்டிலிருந்து வாளையும் மீட்டதாக அவர்கள் தெரிவித்தனர். (த-5-26)

### ராணுவம்...

கேப்பாபிலவு இராணுவ முகாம் காணிகளைப் பார்வையிட்ட பின்னர் மக்கள் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

எங்களது காணிகள் அடையாளம் காண முடியாதவாறு இராணுவத்தினரால் உருமாற்றம் செய்யப்பட்டுள்ளன. வீடுகள், கட்டடங்கள், தேவாலயம் எல்லாம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

எங்களது தென்னைகளிலிருந்து விழும் தேங்காய்கள் குவியல்களாகப் படையினர் குவித்து வைத்துள்ளனர். அவர்கள் அதனைப் பயன்படுத்துகின்றார்கள் என்பது அங்கிருக்கின்ற அடையாளங்களைப் பார்க்கும்போது புரிகின்றது. இராணுவத்தினர் சொகுசாக ஆடம்பரமாகக் கட்டடங்களைக் கட்டியுள்ளனர். மக்கள் அடர்த்தியாக வாழ்ந்த இடங்களிலேயே அப்படியான கட்டடங்கள் இருக்கின்றன. அதனை அவர்கள் விடுவிப்பார்கள் என்று சொல்லமுடியாது. எமது காணிகள் விடுவிக்கப்படும் என்ற நம்பிக்கை குறைவாகவே உள்ளது. நாங்கள் போராடியிருக்காவிட்டால், காணிகளுக்குள் ஜென்மத்துக்கும் சென்றிருக்க முடியாது - என்றனர். (த-5-7)



## விபத்தில் சிக்கியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப்.20

மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த முதியவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். பொற்கேணி, சிலாவத்துறை கூவச் சேர்ந்த சுலைமான் அப்துல் சமீது (வயது70) என்பவரே உயிரிழந்தார். இவர் கடந்த 14ஆம் திகதி மன்னார், தாழ்வுப்பாடு வீதியைக் கடக்க முயன்றபோது விபத்துக்குள்ளானார். மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சைகள் பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.

(ற - 103)


## மணமகன் தேவை

வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 02.08.1973 இல் பிறந்த உத்தர நட்சத்திரம் முதலாம் பாதம் சிங்கராசி செவ்வாய்க் குற்றமில்லாத சங்கீத பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் வேண்டும். அரச நிறுவனம், தனியார் நிறுவனம், கடை முதலாளி, பஸ் நடத்துனர் விரும்பத்தக்கவர்கள். (விவாகரத்துப் பெற்றவர். தாரம் இழந்தவர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.

**076 627 5362**



## முகாமையாளர் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல பல்பொருள் அங்காடிக்கு (SUPER MARKET) 28 முதல் 45 வயதுக்குட்பட்ட, நான்கு வருடம் முன் அனுபவமுடைய முகாமையாளர் உடன் தேவை. அனுபவத்துக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். ஆர்வம் உள்ளோர் பின்வரும் முகவரிக்கு சுயவிவரக்கோவையை அனுப்பிவைக்கவும்.

**மனிதவள முகாமையளர்**
**இல.175, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்**

மேலதிக தொடர்புகளுக்கு: 077 477 3481

## வருடாந்தப் பொதுக்கூட்டம் பிற்போடல் பற்றிய அறிவித்தல்

23.04.2017 ஆம் திகதி நடைபெறவிருந்த சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினால் எதிர்வரும் 30.04.2017 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணிக்கு **சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில்** நடைபெற வுள்ளது என்பதை சகல அங்கத்தவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தலைவர்.** செயலாளர்.
**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**

## நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து) கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள்

**காலம் - 2017.04.23 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் - முற்பகல் 10.00 மணி**

| தொ. இல | கிளை இல | கிளையின் பெயர் | கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம். |
|---|---|---|---|
| 01 | 01 | கல்வியங்காடு | ஞானபாஸ்கரோதயசனசமூகநிலையம்,கல்வியங்காடு |
| 02 | 02 | திருநெல்வேலி | திருநெல்வேலிபரமேஸ்வராவித்தியாலயம் |
| 03 | 03 | பொற்பதி | கொக்குவில் நாமகள் வித்தியாலயம் |
| 04 | 04 | நாகபூஷணி | கிளைக்கட்டடம் |
| 05 | 05 | கோண்டாவில் ஸ்ரேசன் | கூட்டுறவுஉணவகம் (கிளைக்கட்டடம் அருகில்) |
| 06 | 06 | அன்னங்கை | கலைவாணிசனசமூகநிலையம் |
| 07 | 07 | மஞ்சத்தடி | கிளைக்கட்டடம் |
| 08 | 08 | கோண்டாவில் மேற்கு | வேதபாராயணசனசமூகநிலையம் |
| 09 | 09 | கொக்குவில் மத்தி | கொக்குவில் இந்துஆரம்பபாடசாலை |
| 10 | 10 | மணியர்காடு | கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதாவித்தியாலயம் |
| 11 | 11 | வேதக்கோவிலடி (அடைக்கலநாயகி) | றோமன் கத்தோலிக்கதமிழ் கலவன் பாடசாலை. ஆனைக்கோட்டை |
| 12 | 12 | கொக்குவில் அரசடி | கொக்குவில் மேற்குசனசமூகநிலையம் |
| 13 | 13 | கொக்குவில் மேற்கு | கிளைக்கட்டடம் |
| 14 | 14 | வண்.வடமேற்கு | கிளைக்கட்டடம் |
| 15 | 15 | இராசபாதை | கம்பன் முன்பள்ளி (யாழ்க்கோனதிரில்) |
| 16 | 16 | கொக்குவில் கிழக்கு | கொக்குவில் இராமகிருஷ்ணாவித்தியாலயம் |
| 17 | 17 | கோண்டாவில் கிழக்கு | அற்புதநர்த்தனவிநாயகர்சனசமூகநிலையம் |
| 18 | 18 | காளிகோவிலடி | காளிகோவில் சனசமூகநிலையம் |
| 19 | 19 | கோண்டாவில் நாரரீயணா | நாராயணாசனசமூகநிலையம் |
| 20 | 20 | கோண்டாவில் வடமத்தி | தில்லையம்பதிசனசமூகநிலையம் |
| 21 | 21 | பரமேஸ்வராச்சந்தி | சிவசக்திசனசமூகநிலையம் |
| 22 | 22 | திருநெல்வேலிச்சந்தி | திருநெல்வேலிபரமேஸ்வராவித்தியாலயம் |
| 23 | 23 | சம்பியன் லேன் | வளர்மதிசனசமூகநிலையம் |
| 24 | 24 | பிரம்படி | பிரம்படிசனசமூகநிலையம் |
| 25 | 25 | முடமாவடி | ஞானவைரவர்சனசமூகநிலையம் |
| 26 | 26 | குமரகோட்டம் | குமரகோட்டம் சனசமூகநிலையம் |
| 27 | 27 | பூம்புகார் | கிளைக்கட்டடம் |

சகலகிளைப் பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் கூட்டஅழைப்பிதழ்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிளைப் பொர்துச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்க தகைமையுடைய அழைப்பிதழ்கள் கிடைக்கப் பெறாதவர்களும் இவ் அறிவித்தலை பொது அறிவித்தலாக ஏற்று கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்.**
**ஆடியபாதம் வீதி,** **செயலாளர்.**
**திருநெல்வேலி**
**0212222143**

**50 வருட காலமாக யாழ் குடாநாட்டு மக்களின் நன்மதிப்பைபெற்ற உங்கள் அபிமான**

# மைதிலி நகைமாடம் இன்

## தங்கத்திருநாளாம் அக்ஷய திருதியை கொண்டாட்டம்






இம்மாதம் (29.04.2017) 29 ஆம் திகதி வரை எம்மிடம் நகை வாங்கும் அனைத்து வாடிக்கையாளர்களின் சிட்டைகளும், குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு விசேட பரிசுகள் காத்திருக்கின்றன.

**முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகள்**
**தங்க நாணயங்கள், மேலும் 10 ஆறுதல் பரிசுகள்**

**அன்றைய தினத்துக்கான (28,29 ஆம் திகதி) விசேட சலுகைகள்**

- அதி நவீன டிசைனுக்கேற்ப நம்ப முடியாத விலைக் கழிவுகள் வழங்கப்படும்.
- பழைய நகைகளைக் கொடுத்து நகை வாங்குவோருக்கு அன்றைய பவுண் விலைக்கே எடுக்கப்படும்.
- குறிப்பிட்ட நகைகள் தங்க விலைக்கே சேதாரம் இல்லாமல் வழங்கப்படும்.
- நகைகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் அதி விசேட பரிசு காத்திருக்கின்றது.
- 02 பவுணுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு பவுண் காசு அன்பளிப்பாக வழங்கப்படும்.

**காலை 8.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை கடை திறந்திருக்கும்**



### அக்ஷய திருதியை

**அர்த்துமுள்ள அக்ஷய திருதியில் பொன், பொருள் வாங்கினால் செல்வம் பெருகும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.**

செல்வத்துக்கு அதிபதியான குபேரன் நான் இழந்த சங்க நிதி, பதும நிதிகளை பெற்றது அக்ஷய திருதியை நாளில் தான். பாண்ட வர்கள் வன வாசத்தின் போது சூரியனிடம் இருந்து அள்ள அள்ள குறையாத அட்சய பாத்திரம் பெற்றது இந்த நாளில் தான். அதே போல் மணிமேகலையும் இந்த நாளில் தான் அக்ஷய பாத்திரம் பெற்றுள்ளார். ஆம் உங்கள் சௌபாக்கியம் குறையாத வாழ்வின் அதிர்ஸ்டம் பெருகிட தூய தங்க ஆபரணங்களை உங்கள் ஒவ் வொருவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லத் தவறாதீர்கள்.

**89V கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.** **T.P: 021 222 7902**

# மோ.சைக்கிள் செலுத்துகையில் பின்னிருக்கையையும் கவனியுங்கள்!

யாழ்ப்பாணம், ஏப்.20
நண்பியுடன் மோட்டார் சைக்கிளில் பின்னிருந்து பயணித்தவர் விழுந்து காயமடைந்தார். அவர் விழுந்ததை அறியாத நண்பி மோட்டார் சைக்கிளில் தொடர்ந்து பயணித்தார். அவரை துரத்திச் சென்று தகவல் தெரிவித்த சம்பவம் திருநெல்வேலிச் சந்தியில் நேற்றுக் காலை நடந்துள்ளது.

இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் பயிலும் அந்தப் பெண் நண்பியுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்தார். திருநெல்வேலிச் சந்தியில் சமிக்ஞைக்காக மோட்டார் சைக்கிளை நிறுத்திப் புறப்பட்டார். அப்போது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று பின்னிருக்கையில் இருந்த நண்பியை மோதியது. அவர் கீழே விழுந்தார். மோதிய மோட்டார் சைக்கிளும் நிற்காது சென்றது.

நண்பி விழுந்ததை அறியாதவர் மோட்டார் சைக்கிள் பயணத்தைத் தொடர்ந்தார். அந்தப் பகுதியில் நின்றிருந்த ஒருவர் அவரைத் துரத்திச் சென்று சம்பவத்தைக் கூறியுள்ளார்.

அப்போது தான் அவர் பின்னிருக்கையில் இருந்த நண்பியைத் தேடியுள்ளார். சம்பவ இடத்துக்கு அவர் திரும்பிச் சென்றார்.

காயப்பட்ட நண்பியை அதுவரை யாரும் வைத்தியசாலையில் சேர்க்க முன்வரவில்லை என்று கூறப்படுகின்றது. பின்னர் காயமடைந்தவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற - 12)


## கண்ணீர் அஞ்சலி



எமது வாடிக்கையாளராகிய
**திருமதி சிவபாலாம்பிகை பரமசிவம்பிள்ளை**
(பொன்னாவளை, களபூமி, காரைநகர்)
அவர்கள் 16.04.2017 காலமானதையிட்டு மன வருத்தத்துடன் அன்னாரின் மறைவினாற் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கலைவாணி நகைமாளிகை**
**உரிமையாளர், ஊழியர்கள்.**
**235, 111B கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலும்



**அமரர் செல்லையா ரவிதாஸ்**

பிறப்பு
24.04.1974

இறப்பு
21.03.2017

கடந்த 21.03.2017 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் செல்லையா ரவிதாஸ் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் நேரிலும் தொலைபேசியிலும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (20.04.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அயிட்டியப்புலம்,**
**கொற்றாவத்தை.**
**குடும்பத்தினர்.**

## அந்தியேட்டி அழைப்பு



கடந்த 10.03.2017 வெள்ளிக்கிழமை
சிவபதம் எய்திய எமது குடும்பத்தலைவி

**அமரர்**
**சர்மிளா விஜயரூபன்**


அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (21.04.2017) வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியகிரியைகள் 23.04.2017 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**புளியங்கூடல் தெற்கு,**
**ஊர்காவற்றுறை.**
**வே.கந்தலிங்கம்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### முடியப்பு அருளப்பு

(செயலாளர் - ஊறணி புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்)



**மண்ணில்** **10.07.1945**
**விண்ணில்** **18.04.2017**

ஊறணி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் சீந்திப்பந்தல், இளவாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முடியப்பு அருளப்பு 18.04.2017 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முடியப்பு - திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஜோன்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் றஞ்சித மலரின் அன்புக் கணவரும் அஜந்தா, சுஜந்தா காலஞ்சென்ற அனோஜா மற்றும் வினோஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கொலின் (ஜேர்மனி), மில்ரன், நிக்சன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் அன்ரன், இன்பராணி ஆகியோரின் சகோதர னும் மார்க்ஸ், மெலினா, செலினா, மெலிசா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க நிகழ்வுகளுக்காக இன்று (20.04.2017) வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து புகழுடல் எடுத்துச் செல்லப்பட்டு பி.ப 3.00 மணியளவில் ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப் பலியுடன் ஊறணி புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சீந்திப்பந்தல்,**
**இளவாலை.**
**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### பாலசிங்கம் ஜோஜ்ரட்ணகுமார்

2ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் மருதடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் ஜோஜ்ரட்ணகுமார் நேற்று முன்தினம் (18.04.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் ரோசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பூரணம் தம்பதியரின் மருமகனும், வசந்த குமாரியின் அன்புக் கணவரும், ராஜ்குமார் (முகாமையாளர் Litrogas Lanka Limited) மடோனா, ரவிக்குமார் (சுவிஸ்), மனோக்குமார் (ஆசிரியர் கல்முனை பற்றிமா கல்லூரி) ஆகியோரின் தந்தையும், செல்வதி, குலச்செல்வன் (ஆஸ்தி ரேலியா), சிலோஜினி (Ds, Office, திருக்கோயில்) ஆகியோரின் அன்பு மாமனும், பிருந்தகி ஜோசுவா, வெனி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (20.04.2017) வியாழக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுக்கப்பட்டு புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலியுடன் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**9, மருதடிலேன்,**
**நல்லூர்.**
**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## விஸ்வநாதன் குணசேகரன்



**பிறப்பு** **28.04.1950**
**இறப்பு** **18.04.2017**

சரசாலை மத்தி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வநாதன் குணசேகரன் 18.04.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சுஜீவன்(லண்டன்), கிரிதரன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராதா (லண்டன்), சுவந்தா (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் லக்ஷன், லதுஷா(லண்டன்), டினுஜன், யதுஷன் (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான விஸ்வநாதன் (ஓய்வு நிலை அதிபர்) - பர்வதபத்தினி தம்பதி களின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர் களான அருளம்பலம் - நாகம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்றவர்களான தம்பையா (ஓய்வுநிலை லிகிதர்), இராசையா (ஓய்வு நிலை ஆசிரியர்) மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் கலாவாணி (அமெரிக்கா), ஜெகராஜசேகரன்(கனடா), கலாராணி, யோகானந்தன்(பிரான்ஸ்), தயானந்தன் (கனடா), சிவகௌரி (ஆசிரியர் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), ஜெயகௌரி, ஞானகௌரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சயந்தவி, பபிஸனன், மாதங்கி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கனகரத்தினம், நடராஜா, ஜெயலக்சுமி, பொன்னம்மா, காமாட்சி காலஞ்சென்ற சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2017) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பருத்தித்துறை வீதி,**
**நீர்வேலி வடக்கு, நீர்வேலி.**
**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# பாடுகளின் நில அளவை மேற்கொண்டமை தவறு

*கொக்கிளாய் மீனவர்கள் குற்றச்சாட்டு*

முல்லைத்தீவு, ஏப்.20

எமது பாடுகளின் ஆரம்ப இடத்தை நாம் அனைவரும் சரியாக அடையாளம் காட்டினோம். நாம் அடையாளப்படுத்தியதன் அடிப்படையில் நில அளவை மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறு கொக்கிளாய் கிழக்குக் கிராம கரைவலைப்பாட்டு உரிமையாளர்களும் கொக்கிளாய் சென்ற் அன்ரனீஸ் கடற்றொழிலாளர் சங்கத்தினரும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக நில அளவைத் திணைக்களத்துக்கும், முல்லைத்தீவுநீதிமன்றுக்கும் அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

அதில் உள்ளதாவது:

எமது துறையையும் கரைவலைப் பாடுகளின் நிலத்தை நில அளவை செய்தல் தொடர்பாக நீதிவான் நீதிமன்றம் முல்லைத்தீ வின் 17843 இலக்க வழக்கின் 03.04.2017 ஆம் திகதியின் கட்டளையின் அடிப்படையில் பிரதேச செயலாளரின் வேண்டுகோளுக்கு இணங்க எமது ஏனைய தொழிலாளர் குடும்பங்களும் 18.04.2017 ஆம் திகதி நடைபெற்ற நில அளவை நடவடிக்கையின் போது எமது பாடுகளின் ஆரம்ப இடத்தை ஒன்றாக இணைந்து சரியாக அடையாளம் காட்டினோம்.

எம்மால் அடையாளம் காட்டியதன் அடிப்படையில் நில அளவை மேற்கொள்ளப்படவில்லை. எமக்கென பிரதேச செயலரால் கொடுக்கப்பட்ட இறங்குதுறைப் பிரதேசத்தில் எமது அனுமதியின்றி அத்துமீறி நுழைந்து அதனையும் அளந்தனர். இந்தப் பிரதேசத்தில் 1984.12.04 அன்று இடப்பெயர்வின் முன்னர் நாம் குடிசைகளும், வாடிகளும் அமைத்து வாழ்ந்து கட்டுமரங்கள் வைத்துத் தொழில் செய்தோம்.

1990 ஆம் ஆண்டு குடியமர்ந்து அதே இடத்தில் தொழில் செய்தோம். 2012 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்த எமக்கு மீளவும் இந்த இறங்கு துறையை நீரியல் வளத் திணைக்களமே தந்தது. ஆனால் இந்த இடங்களையும் நீரியல் திணைக்களம் தற்போது கரைவலைப் பிரதேசம் என்று பொய் கூறி பெரும்பான்மை இனத்தவருக்குச் சார்பாக நிற்கின்றது.

இடப்பெயர்வின் முன் இவை எங்களது தொழில் பிரதேசங்கள். எமக்கே எல்லைகள் தெரியும். நில அளவைத் திணைக்களத்தால் ஏற்கனவே அளக்கப்பட்டு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட வரைபடம் சரியானது. அதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். பிரதேச செயலகத்தின் அதிகாரிகளோடு நீரியல் திணைக்களத்தினர் ஒத்துழைக்கவில்லை. கொழும்பிலிருந்து வந்த நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளுக்கு எமது பிரதேச எல்லைகள் எவ்வாறு தெரியும்? அவர்கள் புதிதாகக் காட்டிய எல்லைகளை வைத்தே இப்போது அளவீடு செய்யப்பட்டன. பிரதேச செயலகத்தின் அதிகாரிகளது பிரசன்னமின்றி அது அளக்கப்பட்டது. எமது விருப்பமின்றி அளக்கப்பட்ட அளவீடுகளை நாம் எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதனையும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அளவீடு நீதிமன்ற பணிப்புக்கமைய பிரதேச செயலகத்தின் பிரசன்னமின்றி ஒருசாரப்பட அளக்கப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்றுள்ளது. (ற-21,101)

# கல்வி நிலையில் மாற்றம் ஏற்படுத்த ஆசிரியர்களிலும் மாற்றங்கள் தேவை

*மாகாணக் கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், ஏப்.20

மாகாணத்தின் கல்வி நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டுமானால் அது அதிகாரிகளால் மட்டும் முடியாது. ஆரம்ப ஆசிரியர்கள் தொடக்கம் மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் மாகாண கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார்.

கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எங்கு பார்த்தாலும் முன்னிருந்த கல்வி நிலை இப்போது இல்லை என்றும், முன்பு இருந்த ஆசிரியர்கள் போன்று இப்போது இல்லை என்றும் கூறுகின்ற னர். அது சரியா? தவறா? எனத் தெரியாது. ஆனால் மாற்றம் வேண்டும்.

சில ஆசிரியர்கள் தரம் ஒன்றிலேயே சில மாணவர்கள் தொடர்பில் தீர்மானம் எடுத்துத் தள்ளி வைக்கிறார்கள். இது பெரும் தவறு. இந்த மனப்பாங்கை மாற்ற வேண்டும்.

சில ஆசிரியர்கள் தமக்கான பணியை நிறை வேற்றமாட்டார்கள். கற்பித்தல் பணியில் ஈடுபாடு காட்டாதவர்கள், தமது பணியே தெரியாத பலர் இன்று ஒவ்வொரு அமைப்புக்களின் பின்னால் நின்று மனித உரிமை ஆணைக்குழு வரை செல்லும் நிலமைகளும் உண்டு.

அவற்றை முதன்மைப் படுத்திச் செய்தியிடும் வியாபாரத்தை நோக்கமாகக் கொண்டு செயற்படும் பத்திரிகைகளும் உண்டு - என்றார். (ற-101)

> “ முன்னிருந்த கல்வி நிலை இப்போது இல்லை என்றும், முன்பு இருந்த ஆசிரியர்கள் போன்று இப்போது இல்லை என்றும் கூறுகின்றனர். அது சரியா?

# வலி. கிழக்குப் பகுதி வீதிகளுக்கு 1 மில்லியன் ரூபா செலவில் மின்விளக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.20

வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் ஒரு மில்லியன் ரூபா செலவில் வீதிகளுக்கு மின் விளக்குகள் அமைக்கப்படவுள்ளன.

சபையின் இந்த ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக மின் விளக்குகள் அமைப்பதற்காக ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பிரதான வீதிகள், ஒழுங்கைகள் போன்றவற்றுக்கு இந்த வீதி விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாகச் சபையின் செயலாளர் தெரிவித்தார். (து-17)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா செல்வவிநாயகமூர்த்தி



கேசரிவீதி,தையிட்டியைப்பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா செல்வவிநாயகமூர்த்தி 18.04.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்வ்விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சேதுப்பிள்ளை, செல்லையா, முருகுப்பிள்ளை, சின்னத் துரை மற்றும் தங்கப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருள்மோகன், வசந்தமோகன், ரதமோகன், யசோதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவலோகினி, பாலசரோஜா, விஜயா, நந்தகோபால் ஆகியோரின் அன்பு மாமியாரும், மயூரன், மதுஷா, வைஷ்ணவி,வேணுஜன், ரக்ஷா, ரிஷி,நேமிகா,லக்சிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2017) வியாழக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் (கந்தரோடை) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்பொலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# நேர்முகத் தேர்வு

மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இளைஞர், யுவதி களுக்குத் தொழிற்கல்வி மற்றும் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வு இன்று வியாழக் கிழமை காலை9மணிதொடக்கம் மாலை 4மணி வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நேர்முகத்தேர்வின்போது தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள், சுயவிவரக் கோவை என்பன சமர்ப்பிக்கப்படவேண்டும். இதற்கான மேலதிக தகவல்களுக்கு மனிதவள அபிவிருத்திப் பிரிவு, பிரதேச செயலகம் தென்மராட்சி, தொலைபேசி இலக்கம் 0212270011 என்பவற்றுடன் தொடர்பு கொள்ளலாம். (து)

# கூட்டுறவுக் கிராமிய வங்கி விரைவில் ஆரம்பிக்கப்படும்

*சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் நடவடிக்கை*

யாழ்ப்பாணம்,ஏப்.20

யாழ்.மாவட்டச் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கிராமிய வங்கி அமைப்பை ஆரம்பித்து வைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

சமாசத்தால் உருவாக்கப்படும் இந்தக் கூட்டுறவுக் கிராமிய வங்கிப் பிரிவில் கூடுதலாக அங்கத்தவர்களை இணைத்துச் சேமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வங்கிச் சேவை மூலம் அங்கத்தவர்கள், வாடிக்கையாளர்கள் நன்மையடையக் கூடிய வகையில் கடன் திட்டங்களும் அறிமுகப் படுத்தப்படும்.

தற்போது சமாசத்துக்குத் தனியான கிராமிய வங்கியை விரைவாக ஆரம்பித்து வைப்பதற்கும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகச் சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தெரிவித்தார்.

இந்த வங்கியை மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் உருவாக்கி அதற்காக உபவிதியைத் தயாரிக்கும் பணியும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (து-17)

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் தியாகராசா ஆன் பிரான்சிஸ்கா புஸ்பரத்தினம்

மண்ணில் 03.03.1944 — விண்ணில் 20.04.2011

அன்பாலும் பணிவாலும் எல்லோரையும் அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே அம்மா
ஆண்டுகள் ஆறு போனது அம்மா ஆறவில்லை எம் துயரம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் அம்மா!
உங்களை எம் உள்ளத்தில் வைத்து பூசிப்போம்
எத்தனை ஜென்மம் எடுத்தாலும் அம்மா
எமக்கு தாயாக நீங்கள் தான் வரவேண்டும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இல.47, பென்ரிக் கோஸ்ரல் லேன்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# ஆன்மிக அருளுரை

யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை ஆன்மிக அருளுரை நடத்தப்பட்டு வருகிறது.

இதில் நாளை வெள்ளிக்கிழமை, “ஆசையை நீறாக்கிய ஞான அக்னி ” எனும் தலைப்பில் ஆன்மிக அருளுரை இடம்பெறும். (து)

# கல்வயலில் புத்தாண்டு நிகழ்வு

தென்மராட்சி, ஏப்.20

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய அறநெறி பாடசாலையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஏவிளம்பி சித்திரைப் புத்தாண்டு நிகழ்வு ஆலய திருமண மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளுக்குத் தலைமை விருந்தினராக ஓய்வுநிலை மருத்துவர் சு.சி. அருளானந்தம் கலந்துகொண்டார்.

நிகழ்வில் அறநெறி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் கௌரவிப்பும் இடம்பெற்றன. (து-9)

# படுக்கை நோயாளிகளை பராமரிக்க ரூபா 66 மில்.

## கொழும்பு அரசு இணக்கம் என வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.20

வடக்கு மாகாணத்தில் உள்ள படுக்கை நோயாளிகளின் இரு முக்கிய பராமரிப்புப் பணிகளுக்காக 66 மில்லியன் ரூபா வழங்க கொழும்பு சுகாதார அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அண்மையில் வடக்கு மாகாணம் வந்த கொழும்பு அமைச்சரிடம் இது தொடர்பாகக் கோரிக்கை விடுக்கப்பட்டது. நேரில்சில இடங்களுக்கு அழைத்துச் சென்று காண்பித்தோம். அதையடுத்து அவர் நிதி வழங்க இணக்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் மட்டும் போர், விபத்து என்பவற்றால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட படுக்கை நோயாளர்கள் உள்ளனர். அவர்களுக்கு மாதாந்தம் வீடுகளுக்குச் சென்று வைத்திய வசதிகளையும், உள மருத்துவத்தையும் வழங்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம். யாழ். மாவட்டத்திலேயே அதிகமானவர்கள் உள்ளனர். யாழ்ப்பாணத்தின் 15 பிரதேச செயலர் பிரிவுகளில் 3 பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ளோரைப் பராமரிக்கும் பொறுப்பை ஐ.எம்.எச்.ஓ. எனும் நிறுவனம் பொறுப்பெடுத்துள்ளது.

கிளிநொச்சியில் உள்ள 186 பேரை மாதம் ஒருமுறை சென்று பார்வையிட்டு பராமரிக்கும் அணியின் செலவை கனடாவைச் சேர்ந்த அருள்குமரன் என்பவர் பொறுப்பெடுத்துள்ளார். முல்லைத்தீவில் உள்ள 150 பேரை மாதாந்தம் பராமரிக்கும் செலவை கனேடிய தமிழ்த் தேசியப் பேரவை எனும் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் யாழ்ப்பாணத்தின் 12 பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ளவர்களைப் பராமரிக்கும் செலவுகளை பொறுப்பேற்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆண்டுக்கு 6 மில்லியன் ரூபா தேவையாகவுள்ளது. அந்த நிதியை விடுவிக்க கொழும்பு அமைச்சர் இணக்கம் தெரிவித்தார். பாதிப்புள்ளானவர்களுக்கு விசேட கழிப்பறை வசதிகள் தேவை, அவற்றை அமைப்பதற்கு 60 மில்லியன் ரூபா தேவை என்பதையும் சுட்டிக்காட்டினோம். அந்த நிதியையும் உடன் வழங்க கொழும்பு சுகாதார அமைச்சர் இணக்கம் தெரிவித்தார். இவை தொடர்பான பணிகள் அடுத்த மாதம் முதல் ஆரம்பமாகும் - என்றார். (ற-101)

## நயினாதீவுக்கு கடலின் ஊடாக மின்சாரம்

யாழ்ப்பாணம், ஏப்.20

யாழ்ப்பாண நயினாதீவுக்கு கடலுக்கு ஊடாக மின்சாரம் வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மக்களின் மின்சாரப் பிரச்சினை தொடர்பாக ஆராயப்பட்டது.

"நயினாதீவுக்கு கடல் ஊடாக மின்சாரம் வழங்க திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவை விரைவில் ஆராயப்பட்டு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்" என்று மின்சார சபை அதிகாரி அதன்போது தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலக பிரிவில் 29 பேருக்கு மின்சாரம் வழங்க வேண்டிய தேவை காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

"அவர்களுக்கு மின்சாரம் வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். யாழ்ப்பாணத்தில் கடற்கரைப் பிரதேசங்களுக்கு மின்சார வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை என்பது உண்மை. போதிய நிதி இல்லை. இங்குள்ள பிரதிநிதிகள் அதற்குரிய நிதியை வழங்கினால் நாங்கள் நிச்சயமாக அதனைச் செய்து முடிப்போம்" என்று மின்சார சபை அதிகாரி தெரிவித்தார். (ற-8)

## பதில் கூறவேண்டிய அரசு மௌனம் சாதிக்கின்றது

### காணாமல்ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் குமுறல்

முல்லைத்தீவு, ஏப்.20

"எமக்குப் பதில் சொல்ல வேண்டிய அரசு மௌனமாக இருக்கின்றது. எமது பிள்ளைகள் எமக்கு வேண்டும்."

இவ்வாறு தெரிவித்தனர் முல்லைத்தீவில் தொடர் போராட்டம் நடத்திவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முன்னெடுத்து வரும் தொடர் போராட்டம் நேற்று 43 நாளாகவும் தொடர்ந்தது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி அவர்களின் உறவினர் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக தொடர் அமைதிப் போராட்டம் நடத்துகின்றனர்.

"எம் பிள்ளைகளை இராணுவத்திடம் ஒப்படைத்துவிட்டு இன்று வருவார்கள், நாளை வருவார்கள் என்று காத்திருந்தோம்.

எங்கள் பிள்ளைகள் வரவே இல்லை. எமக்குப் பதில் சொல்ல வேண்டிய அரசு மௌனமாக இருக்கின்றது. எமது பிள்ளைகள் எமக்கு வேண்டும்." என்று போராட்டத்தில் ஈடுபடும் உறவினர்கள் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் போராட்டங்கள் தொடர்ச்சியாக நடத்தப்படுகின்றன.

கிளிநொச்சியில் 60ஆவது நாளாகவும், வவுனியாவில் 55ஆவது நாளாகவும், முல்லைத்தீவில் 41ஆவது நாளாகவும், யாழ்ப்பாணம் மருதங்கேணியில் 36ஆவது நாளாகவும், திருகோணமலையில் 46 ஆவது நாளாகவும் போராட்டங்கள் நேற்றும் தொடர்ந்தன. (ற-7)

## வடக்கு மாகாணப் புத்தாண்டு கொண்டாட்டம் வவுனியாவில்

வவுனியா, ஏப்.20

வடக்கு மாகாணப் புத்தாண்டுக் கொண்டாட்ட நிகழ்வு எதிர்வரும் 23ஆம் திகதி வவுனியாவில் நடத்தப்படவுள்ளது.

வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ள நிகழ்வுகளுக்கு வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அனுசரணை வழங்க, வவுனியா மாவட்டச் செயலகம் ஒழுங்கமைத்துள்ளது.

காலை 6 மணிக்கு வவுனியா நகர சபை மைதானத்தில் இருந்து நெடுந்தூர சைக்கிளோட்டம், மரதன் ஓட்டம் என்பன ஆரம்பிக்கும். வவுனியா மாவட்ட செயலர் எம்.பி.ஆர்.புஸ்பகுமார சைக்கிள் ஓட்டப் போட்டியையும், உதவி மாவட்ட செயலர் நா.கமலதாசன் மரதன் ஓட்டத்தையும் ஆரம்பிப்பர். மு.ப.9 மணிக்கு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தலைமையில் ஏனைய விளையாட்டுப் போட்டிகளும், கலை நிகழ்வுகளும் ஆரம்பமாகும்.

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிசாத் பதியுதீன், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், காதர் மஸ்தான், டாக்டர் சி.சிவமோகன், திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் டாக்டர் ப.சத்தியலிங்கம் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், இ.இந்திரராஜா, தர்மபால செனிவிரட்ண, மா.தியாகராஜா, வி.ஜெயதிலக்க, செ. மயூரன் ஆகியோரும் கலந்து கொள்வர். சிறுவர்களும் பங்குபற்றக்கூடிய இனிப்பு பொறுக்குதல், யானைக்கு கண் வைத்தல், கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல், தலையனை சண்டை, சமநிலை ஓட்டம், கிறீஸ் மரம் ஏறுதல் போன்ற போட்டிகளும் நடைபெறவுள்ளன. அவற்றில் வெற்றி பெறுபவர்களுக்குப் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. என்று வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்னம் தெரிவித்தார். (ற-402)

## சுங்கவரித் திணைக்களக் காணிக்குள் இளைஞர்கள் இரவில் அட்டகாசம்

யாழ்ப்பாணம், ஏப்.20

சுங்கவரித் திணைக்களத்தின் அலுவலகத்துக்குச் சொந்தமான குருநகர் கடற்கரை வீதியில் உள்ள காணியின் கம்பி வேலிகள் பிரிக்கப்பட்டு இளைஞர்கள் அட்டகாசம் செய்துள்ளதுடன், மதுப் போத்தல்களையும் வீசிச் சென்றுள்ளனர் என்று யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணியின் பாதுகாப்புக் கம்பி வேலியைப் பிரித்து உட்செல்லும் இளைஞர்கள் அங்கு மது அருந்துகின்றனர் என்றும், மதுப் போத்தல்களை வீசி விட்டுச் செல்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது. இது தொடர்ச்சியாக நடந்து வந்த நிலையில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று யாழ். பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி1)

**காணி விற்பனைக்கு**
திருநெல்வேலி மருத்துவ பீடத்துக்கு முன் உள்ள கருவேற்புலம் வீதியில் 1 ¾ பரப்புக் காணி விற்பனைக்கண்டு.
076 697 2287

**பணிப்பெண் தேவை**
யாழ் மாநகரசபைக்குட்பட்ட வீட்டிற்கு வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 220 8284

**தேவை**
Shuttering வேலை, Carpenters பார்பெண்டர்கள். மேசன்மார் மற்றும் உழைப்பாளிகள் கொழும்புக்கு தேவைப்படுகிறது.
077 863 2183/ 077 343 1269

**விற்பனைக்கு உண்டு**
NPPP xxxx இலக்கத்தினைக் கொண்ட டிமோபட்டா விற்பனைக்கு உண்டு.
077 318 4712

**மணமகள் தேவை**
1990 ஆம் ஆண்டு பிறந்த கும்பராசியுடைய கிறிஸ்தவ மணமகனுக்கு படித்த மணமகள் தேவை
077 784 3509

**வீட்டுப்பணிப்பெண் தேவை**
சாவகச்சேரியில் உள்ள வீடொன்றில் பணிபுரிய பணிப்பெண் ஒருவர் தேவை.
077 481 5025, 077 424 9947

**வீடு விலைக்குத் தேவை**
யாழ்ப்பாணம், கொக்குவில், கோண்டாவில், உரும்பிராய், K.K.S. வீதி, பலாலி வீதி, நல்ல சுற்றாடல் 3 பரப்பு, 4 அறை - விலை 50 - 60 இலட்சம் இடத்துக்கு ஏற்றபடி விலைதரப்படும் பிரதான வீதியில் இருந்து 300 யார் விரும்பத்தக்கது தரகர்களும் தொடர்புகொள்ளலாம்.
தொ.பே. 077 247 4740

**பணியாளர்கள் தேவை**
கிளிநொச்சி நகரில் இயங்கிவரும் எமது New Sun Ceramic (pvt)Ltd நிறுவனமானது புதிய கிளையினை கிளிநொச்சி நகரில் ஆரம்பிக்கவுள்ளது. எனவே நிறுவனத்தில் பணியாற்ற தகுதியான ஆண் / பெண் இருபாலாரிடமும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கிளிநொச்சி நகருக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
கிளிநொச்சி பழைய வைத்தியசாலைக்கு முன்பாக
021 228 3872, 071 792 3721

**உடனடி வேலைவாய்ப்பு**
★ **மலேசியா**
டண்கில் சிகரட் கொம்பனி (30 ஆண்கள்)
RM 1500 SR 49,500+OT உணவு, தங்குமிட மருத்துவ வசதிகள் உண்டு (வயது 18-40)
★ **புறோடோவா கார் கம்பனி** (லேபர் ஆண்கள் 20)
RM 1800 SR 59,400 உணவு தங்குமிட வசதி மருத்துவ வசதி உண்டு (வயது 18-40) +OT
★ **சவுதி - ஹோட்டல்** (லேபர்) 15 ஆண்கள்
RL 1100 SR 44,000+OT உணவு, தங்குமிட வசதி, மருத்துவ வசதி உண்டு +OT
★ **கட்டார்** - றைலர் (30 ஆண்கள்)
RS 1800 SR 72,000+OT உணவு தங்குமிட வசதி மருத்துவ வசதி உண்டு
NEW GULF LANKAN MANPOWER
136, Dam Street, Colombo-12.
Phone No: 077 843 2212 / 077 044 7386
e-mail:asianlanka27@gmail.com

# எங்கள் காணிகளை வேறு யார்யாருக்கோ கொடுத்துவிட்டார்கள்

## மூளாய் குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த மக்களின் ஒரு பகுதியினர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப்.20

பொன்னாலை, மூளாய் குடியேற்றத் திட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர்கள் புறக்கணிக்கப்பட்டு அந்த மக்களுக்கு அரசு வழங்கிய காணிகளை வேறு நபர்களுக்கு வழங்கி அவர்கள் வீட்டுத் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். சரியான முறையில் அறிவித்தல்களை வழங்காது அந்தக் காணிகள் தாரைவார்க்கப்பட்டுள்ளன" என்று அரச அதிகாரிகளுக்கு எதிராகக் குற்றச்சாட்டு எழுப்பப்படுகிறது. எமது காணிகளை எம்மிடம் ஒப்படைக்க வேண்டும்" என்று பாதிக்கப்பட்ட மக்கள் கோருகின்றனர்.

"வழங்கப்பட்ட காணிகளை மீளப் பெற்று வழங்க முடியாது. அந்தக் காணிகளுக்கு உரித்துடையவர்கள் என்று கூறுவோருக்கு வேறு இடங்களில் காணிகள் வழங்கப்படும்" என்று பிரதேசசெயலர் கூறுகின்றார்.

பொன்னாலை, மூளாய் குடியேற்றத் திட்டம் 1980ஆம் ஆண்டளவில் உருவானது. 1980ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரை அந்தக் காணிகளில் மக்கள் வாழ்ந்தனர். 1990ஆம் ஆண்டு பிற்பகுதியில் ஏற்பட்ட போர்ச் சூழலால் அவர்கள் இடம்பெயர்ந்தனர். அவர்களது வீடுகளும் சேதமடைந்தன.

பின்னர் சமதானம் நிலவிய காலத்தில் அவர்களுக்கு அரசால் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. எனினும் போராலும், இராணுவ ஆக்கிரமிப்பாலும் அந்தப் பகுதி மக்கள் மீண்டும் இடம்பெயர்ந்தனர்.

தற்போது அந்தக் காணிகளுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படவுள்ளன என்று பிரதேச செயலகத்தால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் காணி உரித்தானிகளான தமக்குத் தராமல் வேறுநபர்களுக்கு தமது காணிகள் தாரை வார்க்கப்பட்டுள்ளன என்று மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

"எமக்கு சரியான அறிவித்தல்கள் வழங்கப்படவில்லை. இவை அரசால் எமக்கு வழங்கப்பட்ட காணிகள். இங்குஎந்தவசதிகளும்இல்லை என்பதாலேயே நாம் வேறு இடங்களில் வசிக்கின்றோம். வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தால் இங்கு வசிப்பதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. நாம் உயிருடன் இருக்கும்போது, எமது சந்ததிகள் உயிருடன் இருக்கும்போது எமது காணிகளை வேறு நபர்களுக்கு எவ்வாறு வழங்க முடியும்? திட்டமிட்டே இவ்வாறு செயற்பட்டுள்ளனர். இது தொடர்பாகக் கிராம அலுவலர் எமக்கு அறியத் தரவில்லை. தற்போது நாம் இது தொடர்பாக அறிந்து அவரிடம் கேட்டால் காணிகள் வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று கூறுகின்றார். உயர் அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது காணிகளை எமக்கு திருப்பி வழங்க வேண்டும் இல்லையேல் போராட்டத்தில் குதிப்போம்" என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

"எமது கிராமத்தில் காணி, வீட்டு வசதி இல்லாதவர்களையே அந்தக் காணிகளில் குடியேற்றியிருக்க வேண்டும். இங்கு அவ்வாறு பலர் இருக்கின்றனர். ஆனால் எமது கிராம அலுவலர் வேறு கிராமத்தில் உள்ளவர்களுக்கு அந்தக் காணிகளை வழங்கியுள்ளார். இது அவர் தன்னிச்சையாக முடிவெடுத்துச் செயற்படுத்துவதையே உணர்த்துகின்றது. பிரதேச செயலாளர், மாவட்ட அதிகாரிகள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்க்கமான முடிவை எட்ட வேண்டும். அப்போதுதான் இந்த வீட்டுத் திட்டம் வெற்றிபெறும். இல்லாவிட்டால் வீடுகளைக் கட்டி அத னைப் பூட்டி விட்டுச் செல்லும்நிலையே காணப்படும்." என்று தெரிவித்தனர் அந்தப் பகுதியில் சொந்தக் காணிகளில் வீட்டுத் திட்டம் பெற்ற மக்கள்.

"வீட்டுத் திட்டம், காணி வழங்கலில் எந்தப் பக்கச் சார்பும் நடக்கவில்லை. அந்தக் காணிகள் தற்போதும் அரச காணிகளாகவே உள்ளன. மக்களுக்குச் சொந்தமானவை அல்ல. அந்தக் காணிகளில் குடியிருந்தவர்களை வீட்டுத்திட்டத்துக்கு பதிவு செய்யுமாறு கிராம அலுவலர் ஊடாக அறிவித்தேன். பலர் பதிவுகளை மேற்கொண்டனர்.

அவர்களுக்கு அவர்களின் காணிகளில் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படவுள்ளன. பலர் பதிவுகளை மேற்கொள்ளவில்லை. அதனால் காணி இல்லாதவர்களுக்கான தேர்வுகள் இடம்பெற்று புள்ளிகள் அடிப்படையில் அவர்களுக்குக் காணிகள் வழங்கப்பட்டன. தங்களுக்கு அறிவிக்கப்படவில்லை என்று கூறுவோர் வேறு இடங்களில் வீட்டுத் திட்டங்கள் பெறவில்லை என்று உறுதிப்படுத்தினால் பொன்னாலையில் மாற்றுக் காணிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்." என்று சங்கானைப் பிரதேச செயலாளர் சோதிநாதன் தெரிவித்தார். (ந-21)



# மீள்குடியமரும் முஸ்லிம்களுக்கு வசதிகளை ஏற்படுத்தவேண்டும்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஏப்.20**

**வடக்கில் முன்னர் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் மீள்குடியமர்வதில் எந்தத் தடையும் இல்லை. இங்கு வாழ்ந்த முஸ்லிம் மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும்.**

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வு மற்றும் அவர்களுக்கான வீட்டுத் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. அதில்கருத்துத்தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் இங்கிருந்த முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டனர் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. இங்கு வாழ்ந்த அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும். முஸ்லிம்மக்கள் இங்கிருந்து வெளியேறும்போது குறைந்த குடும்ப அங்கத்தவர்களைக் கொண்டிருந்திருப்பார்கள். தற்போது அவர்களில் நிறைய அங்கத்தவர்கள் இருக்கலாம். வீட்டுத் திட்டத்தைப் பெற விண்ணப்பிக்கும் பயனாளியின் பெயரில் வீடு இருக்குமானால் அவருக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

நாம் முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வுக்கு எதிரானவர்கள் அல்ல. கடந்த காலங்கங்களில் இங்கு வசித்த மக்கள் மீள்குடியமர எந்தத் தடையும் இருக்காது என்றார். (ந-8)

# பண்டார வன்னியன் சிலை திறப்பு இன்று

யாழ்ப்பாணம், ஏப்.20

வன்னி மண்ணை ஆண்ட கடைசித் தமிழ் மன்னனான மாவீரன் குலசேகரம் வையிரமுத்து பண்டார வன்னியனின் சிலை கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக இன்று மு.ப. 10 மணிக்குத் திறக்கப்படவுள்ளது. வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தலைமையில் நிகழ்வு நடைபெறும். வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டு சிலையைத் திறப்பார். சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா கலந்து கொள்வார். வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இந்தச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. (ந-101)

# கரையோர படைமுகாம்களால் வலைகளை உலர்த்த முடியா அவலம்

## குருநகர், பாசையூர் மீனவர்கள் சுட்டிக்காட்டு

கடற்கரையோரங்களில் கடற்படையினர் முகாம்கள் அமைத்துள்ளனர். எமது வலைகளை உலர வைக்க முடியாதுள்ளது. வீதியோரங்களிலேயே எமது வலைகளை உலர வைக்கின்றோம்.

இவ்வாறு தெரிவித்தனர் குருநகர், பாசையூர் பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள். யாழ்ப்பாண பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

"வீதிகளில் வலைகளை உலரவிடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அவற்றால் விபத்துக்கள் ஏற்படுகின்றன." என்று வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஆனோல்ட் அதில் குறிப்பிட்டார்.

"வலைகளை வீதிகளில் உலரவிடுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க எமக்கு அதிகாரமில்லை. அது தொடர்பாக அவர்களுக்கு நாம் விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றோம். வலைகள் உலர விடப்பட்ட வீதிக்கு எந்தத் திணைக்களம் பொறுப்பாக இருக்கின்றதோ அந்தத் திணைக்களமே நடவடிக்கை எடுக்க முடியும்." என்று கடற்றொழில் நீரியல் வளத் துறை அதிகாரி குறிப்பிட்டார்.

"பாசையூர், குருநகர் கடற்கரையோரங்களில் கடற்படையினர் முகாம்கள் அமைத்துள்ளனர். கடற்கரையை அண்டிய பகுதிகளில் வலைகளை உலர வைப்பதற்கான இடவசதிகள் இல்லை. அதனாலேயே வீதிகளில் வலைகள் உலர வைக்கப்படுகின்றன." என்று அந்தப் பிரதேசங்களைச் சார்ந்த கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

"கடற்றொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்குமுன்னதாக அவர்களுக்குத்தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது முக்கியமானது. இது தொடர்பாக கடற்கரையோரப் பாதுகாப்புப்பிரிவினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்."என்றுஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்துக்கு தலைமை தாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் குறிப்பிட்டார். (ந-8)




# தொடருந்துக் கடவை காப்பாளர்கள் கவனவீர்ப்பு

## பொலிஸாரால் உயிர் அச்சுறுத்தல் எனத் தெரிவித்து

வவுனியா, ஏப்.20

பொலிஸாரால் உயிர் அச்சுறுத்தல் என்று தெரிவித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தொடருந்துக் கடவைக் காப்பாளர்கள் நேற்று வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர். வவுனியா, சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்துக்கு முன்பாக மு.ப. 10.30 மணியளவில் போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டம் நடத்தியவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு பதிவு செய்தனர்.

தொடருந்துக் கடவைக் காப்பாளர்கள் நிரந்தர நியமனம் வழங்கக் கோரிக் கடந்த 11ஆம் திகதி முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடத்துகின்றனர். இலங்கை முழுவதும் 3 ஆயிரத்து 500 கடவைக் காப்பாளர்களும், வடக்கு மாகாணத்தில் 450 கடவைக் காப்பாளர்களும் பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் 250 ரூபா நாள் வேதனத்துக்குக் கடமையாற்றுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-21)

### லசந்த படுகொலை குறித்து

# முன்னாள் படை அதிகாரிகள் முரணான வாக்குமூலங்கள்

கொழும்பு, ஏப். 20

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பாகக் கூட்டுப்படைகளின் முன்னாள் மூத்த படை அதிகாரிகள் மூவர் முரண்பாடான வாக்குமூலங்களை குற்றப்புல னாய்வுப் பிரிவினரிடம் வழங்கினர் என்று தெரிவிக்கப்ப ட்டது.

கூட்டுப் படைகளின் முன்னாள் தளபதி எயர் சீவ் மார்ஷல் டொனால்ட் பெரேரா, கூட்டுப்படைகளின் தலைமையக நடவடிக்கைகளின் முன்னாள் பணிப்பாளர் மேஜர்ஜெனரல்குமாரஹேரத், கூட்டு நடவடிக்கைக்கான முன்னாள் தளபதி மேஜர் ஜெனரல் மனோ பெரேரா ஆகியோர்குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுமுன்தினம்விசாரணைக்கு அழைக்கப்பட்டனர். அவர்களிடம் நேற்றுமுன்தினம் காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை தனித்தனியே வாக்குமூலம் பெறப்பட்டது.

அத்திட்டியவில் லசந்த விக்கிரமதுங்க 2009ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி கூரிய ஆயுதம் ஒன்றினால் குத்திக் கொலை செய்யப்பட்டார் என்று கூட்டுப் படைகளின் முன்னாள் தளபதி எயர் சீவ் மார்ஷல் டொனால்ட் பெரேரா, தம்மிடம் தெரிவித்தார்என்றுகூட்டுப்படைகளின் தலைமையக நடவடிக்கைகளின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் குமார ஹேரத், குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் கூறினார்.

"லசந்த படுகொலை செய்யப்பட்ட தகவலை கூட்டு நடவடிக்கைத் தளபதியாகவிருந்த மேஜர் ஜெனரல் மனோ பெரேரா தெரிவித்ததும், எயர் சீவ் மார்ஷல் டொனால்ட் பெரேரா, தனது பணியகத்துக்கு வருமாறு தன்னை அழைத்திருந்தார். இதன்போதே, லசந்த விக்கிரமதுங்க கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார் என்று எயர் சீவ் மார்ஷல் டொனால்ட் பெரேரா கூறினார்.

சம்பவம் நடந்தவுடனேயே லசந்த விக்கிரமதுங்க கூரிய ஆயுதம் ஒன்றினால்தான் தாக்கப்பட்டார் என்பது இராணுவத்துக்குத் தெரியும். சம்பவம் தொடர்பாக சிரச ஊடகம் அறிவிப்பதற்கு 20 நிமிடங்கள் முன்னதாகவே, கூட்டுப் படைகளின் தலைமையகம் சம்பவம் பற்றி அறிந்திருந்தது" என்று ஓய்வுநிலை மேஜர் ஜெனரல்குமாரஹேரத் வாக்குமூலத்தில் தெரிவித்தார்.

இதுதொடர்பில் எயர் சீவ் மார்ஷல் டொனால்ட் பெரேரா மற்றும் மேஜர் ஜெனரல் மனோ பெரேரா ஆகியோரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குறுக்கு விசாரணை மேற்கொண்டனர். எனினும் மேஜர் ஜெனரல் குமார ஹேரத் தெரிவித்த தகவலை அவர்கள் நிராகரித்தனர்.

"கொழும்பு நடவடிக்கைத் தளபதியாக இருந்த பிரிகேடியர் அனுர பெரேரா சில வேளைகளில், எயர் சீவ் மார்ஷல் டொனால்ட் பெரேராவுக்கு தொலைபேசி மூலம் அறிவித்திருக்கக் கூடும். கொலை நடந்த இடத்துக்கு நான் செல்லவேயில்லை" என்று மேஜர் ஜெனரல் மனோ பெரேரா வாக்குமூலம் வழங்கினார்.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பாக பொலிஸ் புலனாய்வு அதிகாரி தகவல் பரிமாறியிருந்த போதும், அடுத்த வாரம் நடந்த வாராந்த கூட்டுப்படைகளின் தலைமையக கலந்துரையாடலில் இந்த விடயம் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஆட்சியில் அவரது தலைமையில் தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டம் செவ்வாய்க்கிழமைகளில் கூட்டப்படுவதற்கு முன்னர் கூட்டுப்படைத் தலைமையகத்தில் இந்தக் கூட்டம் நடத்தப்படுவது வழக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## இ.போ.சவில் நிதி கையாடல்; வர்த்தகரின் மறியல் நீடிப்பு

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் இடம்பெற்ற 125 மில்லியன் ரூபாய் மோசடியுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வர்த்தகரின் விளக்கமறியலை எதிர்வரும் 2ஆம் திகதிவரை நீடித்து கொழும்பு நீதிவான் மன்று உத்தரவிட்டது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் இடம்பெற்ற 125 மில்லியன் ரூபாய் மோசடி தொடர்பானவழக்குகொழும்பு முதன்மை நீதிவான் மன்றில் மேலதிக நீதிவான் ஜெயராமன் ரொக்சி முன்னிலையில், நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

முதலாவது சந்தேகநபரான உதிரிப்பாக வழங்குனரான நந்தன பிரியந்தவுக்கு, 2010 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் உதிரிப்பாக விநியோகத்துக்காக முறையான கேள்விப் பத்திரங்கள் வழங்கப்பட்டனவா? என்று வழக்குத் தொடுனர் சார்பில் ஏற்கெனவே கேள்வியெழுப்பப்பட்டிருந்தது. இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரிகளின் கோரிக்கைக்கு அமைய, மூன்று தட வைகளில், முதலாவது சந்தேகநபரால் போலியான ஆவணங்கள் முன்வைக்கப் பட்டன என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குற்றஞ்சாட்டினர்.

அவ்வாறுவழங்கப்பட்டபோலி ஆவணங்களுக்கு ஒப்புதலளித்து, இலங்கை போக்குவரத்துச் சபையின் நிதிப் பிரிவினூடாக பணம் வழங்க 2ஆவது சந்தேக நபரான போக்குவரத்துச் சபையின் முன்னாள் தலைவர் ஷஷி வெலகம உடந்தையாக இருந்துள்ளார் என்று முறைப்பாட்டாளர் சார்பில் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

முதலாவது சந்தேகநபரின் பிணை மனுவில் சிறப்புக் காரணங்கள் இல்லை என்பதால் அதனை மன்று நிராகரித்தது. அவரை எதிர்வரும் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கின் 2ஆவது சந்தேகநபரான போக்குவரத்துச் சபையின் முன்னாள் தலைவர் ஷஷி வெலகம, பிணையில் விடுவிக்கப்ப ட்டுள்ளார். (வ-4)

## எரிகாயங்களுடன் சிகிச்சை பெற்ற தம்பதியினர் நேற்றுச் சாவு

காலி, ஏப். 20

எரிகாயங்களுக்குள்ளாகி சிகிக்சை பெற்றுவந்த கணவனும் மனைவியும் நேற்று உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காலி, அக்மீமன பின்னந்துவ பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

"கடந்த 17 ஆம் திகதி வர்த்தக நிலையம் ஒன்றில் வைத்து கணவனுக்கும் மனைவிக்கும் இடையே



கருத்து முரண்பாடு ஏற்றபட்டது. ஆத்திரமடைந்த கணவன் மனைவி மீது கூரிய கத்தி ஒன்றால் குத்திவிட்டு அவரது உடல் மீது தீ வைத்துள்ளார். அத்துடன், தனது உடலிலும் அவர் தீ மூட்டியுள்ளார்.

எரிகாயங்களுக்குள்ளான இருவரும் காலி கராப்பிடிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும் சிகிச்சை பயனளிக்காது இருவரும் நேற்று உயிரிழந்தனர்" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)



*மட்டகளப்பு மாவட்ட தொடருந்துக் கடவைக் காப்பாளர்கள் நேற்று புதன் கிழமை காலை 8 மணியளவில் மட் ட க்களப்பு தொடருந்து நிலையத்துக்கு முன்னாள் கவனவீர்ப்பு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர் தமது சேவையை நிரந்தரமாக்க வேண்டும் என்று வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர். (வ-ய-46)*

## மதுபானசாலைகளால் கிடைக்கும் வரி மூலமே அரசு இயங்குகின்றது

### யோகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

எருவில், ஏப்.20

"தற்போது அரசிடம் போதிய ளவு பணம் இல்லை. சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதன் மூலமும் மதுபானசாலைகளைஅமைத்து வரியைப்பெறுவதன்மூலமே அரசு இயங்குகின்றது"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார். அம்பாறை எருவில் கிராமத்திலுள்ள மூன்று கழகங்களுக்கு புலம்பெயர் உறவுகளின் அனுசரனையில் நன்கொடை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் எருவில் நூலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் பிரதேசங்களில் இன்னும் எத்தனையோ அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளன. அவற்றை அரசிடம் ஒப்படைத்துள்ளோம். அவற்றை உரிய கால நேரத்துக்குள் செய்து முடிக்க முடியாத நிலையில் அரசு திண்டாடிக்கொண்டு இருக்கின்றது. எது எப்படி இருந்தாலும் நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டும், எமது மக்கள் நலன் சார்ந்த அபிவிருத்திகளில் எடுத்த முயற்சிகளிலிருந்து சற்றும் விலகாமல் செயற்பட்டு வருகின்றோம்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி. யோகேஸ்வரன் மேலும் தெரிவித்தார். (வ-ய)

# தொழிலாளர் உரிமை மீறல்கள் இலங்கையில் தொடர்கின்றன

### ஐரோப்பிய ஒன்றியம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 20

இலங்கையில் தொழிலாளர் உரிமை மீறல்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றன என்று ஐரோப்பிய ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கைக்கு மீண்டும் வழங்குவதற்காக இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் உண்மையைத்தேடும் குழுவினரே இதனைத் தெரிவித்தனர்.

"சுதந்திர வர்த்தக வலையம் மற்றும் பொதுச் சேவைப் பணியாளர்கள் மத்தியில் தொழிலாளர் உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன. பாலியல் துர்நடத்தைகள், திடீர் பணி நீக்கம், நெருக்கடி வழங்குதல் உள்ளிட்ட பல உரிமை மீறல்கள் தொழிலாளர்கள் மீது தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன.

இந்த விடயங்கள் தொடர்பில் தொழில் உறவு அமைச்சருடன் பேச்சு நடத்தப்பட்டது. இலங்கை அரசுக்கு வழங்கப்படும் ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகையானது, குறிப்பிட்ட சில வர்த்தகர்களுக்கு மாத்திரம் இலாபம் கிடைக்கும் வகையில் அமையக் கூடாது.

அவ்வாறெனின் அந்த சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்காது" என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் உண்மையைத் தேடும் குழுவினர் மேலும் தெரிவித்தனர்.

இலங்கைக்கு மீண்டும் ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்குவது தொடர்பான அறிவிப்பை ஐரோப்பிய ஒன்றியம் இந்த மாத இறுதியில் வெளியிடும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## 34 தாதியர்கள் கிழக்கில் நியமனம்

திருமலை, ஏப்.20

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சால் 34 தாதிய உத்தியோகத்தர்களுக்கு நேற்று நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் நியமனங்களை வழங்கி வைத்தார்.

அம்பாறையில் 18 பேருக்கும், கல்முனையில் ஒருவருக்கும், மட்டக்க ளப்பில் ஐவருக்கும், திருகோணமலையில் 10 பேருக்கும் நியமனம் வழங்கி வைக்கப்பட்டது. (வ-ய-45)

# மக்களின் நிலங்களை விடுவிக்க வலியுறுத்தி மன்னாரில் பேரணி



மன்னார், ஏப்.20

மன்னார், முள்ளிக்குளத்தில் கடற்படை அபகரித்துள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிக்க வற்புறுத்தியும், மாவட்டத்தில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள மக்களின் காணிகளை விடுவிக்க வலியுறுத்தியும் நேற்றுக் காலை மன்னாரில் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது. மன்னார் ஆயர் இல்லம் பேரணியை ஏற்பாடு செய்தது.

மு.ப. 10 மணியளவில் புனித செபஸ்தியார் பேராலயத்திலிருந்து பேரணி ஆரம்பமானது. மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமை தாங்கினார். மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, அருட்தந்தையர்கள், மன்னார் மறை மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பங்குகளைச் சேர்ந்த மக்கள் என நூற்றுக்கணக்கானோர் பேரணியில் பங்கு கொண்டனர்.

பேரணி பிரதான வீதியூடாக பஸார் பகுதியை அடைந்து மன்னார் மாவட்ட செயலக வாயிலை அடைந்தது.

முள்ளிக்குளம் மக்கள் சார்பில் எழுதப்பட்ட கடிதம் அரச தலைவருக்கு அனுப்புவதற்காக மன்னார் ஆயர் இல்லத்தின் ஊடாக மன்னார் மாவட்ட செயலர் எம். வை.எஸ்.தேசப்பிரியவிடம் கையளிக்கப்பட்டது.

பேரணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, சி.சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான மருத்துவர் குணசீலன், சட்டத்தரணி எஸ்.பிரிமோஸ் சிறாய்வா, மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியப் பிரதிநிதிகள், ரெலோ அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் பற்றிக் வினோ உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(ற -56)

# சொந்தக் கிராமத்திலேயே நாம் கௌரவத்துடன் வாழ முடியும்

## *கிராமத்தை விடுவிக்க வேண்டும் என முள்ளிக்குளம் மக்கள் மைத்திரிக்குக் கடிதம்*

மன்னார், ஏப்.20

முள்ளிக்குளம் நாங்கள் வாழ்ந்த மண். இங்கு வாழ்ந்தாலே நாம் கௌரவம் மிக்க குடிமக்களாக வாழ முடியும். எங்கள் நியாயமான கோரிக்கையை மனித நேயத்தோடு நோக்கி எங்கள் கிராமத்தை எங்களிடம் வழங்க உத்தரவிட வேண்டும்..

இவ்வாறு முள்ளிக்குளம் மக்கள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னாரில் இராணுவத்தினரின் வசமுள்ள மக்களின் காணிகளை விடுவிக்கக் கோரி கவனவீர்ப்புப் பேரணி நடத்தப்பட்டது. அதன்போது முள்ளிக்குளம் கிராம மக்கள் சார்பான மனு மாவட்ட செயலர் ஊடாக அரச தலைவருக்கு அனுப்பப்பட்டது. அதிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

2007ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தின் 17ஆம் நாள் முள்ளிக்குளத்தில் வாழ்ந்த மக்களை வெளியேறுமாறு இராணுவம் அறிவித்தது. மூன்று நாள்களில் மீள இங்கு அனுமதிப்போம் என்றும் கூறியது. முள்ளிக்குளத்தில் இருந்த அனைவரும் வாகனங்களில் ஏற்றப்பட்டு முருங்கன் மகா வித்தியாலயத்தில் இறக்கப்பட்டோம். அன்று ஆரம்பித்த துயர வாழ்வு இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.



மூன்று தினங்களில் திரும்பி விடுவோம் என்ற எதிர்பார்ப்புடன் சிறிய தொகைப் பணத்துடன், கையில் பையுடன் நாங்கள் கிளம்பியிருந்தோம். நாம் விட்டுச் சென்ற எங்கள் சொத்துக்கள் எவையும் இல்லை. அவை யாரிடம் என்ற கேள்விக்கு எமக்கு விடை தெரியாது.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த அகதி முகாம் வாழ்வு எத்தனை காலத்துக்கு? எங்களுக்கு மட்டுமா? அல்லது எங்கள் சந்ததியினருக்குமா?. எமது துயரமெல்லாம் நீங்கப்போகிறது என்ற எதிர்பார்ப்போடு நாம் உங்களுக்கு வாக்களித்தோம். எங்களின் எதிர்பார்ப்புக்களும் கலைந்து விட்டன.

நாம் ஆசையாய் கட்டிய வீடுகளில் கடற்படையினர் வாழ்கின்றனர். நாங்கள் விவசாயம் செய்த நிலங்களும் குளமும் கடற்படையினர் தோட்டம் வைக்கவும், பணம் உழைக்கவும் பயன்படுகின்றன. எமது பிள்ளைகளுக்காகக் கட்டப்பட்ட பாலர் பாடசாலைகளில் படையினரின் பிள்ளைகள் கற்கின்றனர். எங்கள் பிள்ளைகள் பழைய கட்டடத்தில் கற்கின்றனர். பாவிக்கப்படாத வீடுகள் இடிக்கப்பட்டுள்ளன.

இது தென்னிலங்கை மக்களை இங்கு குடியேற்றம் செய்யும் நோக்கமா? முள்ளிக்குளம் நாங்கள் வாழ்ந்த மண். எம் மூதாதையர்கள் வாழ்ந்த மண் - என்றுள்ளது.

(ற - 21)

# யாழ். நகரிலேயே புதிய கட்டடத்தையும் அமைக்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப்.20

ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள கட்டடத் தொகுதி யாழ்ப்பாண நகர்ப்பகுதியில் அமைக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதன் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் யாழ். மாநகர சபையும், நகர அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து ஆயிரம் மில்லியன் ரூபா நிதிச் செலவில் கட்டடத் தொகுதி ஒன்றை அமைக்கவுள்ளன. அதற்கான அமைவிடத்தைத் தெரிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

இந்த விடயம் யாழ்ப்பாண பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டதிலும் பேசப்பட்டது.

கட்டடத் தொகுதி யாழ். நகர் பகுதியில் அமைக்கப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் வலியுறுத்தினார். மாகாண சபை உறுப்பினர்களும், பிரதிநிதிகளும் அதை ஆதரித்தனர்.

கட்டடத் தொகுதி யாழ். நகர் பகுதியில் அமைப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதை யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் குறிப்பிட்டார். (ற - 8)

### இடம்பெயர்ந்தோருக்கான செயலணியின் திட்டத்தில்

# முஸ்லிம்களுக்கு மட்டும் அல்ல எல்லோருக்குமே வீடு வேண்டும்

## *சரவணபவன் எம்.பி. வலியுறுத்து*

யாழ்ப்பாணம், ஏப்.20

நீண்டகாலமாக இடம்பெயர்ந்தோருக்கான செயலணியின் ஊடாக யாழ்ப்பாணத்தில் வழங்கப்படவுள்ள வீட்டுத் திட்டம் முஸ்லிம் மக்களுக்கு மட்டும் வழங்கப்படாது பாதிக்கப்பட்ட அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும்.



இவ்வாறு வலியுறுத்தினார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"நீண்ட காலமாக இடம் பெயர்ந்தவர்களுக்கான செயலணி ஊடாக 150 வீடுகள் வழங்கப்படவுள்ளன. அந்தத் திட்டத்தில் முஸ்லிம் மக்களை மட்டும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று எந்த அறிவுறுத்தலும் வரவில்லை. அவ்வாறு அறிவுறுத்தப்பட்டாலும் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. போரால் அனைத்து மக்களுமே பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தத் திட்டத்துக்குள் அனைத்து மக்களையும் உள்ளடக்க வேண்டும்." என்று அவர் குறிப்பிட்டார்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டதில் இருந்த மக்கள் பிரதிநிதிகளும் வீட்டுத் திட்டத்தில் அனைத்து மக்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினர்.

"நீண்டகாலமாக இடம் பெயர்ந்தவர்களுக்கான செயலணி யாழ்ப்பாணத்தில் வழங்கவுள்ள வீட்டுத் திட்டத்துக்கு 46 முஸ்லிம் குடும்பங்கள் தகைமை கொண்டுள்ளன. ஏனையவற்றுக்கு இன்னமும் பயனாளிகள் தெரிவு செய்யப்படவில்லை." என்று யாழ். பிரதேச செயலர் குறிப்பிட்டார்.

மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், கைத்தொழில்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆகியோரையும் உள்ளடக்கிய இந்தச் செயலணி யாழ்ப்பாணத்தில் வீட்டுத் திட்டங்கள் வழங்கவுள்ளது. முஸ்லிம் மக்களுக்கு மட்டும் அவை வழங்கப்படவுள்ளன என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. அதேவேளை, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனையும் இந்தச் செயலணிக்குள் இணைத்துக் கொள்ள வேண் டும் என்று வடக்கு மாகாண சபை அமர்வில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

(ற - 8)

# அட்டகாசம் செய்யும் யானையை அகற்ற வேண்டுமெனக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப்.20

இரவு வேளைகளில் நடமாடும் யானையால் நித்திரையின்றி அச்சத்துடன் பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளது என்று சிராட்டிக்குள மக்கள் தெரிவித்தனர். அந்த யானையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

காட்டு யானைகள் கிராமத்துக்குள் வரும் போது ஒலி எழுப்பியும், ஒளி பாய்ச்சியும் விரட்டுவோம். இந்தத் தனி யானையைஅவ்வாறு விரட்ட முடியவில்லை. நெல் களஞ்சியப்படுத்தியிருக்கும் வீடுகளைச் சேதப்படுத்துகின்றது. பயன்தரு மரங்களை அழிக்கின்றது. நேற்றுமுன்தினமும் இரு வீடுகளைச் சேதப்படுத்தியது. தோட்டத்தையும் நாசப்படுத்தியது..

இது தொடர்பாகப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியும் எவரும் வரவில்லை. அதிகாரிகளுக்கு அறிவித்தும் பயன் கிட்டவில்லை. அந்த யானையை இந்தப் பகுதியில் இருந்து அகற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

(ற -7)

# வாழ்வாதாரத் திட்ட உற்பத்திகளுக்கு போதிய சந்தை வாய்ப்பு இல்லை

## *வடக்கு கிராமிய அமைச்சர் சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், ஏப்.20

கிராமங்களை முன்னிலைப்படுத்தி உருவாக்கப்படும் வாழ்வாதாரத் திட்டங்களின் கீழ் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் உல்லாசப்பயணிகளைக் கவரக் கூடியனவாக இருந்தும் அவற்றுக்கான சந்தை வாய்ப்புக்கள் இல்லை. அவை தேக்கமடையும் நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன்.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான மாகாண கண்காட்சி நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும்போதே வடக்கு அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார் என்று அவரது ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

எமது மாகாணம் அபிவிருத்தியை நோக்கி நகரவேண்டுமானால் அது கிராமங்களில் இருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும். கிராமங்கள் வளர்ச்சி அடைவதனூடாகவே எமது முழு மாகாணமும் வளர்ச்சியடையும்.

கடந்த ஆண்டு வவுனியாவில் இடம்பெற்ற தொழில் திணைக்களத்தின் கண்காட்சியில் எமது முதலமைச்சர் ஒரு கருத்தை முன்வைத்திருந்தார். நமது சர்வதேச விமான நிலையத்தில் எமக்கென ஒரு தனி விற்பனை நிலையத்தை ஏற்படுத்துவதன் வாயிலாக இவ்வாறு கிராமங்களில் உற்பத்தி செய்யப்படும் அநேக உற்பத்திகளுக்கு நாம் ஒரு நல்ல சிறந்த சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுக்கமுடியும் என்றார். அதற்கான ஓர் ஆக்கபூர்வமான முயற்சியை இரண்டு திணைக்களங்களையும் இணைத்து அமைச்சு சார்ந்ததாக வருகின்ற உல்லாசப் பயணிகளையும் அதேவேளை தென்பகுதி மக்களையும் கவரும் வண்ணமாக எதிர்காலத்தில் விற்பனை நிலையங்களை உருவாக்க வேண்டும் என்றார் - என்றுள்ளது.

(ற - 21)

## மீதொட்டமுல்ல இடரால் பாதிப்புக்குள்ளாகிய

# அனைவருக்கும் வீடு

### வியட்நாமால் திரும்பிய கையோடு நேரில் சென்று உறுதியளித்தார் ரணில்

கொழும்பு, ஏப். 20
மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்து விழுந்து பொது மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுடனும் கலந்துரையாடிய அவர் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உடனடியாக வீடுகள் வழங்கப்ப டும் என்று உறுதியளித்தார்.



**32 சடலங்கள்**
மீதொடமுல்ல குப்பை மேடு கடந்த 14 ஆம் திகதி சரிந்து விழுந்து ஏற்பட்ட இடர் காரணமாக இதுவரை 32 பேர் உயிரிழந்துள்ளனர். புதையுண்ட நிலையில் காணப்பட்ட அவர்களது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இன்னும் பலர் காணாமற்போயுள்ளனர். சுமார் 150 வீடுகள் சேதமடைந்தன. 180 குடும்பங்களைச் சேர்ந்த 625 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அங்கு மீட்பு நடவடிக்கை தொடர்கிறது.
வியட்நாம் சென்றிருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அதிகாலை நாடு திரும்பினார். அவர் நேற்றுமுற்பகல் மீதொட்ட முல்லைக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை ஆராய்ந்தார். அதன்போதே வீடுகள் வழங்கப்படும் என்று அவர் உறுதியளித்தார்.
60 வீடுகள் தயார்
மீதொட்டமுல்லயில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான 98 வீடுகளை வழங்க, நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக, இடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.
"வேறு திட்டத்தில் நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ள 60 வீடுகளை இடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கப்படுகிறது. ஏனைய வீடுகளையும் அவர்களுக்கு விரைவில் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். குறித்த வீடுகளுக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்ய இரண்டரை இலட்சம் ரூபா வரை வழங்க அரசு தயாராகவுள்ளது" என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

**ஆர்ப்பாட்டம்**
இவை ஒருபுறமிருக்க, கொழும்பில் சேகரிக்கப்படும் குப்பைகளை பிலியந்தலை, கரதியான கழிவு சேகரிப்பு பகுதியில் போடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச மக்கள் நேற்றுமுந்தினம் தொடக்கம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக வேரஹெற - இரத்மலானை வீதியில், பேருபனை பாலத்துக்கு அருகாமையில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

**குப்பைபோட இடம்**
மீதொடமுல்ல குப்பை மேடு சரிந்து விழுந்ததை அடுத்து கொழும்பில் ஒரு நாளைக்குச் சேரும் 350 மெட்ரிக் தொன் குப்பைகளை கரதியான கழிவு சேகரிப்பு பகுதியில் போடுவதற்குக் கொழும்பு மாநகர சபைக்கு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியிருந்தது. கொழும்பு நகரில் சேகரிக்கப்படும் குப்பைகளை பிலியந்தலை கரதியான குப்பை கொட்டும் இடத்தில் கொட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
முடிவில் மாற்றமில்லை
கொழும்பில் சேகரிக்கப்பட்ட குப்பைகளை கரதியான பகுதிக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, கொழும்பு மாநகர சபையின் ஆணையாளர் வீ.கே. ஏ.அனுர தெரிவித்தார்.
"நாளொன்றுக்கு 350 மெட்ரிக் தொன் குப்பைகளை இவ்வாறு பிலியந்தலை - கரதியானவில் உள்ள குப்பை சேகரிப்பு மையத்தில் கொட்டுவதற்கு நீதிமன்றால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. தற்காலிகமான முறையிலேயே இந்த அனுமதி கொழும்பு மாநகர சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இந்த அனுமதி நீதிமன்றால் வழங்கப்பட்டுள்ளது" என்று ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.
இது தவிர, கொழும்பு நகரின் குப்பைகளைகையேற்க நீதிமன்ற உத்தரவு உள்ள நிலையில் அதற்குத்தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக கரதியான குப்பைசேகரிப்பு மைய பணிப்பாளர் ருச்சிறி தர்மசிறி தெரிவித்தார்.
இதேவேளை, கொழும்பில் சாதாரணமாக 3 நாள்களுக்கு மேல் குப்பைகள் அகற்றப்படாவிட்டால் பெரும் சுகாதார சீர்கேடுகள் மற்றும் தோல் நோய்கள் ஏற்படும் என்று மருத்துவர்களால் எச்சரிக்கப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இந்த இடரில் 246 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 59 பேர் பாதிக்கப்பட்டு, அருகிலுள்ள பாடசாலையில் தற்போதுவரை தங்கவைக்கப்பட்டுள்ளனர். சுமார் 11 பேர் வரை சம்பவத்தில் காயமடைந்த நிலையில் தொடர்ச்சியாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

**மீட்பு**
ஆயிரத்து 60 முப்படையினர் மற்றும் பொலிஸார் அங்கு மீட்புப் பணிகளிலும், மக்களின் முறைப்பாடுகளை பதிவு செய்யும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.
குப்பைமேடு சரிவு ஏற்பட்ட பகுதிய்யை அண்மித்த மற்றுமொரு பகுதியும் பாதுகாப்பற்ற பிரதேசமாக பெயரிடப்பட்டுள்ளது. சிவப்புக் கொடிகளை இட்டு குறித்த பகுதிகள் ஆபத்தான வலயங்களாக பிரிக்கப்பட்டுள்ளன.
இதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளரான பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயகொடி தெரிவித்தார்.
இந்த இடர் தொடர்பான ஆய்வுகளுக்காக பேராதனை பல்கலைக்கழக புவியியல்துறை பேராசிரியர்கள் மூவர் உள்ளிட்ட 7 பேரும், அரச இரசாயன பகுப்பாய்வாளர், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவக பிரதிநிதி எனப் பலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
"இங்கு குடிபெயர்ந்து 32 வருடங்களாகின்றன. இங்கு வரும் போது வயல் நிலங்களே காணப்பட்டன. அதில் 2 ஏக்கரில் குப்பைகளை கொட்டுவதாக அரசு முடிவெடுத்தது. மொத்தமாக 22 ஏக்கரில் குப்பைகளை கொட்டினார்கள். இந்த இடர் இடம்பெறுவதற்கு 4 வாரங்களுக்கு முன்னர் குப்பை மேட்டின் மீது இரசாயனம் தூவப்பட்டது. அதன் தாக்கத்தினாலேயே விபத்து நேர்ந்திருக்கலாம் என்று கருதுகிறேன். அதன் பின்னர் தான் அருகிலுள்ள வீடுகளின் சுவர்கள் வெடிப்பதற்கு ஆரம்பித்தன" என்று பாதிக்கப்பட்டவர்களில் ஒருவரான 55 வயதுடைய வி.ஜி குலரத்ன தெரிவித்தார். (வ-4)



# மக்களுக்கு நேரகாலத்தோடு அதிகாரிகள் எச்சரித்தனர்

### ஆதாரங்களைக் காட்டுகிறது அரசு

கொழும்பு, ஏப். 20
"மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்து விழும் அபாயம் உள்ளதாக நேரகாலத்தோடு அதிகாரிகளால் அந்தப் பிரதேச மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அந்த மக்களை இருப்பிடங்களிலிருந்து வெளியேறுமாறு கடந்த 5ஆம் திகதி அதிகாரிகளால் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது"
இவ்வாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.
அந்த மக்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல் கடிதம் தம்வசம் உள்ளதாகவும் அவர் உறுதி செய்தார்.
"மீதொட்டமுல்ல பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட கடிதத்தை பெற்றுக் கொண்டதை உறுதிசெய்யும் வகையில் ஒப்பமிட்ட ஆவணங்களும் கிராம அலுவலரிடம் உள்ளன. எதிர்ப்புக்களைக் கைவிட்டு, கலந்துரையாடல் மூலம் அரசுடன் இணைந்து பிரச்சி னைகளுக்கு முகம்கொடுக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்று அமைச்சர் வஜிர அபேவர்தன மீதொட்டமுல்ல மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.
மீதொட்டமுல்ல இடர் தொடர்பில் அரசு குறித்த பகுதி மக்களுக்கு முன்னரே அறிவித்திருக்க வேண்டும். ஆனால் அரசு அதனைச் செய்யவில்லை என்று பிர தேசத்தின் பொது மக்கள் சிலராலும் மகிந்த அணியின்ராலும் குற்றஞ்சாட்டப்படும் நிலையில் அரசு மேற்கண்டவாறு அறிவித்துள்ளது. (வ-4)

## கோத்தபாய மீது அசாத் சாலி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 20
"குப்பை மேட்டை கோத்தபாயவே மீதொட்டமுல்லவுக்கு கொண்டு சென்றார். அவருக்குத் தேவையான முறையில் அப்போதைய தலைமை நீதியரசர் சரத் என் சில்வா உத்தரவை வழங்கியிருந்தார்"
இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.
அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
"முன்னர் மாதம்பிட்டியில் குப்பை மேடு இருந்தது. அதனை அரசுடமையாக்கி பலாத்காரமாக கோத்தபாய ராஜபக்சவே மீதொட்டமுல்லவுக்கு கொண்டு சென்றார். கோத்தபாயவுக்கு தேவையான முறையில் அப்போதைய தலைமை நீதியரசராக இருந்த சரத் என் சில்வா இரண்டு ஏக்கர் பகுதியில் குப்பைகளை கொட்டுமாறு உத்தரவிட்டார். எதிர்ப்பவர்களைக் கைதுசெய்யுமாறும் அவர் பணித்திருந்தார்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-4)

## குப்பை மேடு இடர் குறித்து விவாதிக்க நாடாளுமன்றில் சிறப்பு அமர்வு

### கோருகிறது மகிந்த அணி

கொழும்பு, ஏப். 20
மீதொட்டமுல்ல இடர் தொடர்பில் நாடாளுமன்றில் சிறப்பு விவாதம் நடத்துமாறு மகிந்த அணியினர் சபாநாயகரிடம் கோரியுள்ளனர். இடர் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றை காணும் நோக்கில் இந்தக் கோரிக்கை மு ன்வைக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.
இதேவேளை, மீதொட்டமுல்ல குப்பைமேடு இடரை முன்வைத்து, நாட்டில் ஏற்பட்டுள்ள பெரியளவிலான பொருளாதார நெருக்கடியை மூடிமறைக்க அரசு முயற்சிக்கின்றது என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன குற்றஞ்சாட்டினார். (வ-4)

## மக்களுக்கு நியாயம் கேட்டு மாணவர்கள் போராட்டம்

கொழும்பு, ஏப். 20
மீதொட்டமுல்ல் இடரால் பார்திக்கப்பட்ட மக்களுக்கு நியாயத்தை வழங்குமாறு வலியுறுத்தி பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
கண்டி, கலஹா சந்தியில் குறித்த போராட்டம் நடைபெற்றது. இதனால் கண்டி கொழும்பு முதன்மை வீதியின் ஒரு பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## இடர்ப் பாதிப்புக்களை இலங்கை அணியினர் நேரில் பார்வையிட்டனர்

கொழும்பு, ஏப். 20
மீதொட்டமுல்லயில் இடரால் பாதிக்கப்பட்ட பகுதியை இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர்கள் சிலர் நேற்றுக் காலை நேரில் சென்று பார்வையிட்டனர்.
மீதொட்டமுல்லயில் கடந்த 14 ஆம் திகதி ஏற்பட்ட குப்பை மேட்டு இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபங்களைத் தெரிவிக்கவும், அவர்களின் தேவைகளை கேட்டறிந்து, அந்த மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் நோக்கிலேயே வீரர்கள் அங்கு சென்றிருந்தனர்.
பாதிக்கப்பட்ட மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்களுக்குச் சென்ற இலங்கை கிரிக்கெட் அணியினர், முதல் கட்டமாக நான்கு தொலைக்காட்சி பெட்டிகளை முகாம்களில் பொருத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## மனைவி இறந்த சோகத்தில் வயோதிபர் உயிர் துறப்பு

மனைவி இறந்த சோகத்தை தாங்கிக் கொள்ள முடியாத வயோதிபர், தவறான முடிவெடுத்துஉயிரைமாய்த்துக்கொண்டார்என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் பதுளை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

"64வயதுடைய எய்ச்.எம். சுதுபண்டா என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார். அவரது மனைவி கடந்த ஆறு தினங்களுக்கு முன் நோய் வாய்ப்பட்ட நிலை யில் இறந்திருந்தார். இந்நிலையில் அவர் நேற்றுக்காலை உயிரை மாய்த்துக்கொண்டார். சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-ய,43)

## ஆலயத் திருவிழாவில் பயங்கரம் கத்திக்குத்தில் ஒருவர் உயிரிழப்பு

நுவரெலியா, ஏப். 20

"ஹட்டன் குடாஓயா தோட்டத்தில் நேற்று முன்தினம் இரவு ஆலயத் திருவிழாவின் போது இடம்பெற்ற இரு குழுகளுக்கு இடையேயான மோதலில் ஒருவர் கத்தி குத்துக்கு இலக்காகி உயிரிழந்தார். மேலும் நால்வர் படுகாயமடைந்தனர்" - என்று ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

"ஹட்டன் குடாஓயா தோட்ட ஆலயத் திருவிழாவின் கடைசி நாளான நேற்றுமுன்தினம் மஞ்சல் நீராட்டு விழா இடம்பெற்றது. அந்த வேளையில் இரு குழுக்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. ஒருவர் கத்தியால் குத்தப்பட்டார். சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

படுகாயமடைந்த நால்வர் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் இருவர் செய்யப்பட்டனர். மேலும் ஒருவர் தேடப்பட்டு வருகிறார்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-ய,43)

## கடும் வறட்சியால் திருமலையில் குடிதண்ணீருக்கு பற்றாக்குறை

திருகோணமலை, ஏப். 20

திருகோணமலை மாவட்டத்தில் தற்போது நிலவும் வறட்சியான காலநிலையால் திருகோணமலை நகர் மற்றும் குச்சவெளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

திருகோணமலையில் தற்போது 38 செல்சியஸ் வெப்பநிலை காணப்படுவதனால் கிணறுகளின் நீர் மட்டம் தாழ்ந்து சென்றுள்ளது. உப உணவுப் பயிர், வெங்காயப் பயிர் செய்கைகளுக்கு போதுமான அளவு நீரைப் பாய்ச்ச முடியாத நிலை காணப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் கல்லம்பத்தைபள்ளவக்குளம் பகுதிகளுக்கு பிரதேச சபையினால் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. புல்மோட்டையில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது" என்று குச்சவெளி பிரதேச செயலாளர் பொன்னம்பலம் தனேஸ்வரன் தெரிவித்தார்.

மேலும் திருகோணமலை பட்டனமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் மாங்காயூற்று,முத்துநகர் மற்றும் விலாங்குளம் போன்ற கிராமங்களுக்கு சுத்தமான குடிதண்ணீரை வழங்கி வருவதாக பிரதேச செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ் தெரிவித்தார்.

அத்துடன் வறட்சி காரணமாக குடிதண்ணீர்த் தட்டுப்பாடு காணப்பட்டால் பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்குமாறும் திருகோணமலை மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தினர் அறிவித்தனர். (வ -45)



## பட்டதாரிகளுக்கு ஆதரவாக மோட்டார் சைக்கிள் பேரணி

மூதூர், ஏப்.20

திருகோணமலை மாவட்ட வேலைதேடும் பட்டதாரிகள் நேற்று 49ஆவது நாளாக தொடர் போராட்டத்தை முன்னெடுத்தனர். அவர்களது போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்று பொது மக்கள் சிலரால் மோட்டார் சைக்கிள் பேரணி நடத்தப்பட்டது.

மூதூர் கிழக்கு நாவலடிச் சந்தியில் ஆரம்பமான இந்தப் பேரணி கிண்ணியா வழியாக தம்பலகாமம் ஆதரவாளர்களையும்இணைத்து திருகோண மலையை வந்தடைந்தது.

இதன்போது பட்டதாரிகள் தமது போராட்ட வடிவத்தை மாற்றவேண்டும் என்றும், அப்போது தான் தீர்வு கிட்டும் என்றும் மூதூர் பிரதேச சபையின் முன்னாள் எதிர்கட்சித் தலைவர் க. திருச்செல்வம் வலியுறுத்தினார்.

அரச தலைவர், தலைமை அமைச்சர், கிழக்கு மாகாண ஆளுனர் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோர்களுக்கு மனுக்களும் அனுப்பிவைக்கப்பட்டன. (வ-ய,40)

### ஏறாவூர் இரட்டைக் கொலை:

## சந்தேகநபர்கள் 6 பேரின் விளக்கமறியல் நீடிப்பு

ஏறாவூர், ஏப். 20

மட்டக்களப்பு, ஏறாவூர் இரட்டைக்கொலை வழக்கின் சந்தேகநபர்கள் 6 பேரின் விளக்கமறியல் எதிர்வரும் 3ஆம் திகதிவரை நீடித்து மட்டக்களப்பு நீதிவான் உத்தரவிட்டார்.

ஏறாவூர் முகாந்திரம் வீதி முதலாம் ஒழுங்கையிலுள்ள வீட்டில் படுத்துறங்கிய என்.எம். சித்தி உசைரா (வயது - 56) மற்றும் அவரது மகளான ஜெனீரா பாணு மாஹிர் (வயது - 32) ஆகியோர் கடந்த செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அதிகாலை பொல்லால் அடித்து கொடூரமாகக் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த இரட்டைப் படுகொலை வழக்கு விசாரணை மட்டக்களப்பு நீதிமன்றில் மேலதிக நீதிவான் எம்.ஐ.எம் றிஸ்வி முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இரட்டைப் படுகொலையைச் செய்தனர் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள் 6 பேரும் நேற்று மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணை செய்த மேலதிக நீதிவான், சந்தேகநபர்கள் 6 பேரினதும் விளக்கமறியலை எதிர்வரும் 3ஆம் திகதிவரை நீடித்து உத்தரவிட்டார். (வ)


# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் பணிபுரியும் பரம சிவம்பிள்ளை சுபமூர்த்தி

அவர்களின் அன்புத் தாயார்

## சிவபாலாம்பிகை பரமசிவம்பிள்ளை



" ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்டதாய்" எனும்
குறள் பொருந்த அறுவரைப் பெற்று
அவனியில் சிறக்கவைத்த
தாயாரின் இழப்பால் தவிக்கின்ற
உறவுகளின் துயர்களிலே
நாமும் பங்கேற்று அவரின் ஆத்மா
ஈழத்து சிதம்பரத்து இறைவன்
திருப்பாதம் சேர்க்வென இறைஞ்சுகின்றோம்.

S.V.M. நிறுவனத்தின்
உரிமையாளரும், ஊழியர்களும்.

154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

எமேசன் வீதி, 4 ஆம் வாய்க்கால், கிளிநொச்சி.

122, Dam street, Colombo-12

# பொதுச் செயலாளராக விரைவில் ஓ.பி.எஸ்.


## சாத்தியம் என்று இந்திய ஊடகங்கள் தகவல்



சென்னை, ஏப். 20

அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளராக ஓ.பன்னீர்செல்வம் விரைவில் பொறுப்பேற்க வாய்ப்புள்ளது என்று இந்திய ஊடகங்கள் சில தகவல் வெளியிட்டன. சமூக வலைத்தளங்களிலும் இவ்வாறான ஓர் கணிப்பு வெகுவாகவே பரவி வருகிறது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைந்த பின்னர் அவர் வகித்து வந்த அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளர் பதவி சசிகலாவுக்கும் முதல்வர் பதவி ஓ.பன்னீர்செல்வத்துக்கும் கொடுக்கப்பட்டது. கட்சியும் ஆட்சியும் ஒருவரிடத்தில் இருக்க வேண்டும் என்று தெரிவித்து ஓ.பன்னீர்செல்வத்திடம் இருந்து முதல்வர் பதவியையும் எடுத்துக்கொள்ள சசிகலா முடிவுசெய்தார். இதனால் கட்சி இரண்டாக உடைந்தது. சொத்துக்குவிப்பு வழக்கில் சசிகலா சிறைக்குச் செல்லுவதற்கு முன்னர் தனது அண்ணன் மகன் டி.டி.வி. தினகரனை துணைப் பொதுச்செயலாளராக நியமித்தார். தினகரன் ஜெயாவால் நீக்கப்பட்டவர். எனவே அவரது நியமனத்தை பலரும் ஏற்கவில்லை. ஜெயலலிதா போட்டியிட்டு வெற்றிபெற்ற ஆர்.கே. நகரில் வேட்பாளராகவும் தினகரன் நிறுத்த ப்பட்டார். இடைத்தேர்தலில் வாக்குகளுக்குப் பணம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டு தினகரனின் மீது உள்ளது. இரட்டை இலைச் சின்னத்தை மீட்பதற்காக அவர் இந்தியத் தேர்தல் ஆணையத்தக்கு லஞ்சம் கொடுத்தார் என்று டெல்லி பொலிஸார் ஆதாரத்துடன் வழக்குப் பதிவுசெய்துள்ளனர். இதனால் அ.தி.மு. கழகமும் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. இது தொடர்பில் கடந்த திங்கட்கிழமை இரவும் நேற்றுமுன்தினம் இரவும் ஆலோசனை நடத்திய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் சசிகலா குடும்பத்தை அடியோடு நீக்கிவிட்டு கட்சியை நடத்துவது என்று முடிவெடுத்து நேற்றுமுன்தினம் இரவு அறிவித்தனர். கட்சியைத் தற்காலிகமாக நிர்வகிக்கக் குழு அமைக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். சுமூகமான நிலை ஏற்பட்டதும் ஓ.பன்னீர்செல்வம் கட்சியின் பொதுச்செயலாளராக நியமிக்கப்படுவார், எடப்பாடி பழனிச்சாமி முதல்வராகத் தொடர்வார் என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. கட்சியின் ஆட்சி தொடர்பில் அமைக்கப்படும் குழு நிரந்தரமாகச் செயற்பட்டால் முதல்வர் பதவி, பழனிச்சாமியிடம் இருந்து பன்னீர்செல்வத்துக்கு மீண்டும் கைமாற்றப்படவும் சாத்தியம் உள்ளது என்று வேறுசில ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. (ம)



## தீபகற்பத்தின் பாதுகாப்பை பலப்படுத்தும் அமெரிக்கா

### பென்ஸ் உறுதி

டோக்கியோ. ஏப். 20

வடகொரியா, வாரந்தோறும் ஏவுகணை சோதனை நடத்தப்போவதாக எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், ஜப்பானுக்கும் கொரியத் தீபகற்பத்துக்கும் தொடர்ந்து பாதுகாப்பு வழங்கப்படும் என்று அமெரிக்கா மீண்டும் உறுதி அளித்துள்ளது.

அண்மையில் தென்கொரியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட அமெரிக்கத் துணை அதிபர் பென்ஸ், தென்கொரியப் பயணத்தை முடித்துக்கொண்டு நேற்றுமுன்தினம் ஜப்பான் சென்றடைந்தார். அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"அமெரிக்கா, ஜப்பான் இடையிலான உறவு வடகிழக்கு ஆசிய பிராந்தியத்தின் அமைதி மற்றும் பாதுகாப்புக்கான மைல்கல். இரு நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு உறவு தொடர்ந்து நீடிக்கும். வடகொரியாவால் ஜப்பானுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பாதுகாப்பு வழங்கப்படும் என பென்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)

## எம்மாவை... ஜமைக்கா...



உலகின் மிக வயதான பெண்ணாக விளங்கிய இத்தாலியைச் சேர்ந்த எம்மா மொரனோ, 117 ஆண்டுகள் 137 நாள்களைக் கடந்த நிலையில் கடந்த 15 ஆம் திகதி உயிரிழந்தார். இதையடுத்து, ஜமைக்காவைச் சேர்ந்த வயலட் மோஸ் ப்ரவுன், உலகின் மிக வயதான பெண்ணாக உருவெடுத்துள்ளார். இவருக்கு வயது (இன்றுடன்) 117 ஆண்டுகள் 140 நாள்கள். 1900ஆம் ஆண்டு பிறந்த இவர், கரும்புத் தோட்டத்தில் தொழிலாளியாக வேலை செய்தவர். இவருக்கு 6 குழந்தைகள். மூத்தவருக்கு வயது 96. அவரே இவரைக் கவனித்துக் கொள்கிறாராம். "எங்களது மரபணுக்கள் மூலமே நீண்ட ஆயுள் கிடைத்... ஆடு. ... இனிப்... கிழங்கு... றவற்றை... பிடுவே... மாம்பழ... பிடிக்கு... இறைச்...



## எச்.டபிள்யு. புஷ் மருத்துவமனையில்

வொஷிங்டன், ஏப். 20

அமெரிக்காவின் அதிபராகக் கடந்த 1989 ஆம் ஆண்டு முதல் 1992 ஆம் ஆண்டுவரை பொறுப்பு வகித்த ஜோர்ஜ் டபிள்யு.எச். புஷ் (வயது 92) உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மருத்துவர்களின் தொடர் கண்காணிப்பில் எச்.புஷ் உள்ளார். விரைவில் அவர் நலம் பெற்று இன்னும் சில தினங்களிலேயே வீடு திரும்புவார் என்று அவரின் செயலாளர் தெரிவித்தார். கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியிலும் எச்.புஷ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



## சிரியாவில் தாக்குதல் 23 மக்கள் உயிரிழப்பு

டமஸ்கஸ், ஏப். 20

சிரியாவின் எல்லை மாகாணமான டெயிர் அல் ஜோரில் அமெரிக்கக் கூட்டுப்படையால் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் 23 பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு சிறிதளவு ஆதிக்கம் செலுத்தும் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலிலேயே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றது. தகவலை சிரியாவில் செயற்பட்டுவரும் மனித உரிமை கண்காணிப்பகம் உறுதிப்படுத்தியது. ஆனால் இந்தத் தாக்குதல் தொடர்பில் அமெரிக்கக் கூட்டுப் படையின் தரப்பில் எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை. (ம)

## அ.தி.மு. கழகத்தில் இருந்து தானாக ஒதுங்கி...

சென்னை, ஏப். 20

"அ.தி.மு. கழகத்தில் இருந்து இழுபறிகள், சண்டைசச்சரவுகள் இல்லாமல் விலகிச்செல்ல முடிவெடுத்துள்ளேன்" இவ்வாறு தெரிவித்தார் அந்தக் கட்சியின் துணைப் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டிருந்த டி.டி.வி. தினகரன்.

தமிழகத்தில் தினகரனுக்கு எழுந்த எதிர்ப்பலையைத் தொடர்ந்து அவரையும் சசிகலாவையும் அவர்களின் குடும்பத்தவர்களையும் கட்சியை விட்டு நீக்குவது என்று முடிவெடுத்து நேற்றுமுன்தினம் இரவு அறிவிக்கப்பட்டது. முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, அ.தி.மு. கழகத்தின் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்தாலோசித்து இதை அறிவித்தனர். ஆனால் இந்த முடிவை தினகரன் ஆரம்பத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை. "கட்சியை விட்டு எவரும் என்னை நீக்க இயலாது. அந்த அதிகாரம் எவருக்கும் இல்லை" என்று




நேற்றுக் காலை வாதிட்டார். ஆனால், தனது நிலைப்பாட்டில் நேற்று மதியம் முன்பின் முரணாகக் கருத்துக்களை வெளியிட்டார்.

"கட்சியில் இருந்து நேற்றே (நேற்று முன்தினம்) விலகிவிட்டேன். சண்டையிட்டு எனது ஆதரவை நிரூபிக்க வேண்டும் என்ற அவசியம் எனக்

# வை பிரதியீடு செய்தார் காவைச் சேர்ந்த பெண்



கிடைத்திருக்கிறது. மீன், ஆடு, மாட்டின் கால், இனிப்பு உருளைக் கிழங்கு, பழங்கள் போன் வற்றை விரும்பிச் சாப் பிடுவேன். ஆரஞ்சும் மாம்பழங்களும் மிகவும் பிடிக்கும். கோழி, பன்றி இறைச்சிகளைச் சாப்பிடு வதில்லை. நன்றாக உழைப்பேன். கரும்பை வெட்டி கழுதையின் முது கில் கொஞ்சம் ஏற்றி விட்டு, மீதியை என் தலையில் சுமந்து கொண்டு மைல் கணக் கில் நடந்துசென்று விற்று விட்டு வருவேன். இத் தனை ஆண்டுகளில் நினைவாற்றல் கூட குறையவில்லை. முதல் முறை சென்ற விமானப் பயணமும் கார் பயண மும் இன்னமும் என் நினைவில் பசுமையாக இருக்கின்றன. வேதாம கத்தை விரும்பிப் படிக்கி றேன். நல்ல வற்றையே நினைக்கிறேன். மகிழ்ச்சி யாக இருக்கிறேன்" என் கிறார் வயலட். ஆனால் இவரைவிட முதியவர் வேறு எவராவது இருக்கி றாரா என்று கின்னஸ் அமைப்பு தேடிக்கொண்டி ருக்கிறது. உலகில் கிட்டத்தட்ட 450 பேர் நூறு வயதைக் கடந்துள் ளனர். இதில் 50 பேரின் வயது மட்டுமே இது வரை உறுதி செய்யப்பட் டுள்ளது. இதில் அதிகமா னவர்கள் பெண்கள். (ம)



ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் ஈராக்கின் மோசூல் நகர மேற்குப் பகுதியில் உ தொட்டுள்ளது. சூரிய மறைவின் பின்னரும் அங்கு போர் விடாமல் தொடருகிறது என்பதற் தக்க சான்றாக இந்த ஒளிப்படம் அமைந்துள்ளது. ஒருபுறத்தில் சூரியன் மறைய மறுபுற கட்டடத்துக்குள் இருந்து வெடிகுண்டுகளின் புகைகள் மேல்கிழம்பிக் கொண்டிருக்கின்றன. வலைத்தளங்களிலும் இந்தப்படம் மிகவும் வைரல்.

# பிரிட்டனில் பொதுத் தேர்தல் திரேசா மே திடீர் அறிவிப்பு




லண்டன், ஏப். 20

பிரிட்டனில் எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி நாடாளுமன்ற பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று அந்த நாட்டுப் பிரதமர் திரேசா மே நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

பிரிட்டனில் 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெற்றது. கென்சர்வேடிவ் கட்சி ஆட்சியைப் பிடித்தது. இதன் பதவிக்காலம் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டி லேயே முடிவடைகிறது. இந்த நிலை யில் கிட்டத்தட்ட மூன்று வருடங்க ளின் முன்னராக பொதுத் தேர்தல் ஒன்றை அறிவித்தார் பிரதமர் திரேசா மே.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகும் நடவடிக்கைக ளுக்கு அரசு தயாராகிவரும் நிலை யில், எதிர்க்கட்சிகள் அரசின் முன் னெடுப்புகளை முடக்குகின்றன. இதன் மூலம் பேச்சுக்கள் பலவீன மடைகின்றன. எதிர்க் கட்சிகளின் பித்தலாட்டங்களை இல்லாமல் செய்ய பொதுத் தேர்தல் ஒன்றின் அவசியமுள்ளது என திரேசா மே மேலும் குறிப்பிட்டார். (ம)

# ...ங்கினார் டி.டி.வி.



கில்லை. என்னை நீக்குவதன்மூலம் கட்சியில் நல்லது நடக்குமானால் நடக்கட்டும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# விடுதலை!

சூடானைச் சேர்ந்த ஆயுதக் குழுவொன்றால் நேற்றுமுன்தினம் கடத்திச் செல்லப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் ஊழியர்கள் 16 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

கடத்தப்பட்ட 16 பேரும் காங்கோ கிழக்கு ஜனநாயக குடியரசுக்கு சொந்தமான அகதிகள் முகாமில் பணயக் கைதிகளாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபைக்குத் தகவல் கிடைத்தது. இதையடுத்து நடத்தப்பட்ட பேச்சின் அடிப்படையில் 16 பேரும் விடுதலை செய்யப்பட்டனர். இந்தத் தகவலை ஐக்கிய நாடுகள் சபை உறுதிப்படுத்தியது. (ம)





# இலங்கை – வியட்நாம் இடையே இரண்டு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்து

## விவசாய அபிவிருத்தி மற்றும் கல்வி ஒத்துழைப்புக்கு முன்னுரிமை

இலங்கை மற்றும் வியட்நாம் நாடுகளுக்கிடையேயானஇரண்டு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக 2017ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு காலப்பகுதி வரையான விவசாய அபிவிருத்திக்கானஒத்துழைப்பை வழங்கும் வினைத்திறனான திட்டங்களை முன்னிலைப்படுத்தும் உடன்படிக்கையும், கல்வி ஒத்துழைப்புக்கான உடன்படிக்கையுமே இவ்வாறு இரு நாடுகளுக்கிடையேயாகவும் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளன.

உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுதலைமைஅமைச்சர் ரணில் விக்ரமசிங்க அந்த நாட்டுக்குச் சென்றிருந்த சந்தர்ப்பத்திலேயே மேற்படி உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளனவென்று கூறப்படுகிறது.

இதன்போதுவியட்நாம்தலைமை அமைச்சர் குயேன் என் பூவால் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

தவிர. இருநாட்டு தலைமை அமைச்சர்களிடையே இடம்பெறதான பேச்சின்போது அரச மற்றும் தனியார் துறைகளின் ஒத்துழைப்புகளை அதிகரித்தல் தொடர்பிலும் இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

அத்துடன் இரு நாடுகளுக்கிடையிலான ஒன்றிணைந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மீளாய்வு செய்து இருதரப்புக்கும் இடையிலான தொடர்புகளை மேலும் வலுவூட்டுவதற்கான நிலையான அமைப்பொன்றை ஏற்படுவதற்கும் தீர்மானிக்கப்பட்டதான கருத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“எதிர்வரும் சில வருடங்களில் இலங்கை மற்றும் வியட்நாமுக்கு இடையேயான வர்த்தக ரீதியான கொடுக்கல் வாங்கல்களை ஒரு பில்லியன் ரூபாவரை அதிகரித்துக் கொள்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.”




# புதிய சிறப்பம்சங்களுடன் வெளியாகும் ஐபோன் 8

தொடர்பாடல் வகையறைகளுக்குள் தொழில்நுட்பச் செறிவுகள் தகவல் வெளிப்பாட்டின் ஊக்கியாக பரிணாமம் பெற்றுள்ளது. அவை மனித நடத்தைக் கோலங்களை திட்டமிடவும் ஆட்சி உறுதி செய்து கொள்ளவும் தவறவில்லை.

அந்தவகையிலே அப்பிள் நிறுவனம் நடப்பாண்டில் மூன்று வகையான அதிதிறன் பேசிகளை ஒரே தடவையில் அறிமுகம் செய்யவுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக இவை முறையே 5.5 அங்குல அளவுடைய திரை, 4.7 அங்குல அளவுடையதான எல்.சி.டி திரை, 5.8 அங்குல அளவுடைய ஓ.எல்.இ.டி திரை என்பவற்றைக் கொண்டதாக அமையவுள்ளன. இவை அனைத்தும் 3 ஜி.பி பிரதான நினைவகத்தைக் கொண்டமையவுள்ளதாக கோவென் எனும் நிறுவனத்தின் முகாமைத்துவ அதிகாரியான ரி மோதி ஆர்கியுரி தெரிவித்துள்ளார்.

மேலும் 4.7, 5.5 அங்குல அளவுடையதான திரையினைக் கொண்ட கைப்பேசிகள் 32,128 மற்றும் 256 ஜி.பி ஆகிய சேமிப்பு நினைவகங்களையும், 5.8 அங்குல அளவுடையதான திரையைக் கொண்ட கைப்பேசி 64 ஜி.பி, 256 ஜி.பி சேமிப்பு நினைவகத்தையும் கொண்டிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 5.8 அங்குலத் திரையினைக் கொண்டதான கைப்பேசியில் இணைப்புப் பெறவுள்ளதான மின்கலத்தின் பாவனைக்காலமானது அதிகப்படுத்தப்பட்டுள்ளதுடன் விரைவாக மின்னேற்றம் பெறக்கூடிய வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.















டேவிட் பீரிஸ் மோட்டோஸ் கம்பனி மற்றும் எசட்லைன் லீசிங் நிறுவனங்களின் புதிய கிளை இல. 61 பலாலி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேற்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

சுவாமிநாதர்

# பின் தங்கிய நிலையில் யாழ்.மாவட்டக் கூட்டுறவுத்துறை

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுத் துறை தற்போதைய சூழ்நிலையில் மிகவும் பின்னோக்கிய நிலையில் செல்கின்றன.

கூட்டுறவுச் சங்கங்களில் செய்யவேண்டிய அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளன.

சங்கங்கள் போதிய வருமானம் இன்றியும் வியாபார நடவடிக்கைகள் இன்றியும் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2000 ஆம் ஆண்டுக்கு பின்னர் சங்கங்கள் இப்படிப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இதற்கான காரணங்கள் கூட்டுறவுத்துறையில் நிலவும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னர் வடக்கின் கூட்டுறவு மிகவும் தலைசிறந்து விளங்கின கொடிகட்டிப் பறந்தன.

விடுதலைப்புலிகளின் காலத்தில் கூட்டுறவுக்கு என பெருமதிப்பு வழங்கப்பட்டன.



### அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம்

கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகவே சகல அத்தியாவசியப் பொருள்களும் மக்களுக்கு வழங்கப்பட்டன. இதன் மூலம் சங்கங்கள் அதிக வருமானத்தைப் பெற்றுக் கொண்டன.

சங்கங்களில் நூற்றுக்கணக்கான பணியாளர்களும் பணியாற்றினார்கள். கிளை நிலையங்களும் கிராமப்புறங்களில் அதிகளவில் செயற்பட்டன.

இதன் மூலம் பணியாளர்களுக்கான கொடுப்பனவுகள் யாவும் சிறப்பாக வழங்கப்பட்டன. கூட்டுறவுக்கு என தனிமதிப்பு அப்போது இருந்தன.

போருக்கு மத்தியில் சிறப்பாகப் பணியாற்றி மக்களுக்குப் பெரும் சேவையாற்றிய கூட்டுறவாளர்கள் அப்போது பாராட்டப்பட்டனர்.

போருக்குப் பின்னரான காலப்பகுதியில் கூட்டுறவு பல்வேறு வழிகளிலும் நசுக்கப்பட்டன. பழைமை வாய்ந்த கூட்டுறவுச் சட்டங்களை சங்கங்கள் மீது திணிப்பதாலும் கெடுபிடிகள், பழிவாங்கல்கள் அதிகரித்திருப்பதாலும் இந்த கூட்டுறவு செத்துப் பிழைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

கூட்டுறவு அபிவிருத்தி செய்யவேண்டும். அதை எவ்வாறு முன்னோக்கிய பாதைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற வார்த்தைப் பிரயோகங்கள் அந்த நிலையே தற்போது ஏற்பட்டுள்ளன.

அப்படியான அக்கறை எதுவும் அதிகாரிகளுக்கு இல்லை கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர் சபையின் கூட்டங்களிலும் மற்றும் மாதாந்தம் நடைபெறும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைவர், பொதுமுகாமையாளர்களுக்கான கூட்டங்களில் சங்கங்களின் தேவைகள் அபிவிருத்திகள் என்பன பற்றிப் பேசப்படுவதில்லை. மாறாக பணியாளர்களை பழிவாங்குவது அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வது பற்றியே பேசப்படுகின்றன. இப்படிப்பட்ட நிலையில் கூட்டங்களில் சங்கங்களின் அபிவிருத்திகள் மற்றும் பேசப்படும் ஏனைய விடயங்கள் பற்றிப் பேசப்படுவதில்லை என்று கூட்டுறவு சங்கத் தலைவர்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

### கேள்விக் குறியாக எதிர்காலம்

இவ்வாறாக ஒரு சூழ்நிலை தற்போது கூட்டுறவில் இடம்பெற்று வருகின்றன. கூட்டுறவு எந்த நிலைக்குச் செல்லும் என்ற கேள்வி ஏற்பட்டுள்ளன. சிறந்த நிர்வாகக் கட்டமைப்புக்கள் இன்மையாலும் அதிகாரிகளின் மேலான கடும் நடவடிக்கையினாலுமே தற்போது கூட்டுறவு பின்னோக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. கூட்டுறவுச் சங்கங்களின் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்பட்டு மக்களால் தெரிவு செய்யப்படும் செயற்றிறன் மிக்க நிர்வாகக் கட்டமைப்புக்களை ஏற்படுத்த வேண்டும். கூட்டுறவு ஆட்சி அதிகாரத்தின் வெளியாளரின் தலையீடுகளும் தற்போது அதிகரித்திருப்பதால் சங்கங்கள் ஏனைய செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாத திரிசங்கு நிலையில் கூட்டுறவுத்துறை எதிர்நோக்கியுள்ளது.

தற்போதைய காலகட்டத்தில் நுகர்ச்சி வியாபாரத்தில் போட்டி ஏற்பட்டுள்ளன.

கூட்டுறவுக்கும் தனியார் வர்த்தகத்துக்கும் ஏற்பட்ட போட்டி வியாபாரத்தினால் சங்கங்களின் நுகர்ச்சி வியாபாரத்திலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளன.

போதிய நுகர்ச்சி வியாபாரம் அற்ற நிலைமையினால் தான் அனேகமான கூட்டுறவுச் சங்கங்கள் நஷ்டத்தில் செயற்படுகின்றன.

நுகர்ச்சி வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதால் அனேகமான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்தமது கிளை நிலையங்களை மூடி உள்ளன.

அத்துடன் பணியாளர்களுக்கான போதிய கொடுப்பனவுகள் வழங்காமையினாலும் அவர்கள் மீது சுமத்தப்படும் தேவையற்ற குற்றச்சாட்டுக்கள் பழிவாங்கல்கள் காரணத்தினால் சிலர் பணியை விட்டு விலகிச் செல்வதும் அதிகரித்துள்ளன.

கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர் சபைகள் வினைத்திறன் மிக்க சபைகளாக செயற்பட வேண்டும்.

இயக்குநர் சபைகளுக்கு இருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி சங்கங்களின் தேவைகள் அபிவிருத்தி போன்றவை குறித்து முழுமையாகச் செயற்பட வேண்டும்.

தற்போதைய நிலையில் இந்த இயக்குநர் சபையில் இளைய சமூகத்தினர் கூடுதலாக உள்வாங்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட நிலையை சங்கங்கள் மாற்றிக் கொள்ள வேண்டும்.

கூட்டுறவுக் கொள்கை மற்றும் அதன் செயற்பாடுகள் போன்றவற்றை அதிகரிக்க இயக்குநர் சபையின் சிறப்புக் கல்விமான்கள் இளையோர் போன்றோரை உள்வாங்க வேண்டும். இதற்கான கூட்டுறவு சட்டங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும். கூட்டுறவுப் பணியாளர்களிலும் சங்கங்களிலும் கூடுதலான விசுவாசம் கொண்ட கூட்டுறவாளர்களை இணைத்துக் கொள்ள வேண்டும்.

### காலத்தின் கட்டாயம்

தற்போதைய காலத்தில் கட்டாயத்துக்கு ஏற்ப இந்தக் கூட்டுறவு கொள்கைகள் மாற்றியமைக்கப்பட்டு சிறந்த கூட்டுறவை ஏற்படுத்த அரசியல்வாதிகள் அதாவது வடக்கின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டும்.

கூட்டுறவு இயக்குனர் சபைகளில் மாறி மாறியும் சிலர் தொடர்ச்சியாக இயக்குநர்களாக இருந்து வருவதும் தவிர்க்கப்பட வேண்டும். புதியவர்களுக்கு இடம் கொடுத்து இளையோர் சிறந்த கல்விமான்களை கூட்டுறவு இயக்குநர் சபைகளில் இணைப்பதற்கு முன் வருவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு கூட்டுறவை மாற்றியமைப்பதன் மூலமே அதன் எதிர்காலத்தை முன்னோக்கிய பாதைக்குக் கொண்டு செல்ல முடியும் என்று கூட்டுறவாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

### அழிவிலிருந்து மீட்சி

யாழ். மாவட்ட கூட்டுறவை அழிவில் இருந்து காப்பாற்றவும் ஆயிரக்கணக்கான கூட்டுறவுப் பணியாளர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டும் செயற்படுத்துவதற்கு வடக்கின் கூட்டு றவு அமைச்சு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள் முன்வர வேண்டும்.

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentionedposts.

Senior Professor/ Professorin **Accounting/ Commerce/ Financial Management / Human Resource Management / Marketing**

Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/Lecturer (Probationary) in **Accounting/ Commerce/ Financial Management/ Human Resource Management / Marketing**

**Instructor in Computer Technology Grade I/Instructor in Computer Technology Grade II**

**Temporary Assistant Lecturer /Temporary Demonstrator inAccounting/ Commerce/ Financial Management/ Human Resource Management / Marketing**

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.128,870 – 11x274– 159010/-p.m |
| Professor | Rs.108490 – 13x2520– 141250/-p.m |
| Senior Lecturer Gr.I | Rs.87415 – 7x2020– 101555/-p.m |
| Senior Lecturer Gr.II | Rs.76275 – 11x1520– 92995/-p.m |
| Lecturer (Probationary) | Rs.53235 – 10x1240 – 65635/-p.m |
| Instructor in Computer TechnologyGr.I | Rs.47760– 19x690 – 60870/-p.m |
| Instructor in Computer TechnologyGr.II | Rs.40920 – 18x615 – 51990/-p.m |
| Temporary AssistantLecturer | Rs. 35556/ p.m. (Fixed) |
| Temporary Demonstrator | Rs. 29190/- p.m. (fixed) |

**Note:**

The above salary scales are fully operative w.e.f 01.01.2020 and the placement of salary applicable to the posts for the years 2017, 2018, 2019 & 2020 will be made in accordance with the University Grants Commission Circular No.17/ 2016 dated 05.12.2016.

In addition to the above salary,

1. The following allowances will be paidas the percentage of the basic salary to the financial value existed as at 31.12.2015:
   i) Academic allowance

| | |
|---|---|
| Senior Professor | - 152% |
| Professor | - 147% |
| Senior Lecturer Gr.I/Gr.II | - 136% |
| Lecturer (Probationary) | - 100% |

   ii) Additional monthly allowance – 20% of the basic salary (for all the post)
   iii) Research allowance - 35% (Payable based on the research activity), (Lecturer-Academic staff)
2. Cost of living allowance of Rs.7,800/-p.m.

**Statutory benefits:**

*I. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above*
*II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system*
*III. Gratuity payments*
*IV. Employees Trust Fund benefits*
*V. Free Medical Services*

**Closing date**(application should reach us on or before the given date):

| | |
|---|---|
| **Post of Senior Professor/ Professor** | **-18.07.2017** |
| **Post of Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) and Instructor in Computer Technology** | **- 31.05.2017** |
| **Other posts** | **- 02.05.2017** |

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- per application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than oneposition should submitseparate application.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA.
18.04.2017

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தூய குடிதண்ணீர் அவசிய மனித உரிமை

சுத்தமான குடிதண்ணீர் என்பது மனிதனின் அடிப்படை உரிமை என்கிறது ஐக்கிய நாடுகள் சபை. 2010 ஆம் ஆண்டு ஐ.நா. எடுத்த தீர்மானத்தில் தண்ணீர் மற்றும் அடிப்படைச் சுகாதாரம் - துப்புரவு - மனித உரிமை என்று அங்கீகரிக்கப்பட்டது. ஒட்டுமொத்த மனித உரிமைகளையும் அனுபவிப்பதற்கு அடிப்படையானவை என்று இந்த இரு உரிமைகளையும் ஐ.நா. அறிவித்தது.

நாள் ஒன்றுக்கு ஆண் 3.7 லீற்றர் தண்ணீரையும் பெண் 2.7 லீற்றர் தண்ணீரையும் அவசியம் பருக வேண்டும் என்று கூறுகின்றது பன்னாட்டு மருத்துவக்கல்வி நிறுவனத்தின் உணவு மற்றும் ஊட்டச்சத்துச் சபை. ஆனால், உலகில் இன்று 783 மில்லியன் மக்கள் (78.3 கோடி) தூய குடிதண்ணீரைப் பெற முடியாதவர்களாக உள்ளார்கள். 60 லட்சம் தொடக்கம் 80 லட்சம் வரையான மக்கள் ஒவ்வொரு வருடமும் தண்ணீரால் ஏற்படும் பேரழிவு களாலும் தண்ணீர் தொடர்பான நோய்களாலும் இறக்கிறார்கள்.

இவ்வாறு தூய குடிதண்ணீர் கிடைக்காத மற்றும் தண்ணீரால் ஏற்படும் நோய்களால் பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கையில் இலங்கையின் வடக்கு வாழ் ஈழ மக்களும் அடங்குவார்கள். வறண்ட இந்தப் பூமியில், குடிதண்ணீருக்குப் பெரும்பாலும் நிலத்தடி நீரையே நம்பியுள்ளோம். எனினும் அந்தத் தண்ணீர் சுத்தமானதாக இல்லை என்று பல ஆண்டுகளுக்கு முன்னரே கண்டறியப்பட்டுவிட்டது. இருந்தாலும் சுத்தமான குடிதண்ணீரை வழங்குவதற்கு கொழும்பு அரசோ, வடக்கு அரசோ கவனம் செலுத்தியதில்லை.

அனைத்து மக்களுக்கும் சுத்திகரிக்கப்பட்ட சுத்தமான குடிதண்ணீரை வழங்குவதற்கான தூர நோக்குத் திட்டங்கள் எவையும் இந்த அரசுகளிடம் இல்லை. இவ்வாறு அரசுகள் கண்ணை மூடிக்கொண்டிருப்பதன் விளைவாக தூய்மையான குடிதண்ணீரைப் பெற முடியாத மக்கள், பெரும் அவலங்களையும் துன்பங்களையும் அனுபவிக்கிறார்கள். கொடிய நோய்களின் பிடியில் சிக்கித் தவிக்கிறார்கள். வவுனியா மாவட்டம் வெண்கலச் செட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவில் உள்ள தட்டான்குளம் கிராமத்தில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று செய்திகள் வந்துள்ளன. தூய்மையான குடிதண்ணீர் கிடைக்காததன் காரணமாகவே அவர்கள் இந்த நோயின் தாக்கத்துக்கு ஆளாகிறார்கள் என்று கூறப்படுகிறது..

இந்தக் கிராமம் மட்டுமல்ல, வவுனியா மாவட்டம் முழுவதுமே இவ்வாறு தூய குடிதண்ணீர் இன்மையால் பெரிதும் நோய் வாய்ப்பட்டுள்ளது. பலரும் அங்கு சிறுநீரக நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாவது சாதாரணமானது என்றாகிவிட்டது.

வடக்கு முழுவதுமே இதுபோன்று தூய குடிதண்ணீர் கிடைக்காமையால் ஏற்படும் பாதிப்புகள் அதிகம். ஆனாலும் அது பற்றிய முழுமையான ஆய்வுகள் செய்யப்பட்டதாக இதுவரையில் தகவல்கள் இல்லை. யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீர், அளவுக்கு மீறிய உரப் பயன்பாட்டாலும் முறைப்படுத்தப்படாத கழிவகற்றல் முறையாலும் ஏற்கனவே மாசுபட்டுள்ளது. ஆனாலும் அனைவரும் அதனையேதான் அருந்த வேண்டியுள்ளது. இதன் காரணத்தாலேயே இலங்கையிலேயே நெருப்புக்காய்ச்சல் அதிகம் பரவும் பகுதியாக யாழப்பாணம் காணப்படுகின்றது.

தூய குடிதண்ணீர் கிடைக்காது சிறுநீரக நோய்ப் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்குக் கொழும்பு அரசு நிதி உதவி உட்படச் சில உதவிகளை வழங்குகின்றது. அவை மட்டுமே அந்த மக்களைக் காப்பாற்றப் போதுமானவையல்ல.

மக்களின் அடிப்படை உரிமையான தூய குடிதண்ணீரை அவர்களுக்குப் போதிய அளவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியதே அரசுகள் எல்லாவற்றினதும் கடமை. அதற்கான தூரநோக்குடனான திட்டங்களைத் தயாரித்து அவற்றைச் செயற்படுத்த வேண்டியதும் அவற்றின் கடமையே.

இந்த விடயத்தில் குறுகிய அரசியல் நலன்கள் புறமொதுக்கப்பட வேண்டும். ஐ.நா. கூறுவதைப்போல மனிதன் தனது எல்லா உரிமைகளையும் அனுபவிப்பதற்கான அடிப்படை உரிமையாகத் தூய குடிதண்ணீர் இருக்கும்போது, அதற்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்பட வேண்டியது அவசியம். குறுகிய பிரதேச மற்றும் அரசியல் நலன்களுக்காக ஒவ்வொருவரதும் அடிப்படை உரிமையையும் நிராகரிப்பது ஏற்புடையதல்ல.

கட்டுரை

# ஜப்பானிலிருந்து திரும்பியதும் தலைமை அமைச்சர் புதுடில்லி பறக்கிறார்

**புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து ஆராய்ந்து முடிவு செய்யப்படும்**

**ஊடகவியலாளர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனை - அரச தலைவர் முன்மொழிவு**

**இரண்டுவாரங்களின் பின் அமைச்சரவை கூடுகிறது**

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
ரெங்கன்

கடந்த இரண்டு வாரங்களில் மிருந்த பிரயாசையுடன் செயற்பட்டு இந்தியாவுடன் செய்து கொள்ளப்படவிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டுவிட்ட தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, ஜப்பானிலிருந்து நாடு திரும்பியதும் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவிருக்கிறார். அங்கு பல அதிகாரபூர்வ நடவடிக்கைகள் அவருக்காகக் காத்திருக்கின்றன. புதுடில்லியில் தமது காரியங்கள் முடிவுற்றதும் அங்கிருந்து வேறொரு நகருக்குத் தனிப்பட்ட பயணம் ஒன்றையும் அவர் மேற்கொள்வார். வெசாக் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருவதற்கு முன்பதாக, இலங்கைத் தலைமை அமைச்சரது இந்தியப் பயணம் இடம்பெறவிருக்கின்றது. புதுடில்லியில் இருக்கும் போது, பல்வேறு விடயங்களை அங்குள்ள அதிகாரிகள், தலைவர்களுடன் விவாதிக்க விருக்கும் ரணில் விக்கிரமசிங்க, முக்கியமாக இருநாடுகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்தும், அது எப்போது கையெழுத்திடப்பட வேண்டும் என்பது பற்றியும் ஆலோசனைகள் நடத்துவார் என்று தெரியவருகின்றது.

“ காலிமுகத்திடலில் கூட்டு எதிர்க் கட்சியினர் மே தினத்தைக் கொண்டாட வாய்ப்புக் கிடைத்திருப்பதானது, அவர்களுக் கிடையில் அதிக பொறுப்புணர்வைத் தூண்டியிருக்கின்றது.

கடந்த வாரம் விக்கிரமசிங்க கொழும்பில் இந்திய வெளிவிவகாரச்செயலாளர் சுப்பிரமணியம் சிவசங்கருடன் இருநாடுகளும் செய்து கொள்ளவிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான சிக்கல்கள் குறித்து ஆராய்ந்திருந்தார். இந்த ஒப்பந்தமானது, திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது, அங்கு பெட்ரோலிய சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பது மற்றும் கொழும்புத் துறைமுகக் கடைக்கோடியில் கொள்கலன் அமைப்பொன்றை நிறுவுவது ஆகியவற்றில் இருநாடுகளும் இணைந்து முதலீடுகளைச் செய்வதற்கு வகை செய்கின்றது. இந்த ஒப்





புதுடில்லியில் தமது காரியங்கள் முடிவுற்றதும் அங்கிருந்து வேறொரு நகருக்குத் தனிப்பட்ட பயணம் ஒன்றையும் தலைமை அமைச்சர் மேற்கொள்வார். வெசாக் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக இந்திய தலைமை அமைச்சர் நரேந்திரமோடி இலங்கைக்கு வருவதற்கு முன்பதாக, இலங்கை தலைமை அமைச்சர் இந்தியப் பயணம் இடம்பெறவிருக்கின்றது. புதுடில்லியில் இருக்கும்போது, பல்வேறு விடயங்களை அங்குள்ள அதிகாரிகள், தலைவர்களுடன் விவாதிக்கவிருக்கும் ரணில் விக்கிரமசிங்க, முக்கியமாக இருநாடுகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்தும், அது எப்போது கையெழுத்திடப்பட வேண்டும் என்பது பற்றியும் ஆலோசனைகள் நடத்துவார் என்று தெரியவருகின்றது.

பந்த வாசகமானது. இரு நாட்டு மக்களது சமத்துவம் மற்றும் பரஸ்பர நன்மைகளை உறுதி செய்யும் அடிப்படையில்கூட்டுமுயற்சிகளிலும்ஒத்துழைப்புச் செயற்பாடுகளிலும் முன்னேற்றகரமான முறையில் பெரிய அளவில் பொருளாதார முதலீடு மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்புக்கு வழிசெய்வதாக இருக்கும் என்று தெரிவிக்கின்றது.

இது இவ்வாறு இருக்க, எதிர்வரும் மேதினக் கூட்டங்களில் அரசைக் கண்டித்துப் பேசுவதற்குக் கூட்டு எதிர்க்கட்சியினருக்கு அம்பாந்தோட்டை அபிவிருத்தித்திட்டமும், இந்தியாவுடன் செய்துகொள்ளப்படவிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் பெரிதும் பயன்படுவதாக இருக்கப் போகின்றன.

**மே தினக் கூட்டம் நடத்த கூட்டு எதிரணியினருக்குக் காலிமுகத்திடல் ஒதுக்கீடு**

கூட்டு எதிர்க்கட்சியினருக்கு காலி முகத்திடலில் மேதினக் கூட்டத்தை நடத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டிருப்பதானது, அவர்கள் மத்தியில் நிலவி வந்த பிரிவு மனப்பான்மையை ஒழித்து ஒன்றுபடச்செய்துள்ளது. மகிந்த ராஜபக்சவும் அவரது சகோதரர்கள் பசில் மற்றும் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரும் பொரலஸ்கமுவவில் சந்திப்பொன்றை நடத்தியிருந்ததன் காரணமாக, கூட்டுஎதிர்க்கட்சியினர் மத்தியில் திருப்தியின்மை தோன்றியிருந்தது. இந்த அமைப்பானது தொழில் அதிபர்களைக் கொண்டதாக கோத்தபாய தலைமையில் செயற்பவதாக இருந்தபோதிலும், அதில் மகிந்தவும், பசிலும் கலந்து கொண்டிருந்தமை கூட்டுஎதிர்க்கட்சியினருக்குத் திருப்தி யளிக்கவில்லை. இது வேறொருஅரசியல் அமைப்பை உருவாக்கும் முயற்சியாக இருக்கலாம் என்று அவர்கள் கருதத் தலைப்பட்டனர். சிலர் இது பற்றிக் கேள்விகளும் எழுப்பினார்கள்.

மே தினத்துக்காக கூட்டு எதிரணிக்கு காலிமுகத்திடல் ஒதுக்கப்பட்டுள்ளமை, அவர்களுக்குக்கிடையில் அதிக பொறுப்புணர்வைத் தூண்டியிருக்கின்றது. காலிமுகத்திடலின் விசாலமான இடப்பரப்பை மக்கள் வெள்ளத்தினால் நிரப்பி, தங்களுக்கு மக்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கை வெளிக்காட்டவேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்காக முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவும், மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தன மற்றும் பிரமுகர்களும் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று பரப்புரைகளை நிகழ்த்தி வருகிறார்கள். கூட்டு எதிர்க்கட்சியில் இருப்பவர்களை மட்டுமன்றி இதில் உறுப்புரிமை பெறாத அமைப்புக்களையும் மே தினக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் செய்விப்பதில் அவர்கள் கவனம்செலுத்துகின்றார்கள்.

கூட்டு எதிர்க்கட்சியின் காலிமுகத்திடல் மேதி னக் கூட்டத்தில் நிறைவேற்றப்படவிருக்கும் முக்கிய தீர்மானங்களில் அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் திருகோணமலைத் துறைமுகம் என்பவை முறையே சீன நிறுவனம் மற்றும் இந்தியாவுக்கு வழங்கப்படவிருப்பதற்கு எதிரானதும் ஒன்றாகும் என்று தினேஷ் குணவர்தன கூறியிருக்கிறார்.


**அமைச்சரவை கூடுகிறது**

புதுவருட விடுமுறை காலம் முடிவுற்றுள்ளமையால் கடந்த இரு வாரங்களாக நடைபெறாதிருந்த அமைச்சரவைக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது அமைச்சரவை மாற்றத்துக்கு முன்னராக இடம்பெறவுள்ள அமைச்சரவைக் கூட்டமாகும். அமைச்சரவை மாற்றம் பெரும்பாலும் மேதினத்துக்கு முன்பதாக நடைபெறலாம் என்று தெரிகின்றது. இருந்தாலும் 25ஆம் திகதிய அமைச்சரவைக் கூட்டத்துக்கு முன்பா? பின்னரா? அது இடம்பெறும் என்பது தெளிவில்லாமல் இருக்கின்றது. இந்த மாற்றங்கள் பற்றி அறிந்துள்ள இரண்டுபேர் உள்ளனர் என்றால் அவர்கள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவும் மட்டுமே. ஏனையவர்களுக்கு இதுபற்றிஎதுவுமே தெரியாது.

வரும் நாள்களில் அமைச்சரவையின் ஆலோசனைக்கு வரவிருக்கும் இன்னுமொரு முக்கிய விடயம் என்னவென்றால், ஊடகவியலாளர்களுக்கு வழிகாட்டும் ஒரு முன்மொழிவாகும். இதனை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவே முன்வைக்கவிருக்கின்றார். தேர்தலொன்று அல்லது மக்கள் கருத்துக் கணிப்பு நடைபெறும்போது ஊடகவியலாளர்கள் பின்பற்ற வேண்டியதான ஒரு வழிகாட்டலாக இது இருக்கும். ராஜபக்ச காலத்தில் இது பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தாலும், அதன் உள்ளடக்கம் தொடர்பில் ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடப்படவுமில்லை, மக்கள் மத்தியில் பரப்புரை செய்யப்படவுமில்லை. இந்த வழிகாட்டல் முன்மொழிவானது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் இரண்டையும் உள்ளடக்குவதாக இருக்கும்.

தேர்தல் சட்டத்தில் ஒருதிருத்தமாக இந்த யோசனை அறிமுகப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வரவிருக்கும் அமைச்சரவை மாற்றங்களைப் பலர் விரும்பவில்லையென்றாலும் இந்த மாற்றம் அரசின் அரசியல் முகத்தை மாற்றி அமைக்கும் என்று நம்பப்படுகின்றது.





# வாசகர் திருமுகம்

## யாழ். அரசசெயலகக் கட்டடவளாகத்திலிருந்து மலக்கழிவுகள் எவையும் அகற்றப்படுவதில்லை

கடந்த 2017.03.28 ஆம் திகதிய உதயனின் 'வாசகர் திருமுகம்' பகுதியில் "மக்களுக்கு இடையூறின்றி மலக்கழிவகற்றல் மேற்கொள்ளப்பட வேண்டும்" என்ற தலைப்பில் வெளியான கடிதம் தொடர்பாக யாழ். மாவட்ட அரச அதிபர் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். அவ்வப்போது செயலகத்தில் அன்றாடம் உபயோகத்தின் பின்னரான கழிவுப் பொருள்களும், அவை தரம் பிரிக்கப்பட்டுத் தொட்டிகளில் இடப்பட்டு அவையே மாநகர சபை ஊழியர்கள் மூலம் அகற்றப்பட்டு வருகின்றன.

மலக்கழிவுகள் எவையும் இந்த இடத்திலிருந்து அகற்றப்படுவதில்லை என்பதையும் தங்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். குறித்த கடிதத்தை எழுதிய வ.க. ஜெயபாலன் என்பவர் ஒரு சமாதான நீதிவானாக இருந்து கொண்டு, இவ்வாறு உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டுள்ளமை அவரது நடுநிலைமைப் போக்கை கேள்விக்குரிய தாக்கியிருக்கிறது என்பதனையும் குறிப்பிட விரும்புகின்றேன். இது குறித்து தங்கள் பத்திரிகையில் இது தொடர்பான உண்மை நிலையைப் பிரசுரிப்பின் நன்றியுடையவனாக இருப்பேன், என அந்தக் கடிதத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

## முயன்றால் முடியாது என்றில்லை

'உலக சைவ மாநாடு 3 தினங்கள் யாழ். பல்கலையில்' என்கின்ற செய்தியும், '2 ஆலயங்களின் திருவிழாவை ஒரே காலத்தில் நடத்த எடுத்த முடிவுக்கு ஊர் மக்கள் எதிர்ப்பு. மல்லாகம் நீதிமன்றில் விசித்திர வழக்கு' என்கின்ற எமது சமயம் சார் செய்தியும் ஒரே நாளில் ஒரே பக்கத்தில் அருகருகே உதயன் பத்திரிகையில் வெளியாகியிருந்தன. ஒருபுறம் சைவம் பல்கல்லைக்கழகத்தில் புகும் அதேவேளை, மறுபுறத்தில் "கோர்ட்" ஏறுகின்ற நிலமையையும் காண்கிறோம். பல பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் நிலையங்களாக ஆலயங்கள் திகழ்ந்த காலம் ஒன்றிருந்தது. இவை பற்றிப் பகிரங்கமாக எழுதுதல் தெய்வ நிந்தனையை ஏற்படுத்தி விடுமோ என்கின்ற பயமும் எனக்குண்டு. இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்க மாற்று வழி ஏதேனும் உண்டா எனச் சிந்திக்கத் தூண்டுகின்றது. மற்றொரு விதத்தில் கூறவதானால், பல்கலைக்கழக இந்து பீடத்தினரோ அல்லது நாட்டிலுள்ள வேறு ஏதாவது இந்து மத அமைப்புக்களைச் சேர்ந்தவர்களோ இத்தகைய பிரச்சினைகளைத் தீர்த்து பக்தர்கள் வயிற்றில் பால் வார்க்க நடவடிக்கை எடுப்பார்களா?

*செ.ராஜா*

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | | 9 | | | |
| | | 9 | 2 | 3 | | 8 | | |
| | | | | | | 9 | 2 | 7 |
| 8 | 3 | | | | | | | 1 |
| | | | | | | 5 | | |
| | | | 8 | | 6 | | | 2 |
| | 4 | | 1 | | | | | 5 |
| 6 | | | | | 8 | | 7 | |
| 9 | | 1 | | 5 | | | | 8 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 3 | 1 | 8 | 6 | 2 | 5 | 9 |
| 8 | 6 | 9 | 2 | 5 | 4 | 3 | 1 | 7 |
| 1 | 2 | 5 | 3 | 9 | 7 | 8 | 4 | 6 |
| 7 | 8 | 2 | 6 | 4 | 1 | 5 | 9 | 3 |
| 3 | 9 | 4 | 7 | 2 | 5 | 6 | 8 | 1 |
| 6 | 5 | 1 | 9 | 3 | 8 | 4 | 7 | 2 |
| 2 | 1 | 8 | 5 | 7 | 3 | 9 | 6 | 4 |
| 9 | 4 | 6 | 8 | 1 | 2 | 7 | 3 | 5 |
| 5 | 3 | 7 | 4 | 6 | 9 | 1 | 2 | 8 |

நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

கோழியின் கிறுக்கல்!! Retweeted
ராவணன் @navaneetha172 · 17h

விடுமுறை விட்டதும் வீட்டில் திட்டு வாங்கிவிட்டு மண்டை காய வெயிலில் கோலி குண்டு (போளை) விளையாடிய சந்தோசம் இன்றைக்கு எத்தனை குழந்தைகளுக்கு கிடைக்கும் என்று தெரியவில்லை.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உற்சாக மனப்பான்மையுடன் பணியாற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். லாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**இடபம்:** சிலரது பேச்சால் சங்கடத்திற்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைப்பதில் தாமதம் உண்டாகும்.

**மிதுனம்:** திடீர் அவசரப் பணியால் சிரமப்படலாம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி குறுக்கிடும். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள், பிள்ளைகளின் வழியில் செலவு செய்வர்.

**கடகம்:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரிடம் பரிசு, பாராட்டு காண்பர். பெண்கள் ஆடை ஆபரணம் வாங்க யோகம் உண்டாகும்.

**சிங்கம்:** மனதில் இருந்த குழப்பம் நீங்கும். வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கன்னி:** சிலர் சுயநல எண்ணத்துடன் நெருங்கிப் பழகுவர். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து ஓரளவு விடுபடுவர்.

**துலாம்:** அறிமுகம் இல்லாதவரிடம் உதவி கேட்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில் வளர்ச்சியால் ஆதாயம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர். மாமன், மைத்துனருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள்.

**தனுசு:** நண்பரின் செயலை விமர்சிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். எதிர்பார்த்த சுப செய்தி தாமதமாகலாம்.

**மகரம்:** நேர்மை எண்ணத்துடன் செயல்படுவீர்கள். முயற்சி முழு அளவில் வெற்றி பெறும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உண்டாகும். உறவினர் இல்ல சுபநிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

**கும்பம்:** எவரிடமும் குடும்ப விடயத்தைப் பேச வேண்டாம். பணியாளர்கள், சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர். மாணவர்கள் பாதுகாப்பு குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**மீனம்:** வாழ்க்கைத்தரம் மேம்படும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

பெண்களின் கண்கள் எப்போதும் நகைக்கடை, துணிக்கடை மீது பதிந்து இருப்பதால்தான் அவர்களின் பார்வை கடைக்கண் பார்வை.



**துலாம் ராசி அன்பர்களே....**
கொஞ்சம் கவனமாக இருந்து கொள்ளுங்கோ...! யாருக்கும் வாக்குறுதியோ பிணையோ கொடுக்காதீங்க...




ஆஹா...! ஏதோ பிளான் பண்ணிட்டாங்க... எவனிட்டையும் சிக்காமல் இருக்கணும் சாமி...

**விருச்சிக ராசி அன்பர்களே....**
பணியில் தேவையற்ற பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதால் எதிலும் கவனமாகச் செயற்படுவது நல்லது




பேசினால் தானே...! நான் நாளையில் இருந்து மௌன விரதம்.




# நயன்தாரா

பெரியசாமி இயக்கவுள்ள புதிய படத்தில் தடகள வீராங்கனை கதாபாத்திரத்தில் நயன்தாரா நடிக்க உள்ளார். 'லேடி சுப்பர் ஸ்டார்' என்ற பட்டப் பெயருக்கு ஏற்றவாறு, தொடர்ந்து கதாநாயகி கதாபாத்திரத்துக்கு முக்கியத்துவம் உள்ள படங்களாக தேர்ந்தெடுத்து நடித்து வருகிறார் நயன்தாரா. அண்மையில் கதாநாயகிக்கு முக்கியத்துவம் இருந்த படமான டோராவும் அவருக்கு வெற்றிப்படமாக அமைந்துள்ளது. இந்த நிலையில் மீஞ்சூர் கோபி இயக்கத்தில் உருவாகியுள்ள "அறம்" திரைப்படத்தில் மாவட்டச் செயலர் கதாபாத்திரத்தில் நயன்தாரா நடித்துள்ளார். இந்தப் படம் தற்போது படப்பிடிப்பு முடிந்து, வெளியீட்டுக்குத் தயாராக உள்ளது.

இந்தப் படத்துக்குப் பிறகு பெரியசாமி என்பவர் இயக்கும் இன்னும் பெயரிடப்படாத புதிய படத்தில், தடகள வீராங்கனையாக நயன்தாரா நடிக்க உள்ளார். இந்த படங்கள் தவிர கொலையுதிர் காலம், வேலைக்காரன் ஆகிய படங்களிலும் நயன்தாரா நடித்து வருகிறார்.




## ராசிகளுக்கான சித்திரைப் புத்தாண்டுப் பலன்கள்

### கும்பம்

நடப்பு வருடமானது உங்களது திட்டங்களுக்குச் செயல்வடிவத்தைக் கொடுக்கும். வருடம் பிறக்கும் கால நேரத்தைக் கணக்கிடும்போது உங்கள் ராசியில் அமர்ந்திருக்கும் செவ்வாயின் துணையால் எடுத்த காரியத்தில் தொய்வின்றிச் சுறுசுறுப்புடன் செயற்பட்டு வருவீர்கள். போட்டியாளர்கள் மத்தியில் உங்களின் செயல்வேகம் சிறப்பான வெற்றியைப் பெற்றுத் தரும். எதிரிகள் காணாமல் போவார்கள். பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள். உங்களுடைய உழைப்பு அசையாச் சொத்துக்களாக உருமாற்றம் பெறும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும்.

சென்ற வருடத்தில் உங்களோடு கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்து சென்ற நண்பர்களும், உறவினர்களும் மீண்டும் வந்து சேருவார்கள். நீங்கள் முன்னின்று செய்யும் காரியங்கள் சிறப்பான வெற்றி பெறும். பொதுக்காரியங்களில் உங்களின் செயற்பாடுகளால் கௌரவம் உயரும். விசுவாசமானவர்கள் துணையுடன் எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். உடன்பிறந்தோர் உதவியாய் இருப்பார்கள். அந்நிய தேசத்தில் வசிக்கும் பெண்களால் நன்மை உண்டாகும். கடன்பிரச்சினைகள் முற்றிலுமாகக் குறையும்.

நெடுநாள்களாக இழுபறியில் இருந்த தொகைகள் வசூலாகும். பிள்ளைகளின் வாழ்க்கைத் தரம் உயரும். உங்களின் வார்த்தைகள் அடுத்தவர்களுக்குச் சிறந்த அறிவுரையாக அமையும். உங்கள் ஆலோசனைகள் வெற்றி பெறும். ஆதாயம் தரும் தொலைதூரப் பிரயாண வாய்ப்பு உண்டு. பெற்றோர் உடல்நிலையில் சிறப்பு கவனம் அவசியம். அநாவசிய செலவுகள் முற்றிலுமாகக் குறையும்.

மாணவர்களுக்கு அயராத உழைப்பு அவசியம். கூடுதல் எழுத்துப் பயிற்சி அவசியம். மருத்துவம், மொழிப்பாடங்கள், ஆசிரியர் பயிற்சி, உடற்கல்வி துறைகளைச் சார்ந்த மாணவர்கள் முன்னேற்றம் காண்பார்கள்.

பெண்களுக்குப் பொறுப்புணர்ச்சி கூடும். குடும்பப் பெரியவர்களிடம் நற்பெயர் கிடைக்கும். பிள்ளைகளின் நடவடிக்கைகளில் சிறப்புக் கவனம் செலுத்துவீர்கள். உங்கள் வெற்றிக்கு கணவரின் ஆலோசனைகள் பயன் தரும்.

உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு இருக்கும். நற்பெயர் கிடைக்கும். சுயதொழிலில் குளிர்பான பொருள்கள், உணவு சம்பந்தப்பட்ட பொருள்கள் வியாபாரம், ஆட்டோ மொபைல், பொன், வெள்ளி தொழில் சிறப்பான தனலாபம் காண்பார்கள்.

தொழிலில் உறுதித்தன்மை உண்டாகும். வருடத்தின் பிற்பாதியில் நற்பெயரையும், புகழையும் சம்பாதிக்கும் உங்களுக்கு முற்பாதியில் ஓய்வில்லாது செயற்பட வேண்டிய சூழல் உருவாகும். 2017ஆம் ஆண்டு உங்களின் வாழ்வில் மறக்கமுடியாத ஆண்டாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**பரிகாரம்:**

தியானம், யோகா பயிற்சிகள் நிம்மதி தரும். ஞாயிறு தோறும் ராகுகாலத்தில் அம்மன் ஆலயத்தில் அகல் விளக்கேற்றி வழிபடவும்.



## உடல் பளபளப்புக்கு வெண்டைக்காய்

★ மருத்துவக் குணம் கொண்ட காய்களில் முக்கியமானது, வெண்டைக்காய். பல நோய்களைப் போக்கும் தன்மை உள்ளது. வெண்டிக்காயில் உள்ள உயர்தரமான பொஸ்பரஸ், புத்தி சூர்மையை அதிகரிக்கச் செய்கிறது. உயர்தரமான பொஸ்பரசுடன் ஒட்டிக் கொள்ளக்கூடிய ஒருவிதமான தாவர பசைப்பொருளும், நார்ப்பொருளும் வெண்டைக்காயில் உள்ளது.

★ எளிதில் குருதியால் உட்கிரகிக்கப்பட்டு, சக்தியாக மாறும் மாச்சத்தும், இதில் உள்ளன. உடலில் உள்ள கெட்ட கொழுப்பை கரைக்கும் 'பெக்டின்' என்னும் நார்ப்பொருளும் இதில் இருக்கிறது. இதயத்துடிப்பைச் சீராக்கும் மக்னீசியம் இருக்கிறது. 100 கிராம் வெண்டைக்காயில் கிடைக்கும் கலோரி, 66 ஆகும். இத்தகைய காரணங்களால், வெண்டைக்காய் முக்கியமான காய்கறியாகத் திகழ்கிறது.

★ வெண்டைக்காயின் சிறப்பு குணமே கொழகொழப்புதான். இதிலுள்ள ஒருவித அமிலம் இதை உண்டாக்குகிறது. சில வகையான வெண்டையில் மெல்லிய ரோமங்கள் போல் காணப்படும். இதை நன்றாக கழுவி பேப்பரால் துடைத்து விட்டு நறுக்க வேண்டும். நறுக்கி நீரில் போட்டு விடக்கூடாது. ஏன் என்றால், அதில் இருக்கும் திரவம் வெளியேறி சமைக்கும்போது சுவை குறைந்து விடும்.

★ வெண்டைக்காயின், இலை, விதை, வேர் ஆகிய அனைத்துமே மருத்துவக் குணங்கள் நிரம்பியவை. இதில் உள்ள நார்ப்பொருள்களால் மலச்சிக்கல் நீங்கும். இதனால் குடல் சுத்தமாவதோடு, வாய் துர்நாற்றமும் அகலும். மலச்சிக்கல், காய்ச்சல் போன்றவற்றால் யாராவது அவதிப்பட்டால், பிஞ்சு காய்களை, மோர்க் குழம்பாகத் தயாரித்து உணவில் சேர்த்துக் கொண்டால் பயன் கிடைக்கும்.

★ இது உடல் நலனுக்கு ஏற்றது. குடற்புண்ணைக் கட்டுப்படுத்துகிறது. வாயு கோளாறுகளைத் தடுக்கிறது. வெண்டைக்காயை நன்றாக வேக வைத்து அந்த நீரை கூந்தலில் தடவி வர கூந்தல் உதிர்தலை தடுக்கும். இளம் வெண்டைப் பிஞ்சுடன், சர்க்கரை சேர்த்து, சாறுபோல் தயாரித்து அருந்தினால் இருமல், நீர்க்கடுப்பு, எரிச்சல் முதலியவை தணியும். சிறுநீர் நன்கு பிரியவும், உடலுக்கு குளிர்ச்சியைத் தரவும், தோல் வறட்சியை நீக்கவும் உடலை பளபளப்பாக மாற்றவும், அரிய மருந்தாகவும் வெண்டைக்காய் திகழ்கிறது.

★ தயிரில் உள்ளதைப்போல இந்த பக்றீரியாக்கள் உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கின்றன. இதில் விற்றமின் பி' காணப்படுகிறது. வெண்டைக்காயை, குழந்தைகளுக்கு வதக்கி உணவில் சேர்த்துக் கொடுக்கலாம். குழந்தைகளின் நினைவாற்றலை அதிகரிக்கும். மூளை வளர்ச்சிக்கு ஏற்றது.

★ புத்திக்கூர்மை அதிகரிக்க அனைத்து வயதினரும், வாரத்துக்கு இரண்டு அல்லது மூன்று நாள்கள், இந்தக் காயை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம், மினுமினுப்பான தோலையும் பெறலாம்; உடலை, சுறுசுறுப்பாகவும் வைத்துக் கொள்ளலாம். வயிற்றுப்புண் குணமாக வெண்டைக்காய் நல்ல மருந்து.

★ வெண்டைக்காய், மஞ்சள், சுண்டைக்காய் வற்றல், சீரகம், கடுகு, வெங்காயம், பூண்டு, பட்டை, கருஞ்சீரகம் ஆகியவற்றை சேர்த்து, அரிசியுடன் கலந்து கஞ்சியாகக் கொதிக்க வைத்து, தயிருடன் கலந்து வர, வயிற்று உபாதைகள் நீங்கும். குழந்தைகளை, சிறு வயதிலிருந்தே சாப்பிட கொடுத்தால், பல்வேறு நோய் உபாதைகளிலிருந்து, தற்காத்துக் கொள்ள உதவும்.




பெண்கள் அணியும் கைப் பைகளில் புது வடிவிலானவை தற்போது ச்ந்தைக்கு வந்துள்ளன. தரமான லெதர் தன்மையுடையதாக அமைந்துள்ளமையினால் இவற்றின் பாவனைக் காலம் கூடுதலாக உள்ளது. இவை 2 ஆயிரத்து 800 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## வரலாற்றில் இன்றைய தினம்

### 20.04.2017

1657- பின்னர் நியூயோர்க் என அறியப்பட்ட நியூ அம்ஸ்ரடாமில் யூதர்களுக்கு மதச் சுதந்திரம் அளிக்கப்பட்டது.

1810 - ஸ்பெயினிடமிருந்து சுதந்திரம் அடைந்ததாக கரகாஸ் ஆளுநர் பிரகடனம் செய்தார்.

1902 - பீரி மற்றும் மேரி கியூரி ஆகியோரால் றேடியம் குளோரைட் பிரித்தெடுக்கப்பட்டது.

1946- ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துக்குத் தனது அதிகாரங்களை வழங்கி லீக் ஒப்நேஷன் உத்தியோகபூர்வமாகக்கலைக்கப்பட்டது.

1993- இயக்கச்சிப் பகுதியில் முன்னேற முயன்ற இராணுவத்தை புலிகள் திருப்பி யனுப்பினர்.

1995 - அமெரிக்காவில் கார் குண்டுவெடிப்பு 170 பேர் சாவு. கட்டடங்கள் நாசம்.

1997 - பிரபாவின் ஒத்துழைப்பின்றி சமாதானம் ஏற்பட முடியாதென தலைமை அமைச்சர் சிறிமாவோ தெரிவிப்பு.

1999 - கொலம்பியன் உயர் பாடசாலையில் எரிக்ஹரிஸ் டைலன் கிளிபோல்ட் ஆகியோர் 13 பேரைக் கொன்று 24 பேரைக் காயப்படுத்தியபின் தற்கொலை செய்து கொண்டனர்.

2000 - ஆனையிறவுக்கு வடக்கே கடும் சமர். கிபிர் விமானங்கள் குண்டு வீச்சு.

2002- புரிந்துணர்வுஉடன்படிக்கைமீறல்பற்றி 60 முறைப்பாடுகள் கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் தகவல்.

2002 - நிமலராஜன் கொலை தொடர்பாக 2பேர் விரைவாகக் கைதாகலாம் எனத் தெரிவிப்பு. பாதுகாப்புத் தகவல்களை மேற்கோள்காட்டி கொழும்பு சிங்களப் பத்திரிகை தகவல்.

### நாளை

**சித்திரை-08**
வெள்ளிக்கிழமை -21.04.2017
திதி: தசமி பி.இ.01.08
நட்சத்திரம்: அவிட்டம் மு.இ.10.59
சுபநேரம்:06.01-07.31 வரை
ராகுகாலம்:10.31-12.01 வரை

## தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு கணக்காளர்தேவை. (பெண்கள்மட்டும்விண்ணப்பிக்கவும்)

**தகைமைகள்**

**கணக்காளர் (உதவியாளர்)**

* **க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்**
* **ஆங்கிலம் எழுத ,பேச தெரிந்திருக்கவேண்டும்**
* **வருமான வரிக்கணக்குகள் தொடர்பான பூரண அறிவுடையவராக இருத்தல் வேண்டும்**
* **கணகாய்வு நிறுவனத்திலோ அல்லது நிதி நிறுவனத்திலோ கணக்காய்வு உதவியாளராக பணிபுரிந்திருதல் வேண்டும்.**
* **கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.**
* **வயதெல்லை 21 -30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும் .**


மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிவரக்கோவை, அடையாள அட்டை போட்டோபிரதி, சான்றிதழ்களின் போட்டோபிரதி ஆகியவற்றை இணைத்து 30.04.2017இற்கு முன்னதாக கீழ்க் குறிப்பிட்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இல. 5531,மே/பா,உதயன்.**
**361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்கள்

### சவரிமுத்து கிரகறி யோகராஜசிங்கம்

*(கராத்தே மாஸ்டர் - யோகு மாமா)*



மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து கிரகறியோகராஜ சிங்கம் நேற்று (19.04.2017) புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து செல்வசிங்கம், செபமாலை மேரி செல்வசிங்கம் தம்பதியரின் அன்பு மகனும் யோகராஜ. இராஜதேவியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் அவரது இல்லத்தில் இன்று (20.04.2017) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக உடுவில் மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முத்துக்கிருஸ்ணலேன்,**
**சுன்னாகம்.**

**தகவல்: மனைவி**
**கி.ஜோ. இராஜதேவி**
**(தையல் ஆசிரியர்) 077 972 0267**

### செல்லப்பா கந்தையா



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, கொக்குவில், பிடாரி அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கந்தையா நேற்று (19.04.2017) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் தவமணி(கிளி), பாஸ்கரன், சந்தி, செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகேந்திரம், சண்முகம், நஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனும் சிவதர்ஷன், கௌரிஷன். கௌமிகா, சசியா, றொசான், சஞ்சய், சானு, சாந்தி, பௌசி, மது ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2017) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

**சிவன்கோயிலடி**
**077 990 9235**

**தகவல்:**
**கந்தசாமி சண்முகம்**










## பொதுக்கூட்டம்

### வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயம்

**இடம்: ஆலய முன்றில்**
**காலம் : 30.04.2017 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம்: மு.ப10.00 மணி**

மேற்படிஆலயத்தின்வருடாந்த ஒன்றுகூடலும்புதியநிர்வாக சபைத் தெரிவும் வருடாந்த கணக்கறிக்கை மற்றும் அபிவிருத்தி தொடர்பான விடயங்களோடு வருடாந்த மகோற்சவம் தொடர்பாகவும் கலந்துரையாட இருப்பதால் பரிபாலன சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**-பரிபாலன சபை-**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி(பாக்கியம்) பாலசிங்கம்



நாச்சிமார்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி (பாக்கியம்)பாலசிங்கம் (மெக்கானிக் பாலா) நேற்று (19.04.2017) புதன் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"தாயகம்"**
**1022,கே.கே. எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**பிள்ளைகள்.**
**நிம்மி,ரவி**

### திருமதி அகிலாண்டேஸ்வரி சாம்பசிவ ஐயர்

திருமதி அகிலாண்டேஸ்வரிசாம்பசிவ ஐயர்நேற்று (19.04.2017) புதன்கிழமை காலை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாம்பசிவஐயரின் A.G.A (முன்னாள் Assistant Government Agent மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை) மனைவியும் காலஞ்சென்ற மாவிட்டபுரம் (ராசகுருக்கள்) திரு. திருமதி வைத்தியநாதக்குருக்களின் மகளும் மானிப்பாயை சேர்ந்த திரு. திருமதி வெங்கடேச ரத்தினசாமி குருக்களின் அன்பு மருமகளும் கிரி ,சுபா, ரத்னா, ராஜீ ஆகியோரின் அன்புத்தாயும் வத்சலா, சந்திரசேகரன், ராஜசேகரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் மதுரா, யாதவ், வாணி, நிமேஷன், அஸ்வஜித், வேதர்ஷன், சிவஸ்கந்தன், அனந்தஜித், ஜானுவி, புஷ்பிந்தர் ஆகியோரின் பாட்டியும் திருமதி சொர்ணாம்பாள் , திருமதி வடிவாம்பாள், சுப்ரமணியக்குருக்கள், ஐயாசாமிசர்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும்காலஞ்சென்றவர்களான திருமதிகார்த்தியாயினி பாலசுப்பிரமணியஐயர், சீதாபதி ஐயர், திருமதி கிரிஜா சுப்ரமணியம் , ராமசாமிஐயர்மற்றும்சண்முகதாசஐயர் ஆகியோரின்மைத்துனியும் ஆவார்.

அன்னாரின்பூதவுடல்இறுதிஅஞ்சலிக்காகஇன்று(20.04.2017) வியாழக்கிழமை "Academy Family Funeral Services" இல .10. Janel Street ,Black Town NSW 2148 இல் மு.ப 11.00 மணியில் இருந்து பி.ப 1:30 மணிவரை வைக்கப்படும்.

**தொடர்புகளுக்கு**
**ஆஸ்திரேலியா**
**+6146 9849 309**

**தகவல்:**
**கிரி(மகன்) மற்றும்**
**குடும்பத்தினர்.**

*பணியாளர்களுக்கு...*

திணைக்களம் வழங்கியுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபை அமைக்கப்பட்ட பின்னர், வடக்கு மாகாணத்தின் கூட்டுறவு நிலைமை தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

வடக்கு மாகாணசபை கூட்டுறவு அமைச்சுப் பொறுப்பேற்கப்பட்ட பின்னர் புதிதாக எந்தவொரு சங்கங்களும் திறக்கப்படவில்லை. அதேவேளை சங்கங்களும் மூடப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் 11 சங்கங்களும், கிளிநொச்சியில் 3 சங்கங்களும், முல்லைத்தீவு, வவுனியாவில் ஓர் சங்கமும், மன்னாரில் 2 சங்கங்களும் நட்டத்தில் இயங்குவதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், யாழ்ப்பாணத்தில் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலையப் பணியாளர்களுக்கு மட்டும் சம்பளம் வழங்கப்படுகின்றது. ஏனைய பணியாளர்களுக்குக் கடந்த 4 மாதமாக சம்பளம் வழங்கப்படவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில், கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த இரண்டு மாதமாகச் சம்பளம் வழங்கப்படவில்லை. கரைச்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தொழிற்பாடு குறைவடைந்து பணியாளர்கள் விலகிச் சென்றுள்ளனர். ஒரு பணியாளர் மட்டுமே பணிபுரிகின்றார். கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான உணவு விநியோகம் மட்டும் நடைபெறுகின்றது.

மன்னார் மாவட்டத்தில், முசலி வடக்கு தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தொழிற்பாடு குறைவடைந்துள்ளது. பணியாளர்கள் விலகிச் சென்றுள்ளனர். ஒரு பணியாளர் மட்டுமே பணிபுரிகின்றார். பாடசாலைகளுக்கான உலக உணவுத் திட்ட விநியோகம் மட்டும்நடைபெறுகின்றது என்றுவழங்கப்பட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

*பாடசாலை...*

இதற்கான அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் மற்றுமொரு சிகரெட் நிறுவனத்தைப் பதிவு செய்யத் தயாராகி வருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் முன்வைக் கப்பட்ட குற்றச்சாட்டு பொய்யானது. எதிர்காலத்தில் புதிதாகச் சிகரெட் நிறுவனங்க ளுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது - என்றார்.

(த-5)

## கடைகள் வாடகைக்கு

யாழ் நகரின் மத்தியில் கடைகள் வாடகைக்குண்டு

**தொடர்பு.077 7651826**

## நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு

அல்சேசன் (ஜேர்மன் சப்பட்) வகையைச் சேர்ந்த நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. **தொடர்பு-077 7112412**

## வேலையாள்கள் தேவை

எமது கட்டட நிர்மாண வேலை ஆலோசனை நிறுவனத்திற்கு.

1) பலகை வேலை செய்பவர்கள் - (இரண்டாவது மாடி) (Shuttering work)
2) வெல்டிங் வேலையாள்கள் - (இரும்பு கூரை வேலை) (welders)
3) அலுவலக உத்தியோகத்தர் (கணினி/ கணக்கியல் அறிவு)

**தொடர்பு.0772330790**

## வேலைவாய்ப்பு

உணவு, தங்குமிடம் தரப்படும். அத்துடன் நாள் சம்பளம் ரூ.1600 நாள் சம்பளம், கிழமைச் சம்பளம், மாத சம்பளம் பெற்றுக்கொள்ளலாம். ஐஸ்கிறீம், பிஸ்கட், யோகட்.சோசேஜஸ், பவர் சப்ளை, வர்ணபூச்சு தயாரிக்கும் நிறுவனங்களுக்கு லேபல் பிரிவுகளுக்கு ஆண், பெண் (18-60) வயது உட்பட்டவர்கள் தொடர்பு கொள்ளலாம். **வன்னி.075 562 9961**

**யாழ் . 076 571 5235, 077 401 7543**

2000 - 3000 ரூபா கொடுத்து Agency ஐ நம்பி ஏமாறாதீர்கள். இதோ எங்களிடம் மட்டும் தான் சரியான நிறுவனம் உண்டு. மாதச் சம்பளம் கிடைக்கும் வரை பார்த்துக் கொண்டு இருக்கத் தேவையில்லை. நாள் சம்பளம் 1600/= ஆண், பெண் வயது (18-60) உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். லேபல், பொதியிடல் பிரிவுகளுக்கு.

**வன்னி.077 434 3753**

**யாழ் .077 818 1513 , 071 147 5324**

*நான்கு...*
குழந்தைக்குக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. திருகோணமலை வைத்தியசாலையில் குழந்தை சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை வெற்றியளிக்கவில்லை. இதனால் குழந்தை யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலைக்கு நேற்று அதிகாலை 3மணியளவில் மாற்றப்பட்டபோது உயிரிழந்திருந்ததாகப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது.
திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிரேமகுமார் விசாரணை மேற்கொண்டு சடலத்தைப்பெற்றோரிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார். (து-4)

*கொழும்பு...*
பிரிட்டனில் நாடாளுமன்றத் தேர்தல் அறிவிப்பு நேற்றுமுன்தினம் திடீரென வெளியிடப்பட்டது. இதனையடுத்து, அலோக் சர்மாவின் இலங்கைப் பயணம் கைவிடப்பட்டதுஎன்றுகொழும்பிலுள்ளபிரிட்டன்தூதரகம் நேற்றுத் தெரிவித்தது.
இன்றுதொடக்கம்எதிர்வரும் சனிக்கிழமை வரை இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவும், இலங்கைஅரசுடன்பேச்சுக்களைநத்தவும் அலோக் சர்மா திட்ட மிட்டிருந்தார். (வ-4)

## வேலை வாய்ப்பு

1) அரசசேவையில் ஓய்வு பெற்றதாதி (பகுதிநேரம்)
2) பயிற்சிபெற்றதாதி
3) தாதிப்பயிற்சி பெற விரும்புபவர்கள்
4) வரவேற்பாளர்.

**சங்கானை மக்கள் வங்கி முன் வீதி, சங்கானை.**
22.04.2017 காலை 10.00 மணிக்கு முன் நேரில் வரவும்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி இராசநாயகம்

*(பிரசித்த நொத்தாரிஸ்)*



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராசநாயகம் நேற்று (19.04.2017) புதன்கிழமைகாலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும். காலஞ்சென்ற சிவப்பிரகாசம் பர்லதாதேவி தம்பதியினரின் அன்பு மருமகனும் இராசநாயகம் விஜயகுமாரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரனும் வத்சலா (கனடா), காலஞ்சென்ற நிரஞ்சலா மற்றும் சர்மிளா, இராஜ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதர்சன், விதுஷா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தம்பிராசா, கனகசபை ஆகியோரின் அன்பு மைத்துனரும் கலைஞானதேவி, கோமதி, உதயகுமார் (சந்திரன்), புவிராணி, மஞ்சு காலஞ்சென்ற சுரேஷ்குமார் மற்றும் இராஜமனோகரன், இராஜ்மோகன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் யாதவி, சாகித்தியன், தனிஸ்ரா, லோகிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2017) வியாழக்கிழமை இல. 07, குமாரசாமிவீதி, கந்தர்மடத்தில்நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைக்காக பி.ப 04.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
**குடும்பத்தினர்.**

## வலி கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்
## அச்சுவேலி
## பதவி விண்ணப்பம் கோரல்

பதவி - கிராமிய வங்கி வெளிக்கள உத்தியோகத்தர் (சம்பள குறியீட்டு இல. 210/13 நிரந்தரம்)

சம்பள அளவுத்திட்டம்: 14230 - 16730 / 120X10-130X10

(கூட்டுறவு வேலையாள் ஆணைக்குழு சுற்றறிக்கை 13/2015 இன் படி ஊழியர் சேமலாபநிதி ஊழியர் நம்பிக்கை நிதி உட்பட்ட ஏனைய அனைத்து கொடுப்பனவுகளுடன் ஊக்குவிப்பு கொடுப்பனவும்)

தேவைப்படும் தகைமைகள்

அ) கூட்டுறவு ஊழியர் 14வது சம்பளத்திட்டத்தில் அல்லது 15வது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான ஒரு பதவியில் அல்லது இலிகிதர் பதவியில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரம் / க.பொ.த.சாதாரணதரம்/ தே.க.பொ.த பரீட்சையில் /இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம்/ தூயகணிதம் / கணிதம் உடன் சிங்களம்/ தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 6 பாடங்களுடனான சித்தி.


பிரதான அறிவுறுத்தல்கள்

01. ஏனைய கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றும் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை அச்சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும்.
02. சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.
03. விண்ணப்பதாரி 13.04.2017 ஆம் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட வேண்டிய பிரதிகள்
    அ. கல்வித்தகைமைச் சான்றிதழ்   ஆ. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
    இ. வதிவிட உறுதிப்பத்திரம்   ஈ. நற்சான்றிதழ்
    உ. தேசிய அடையாள அட்டை / கடவுச்சீட்டு
05. விண்ணப்பங்கள் சங்கத்தால் இதற்கென அச்சிடப்பட்டுள்ளது. சங்க கடமை நேரத்தில் ரூபா 10.00 செலுத்தி சங்கப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.
06. தெளிவான எழுத்துக்களில் சரியான விவரங்களுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 29.04.2017 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக பதிவுத்தபால் மூலமாக கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இப்பதவி விண்ணப்பம் தொடர்பாக மேலும் விளக்கங்கள் தேவைப்படின் தொடர்பு கொள்ளுங்கள் 021 - 205 8112

**தலைவர்**
**வலி கிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்**
**அச்சுவேலி.**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 31 . 10 . 1939 | | 17 . 04 . 2017 |



### செலஸ்ரீன்பிள்ளை ஜோசப் மரியநாயகம்

*(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)*

யாழ்ப்பாணம் சில்லாலையைப் பிறப்பிடமாகவும் அச்சக வீதி சுண்டுக்குளியை வதிவிடமாகவும் தற்போது ஹொலன்டில் வசித்தவருமான செலஸ்ரீன்பிள்ளை ஜோசப் மரியநாயகம் 17.04.2017 திங்கட்கிழமை ஹொலன்டில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செலஸ்ரீன்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பிலோமினாவின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும் அல்றின் ஜெறாட் ஜோயின் பாசமிகு தந்தையும் மதிவதனி மரியாவின் பாசமிகு மாமனாரும் ஜொய்லின், ஜெய்டன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் திருமதி சந்தியாப்பிள்ளை லூர்து மேரி, திருமதி அக்னஸ் ஜோசப் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நீற்றா (ரத்தினம்), கமலாகரன்(றோச்), மனோகரன்(மரியதாஸ்), மகேந்திரன் (தேவதாசன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 22.04.2017 சனிக்கிழமை ஹொலன்டில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு - அல்றின் ஜெறாட் ஜோய்**
**0031725743789**
**0031652466858**

**தகவல்: மரியதாஸ் மனோகரன்**
**இல. 32/16, அச்சகவீதி,**
**யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லம்மா நாகலிங்கம் (சரவணமுத்து)



கிளானை கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் நகுலேஸ்வரா வீதி, கருகம்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா நாகலிங்கம் (சரவணமுத்து) 18.04.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி நாகலிங்கத்தின் (சரவணமுத்து முன்னாள் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா பறுவதம் தம்பதிகளின் அன்பு மகளும் சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முருகையா, அன்னபார்க்கியம் காலஞ்சென்ற தேவராசா, கலாதேவி, நாகராசா (கனடா), ஜெயபாலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற முத்துப்பிள்ளை காலஞ்சென்ற சின்னத்தம்பி காலஞ்சென்ற இளையகுட்டி காலஞ்சென்ற பார்வதி காலஞ்சென்ற சின்னத்தங்கம் காலஞ்சென்ற செல்லக்குட்டி காலஞ்சென்ற இராசாத்தி, பாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தனவதி (ஆசிரியை) காலஞ்சென்ற நாகரத்தினம், வர்ணகுலசிங்கம், கௌசலா (கனடா), சிவகவிதா (ஆசிரியை ) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நளாயினி, புலேந்திரன் (C.T.B. பருத்தித்துறை), புருசோத்தமன் (கனடா), தவபாரதி (பாரதி வீடியோ), ஜெயகாந்தன், வாசுகி, தர்மவாணி, பிரியதர்சினி, காலஞ்சென்ற கிருஷ்ணரூபன், சுகந்தினி, கஜேந்திரன், சாந்தகுமார் (யூனியன் கல்லூரி), தேவகன்(கனடா), அபிஷேகன் (கனடா), ஆதனா (கனடா), பதுஜன் (யாழ்ப்பாணக்கல்லூரி) யரணிஜா (யாழ்ப்பாணக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.04.2017 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 900 4543, 077 453 3191, 077 836 2892**

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## 111 ஏக்கரையும்...

பேசவேண்டியுள்ளது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் கடந்த திங்கட்கிழமை நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைவாக முதலாவது கூட்டம் முல்லைத்தீவில் நேற்று நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்தில் பி.ப. 2 மணிக்கு ஆரம்பமான கூட்டம் சுமார் அரை மணி நேரம் நடைபெற்றது. இதன் பின்னர், கேப்பாபிலவுக் காணிகளை நேரில் சென்று அடையாளப்படுத்தும் நடவடிக்கை இடம்பெற்றது. இவற்றில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியதாவது:

மாவட்டச்செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில், படைத் தரப்பினர் மக்களுக்கு மாற்றுக் காணி வழங்குவது தொடர்பாகவும் நட்டஈடு கொடுப்பது பற்றியும் பேசினர். இதனை மக்களும், நாங்களும் எதிர்த்தோம். இதனைப் பற்றிப் பேசக் கூட்டம் கூட்டப்படவில்லை என்பதையும் அவர்களுக்கு அழுத்தி உரைத்தோம். இதன் பின்னர் கேப்பாபிலவில் காணிகளை நேரில் சென்று பார்வையிட்டோம். மக்கள் தங்கள் காணிகள் அடையாளம் தெரியாதவாறு உருமாற்றம் செய்யப்பட்டிருப்பதாகக் கூறினர். வற்றாப்பளை புதுக்குடியிருப்பு முதன்மை வீதியின் இடது பக்கத்தில் 67 குடும்பங்களுக்குச் சொந்தமான 111 ஏக்கர் காணியை விடுவிக்கத் தீர்மானித்திருப்பதாகப் படைத் தரப்பினர் கூறினர். அந்தக் காணியில் உள்ள இராணுவத் தளபாடங்களை இடமாற்றுவதற்குக் காலம் தேவைப்படுவதாகவும் விரைவில் அதனை விடுவிப்பதாகவும் குறிப்பிட்டனர். அந்தக் காணிகளுக்குள் சென்று பார்வையிடவில்லை.

வீதியின் மறுபுறத்தில், பாதுகாப்புத் தரப்பினரின் பிரதான முகாம் அமைந்துள்ளது. அதற்குள்ளே மக்கள் அடர்த்தியாக வாழ்ந்த பிரதேசங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. அவற்றை விடுவிப்பது தொடர்பில், அடுத்த மட்டத்திலேயே பேச வேண்டியுள்ளது. முகாமுக்குள் முடக்கப்பட்டுள்ள வற்றாப்பளை புதுக்குடியிருப்பு வீதியும் விடுவிக்கப்படும் - என்றார்.

இந்தச் சந்திப்புக்களில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா, சிவசக்திஆனந்தன் மற்றும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இராணுவ முகாமுக்குள் அலைபேசிகளுடன் மக்கள் பிரதிநிதிகள் அனுமதிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-57)

## வட்டுவாகலில்...

அவ்வாறு காணிகள் விடுவிக்கப்படாவிட்டால் தொடர் போராட்டத்தை முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வட்டுவாகல் காணிகளை விடுவிக்கக் கோரி முல்லைத்தீவில் நேற்று மற்றுமொரு கவனவீர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் போராட்டம் மூன்று நாள்கள் தொடரும். இதன்போதே இந்தக் கால அவகாசத்தை அரசுக்கு வழங்கியுள்ளதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வட்டுவாகல் கிராமத்தில் 617 ஏக்கர் காணியை சுவீகரித்த கடற்படை அதில் பெரிய கடற்படைத் தளம் ஒன்றை அமைத்துள்ளது.

பொதுமக்களுக்குச் சொந்தமான காணியைக் கடற்படை தம்து தேவைக்காகச் சுவீகரிக்க எடுத்த முயற்சி இரண்டு தடவைகள் பொதுமக்களின் எதிர்ப்பால் தடுக்கப்பட்டது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வட்டுவாகல் காணியை இராணுவத்தின் தேவைக்கு வழங்க முடியாது எனத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் காணிகள் விடுவிக்கப்படும் எனப் பொறுமையுடன் காத்திருந்த மக்கள் நேற்றுக் காலை 9 மணியளவில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இது குறித்துக் காணிகளின் உரிமையாளர்கள் தெரிவித்ததாவது:

எங்கள் காணிகள் விடுவிக்கப்படும் என்ற நம்பிக்கையில் காத்திருந்தோம். நம்பிக்கை பொய்த்துப் போனமையால் இன்று நாங்கள் தெருவுக்கு வந்து கவனவீர்ப்புப் போராட்டம் நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எங்கள் போராட்டம் மூன்று நாள்களுக்குத் தொடரும். மூன்றாம் நாள் நாட்டின் அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் மாவட்டச் செயலாளர் ஊடாக மனுக்களை அனுப்பி வைக்கவுள்ளோம். அதனைத் தொடர்ந்து 14 நாள்கள் அரசுக்குக் கால அவகாசம் வழங்கவுள்ளோம். இதற்கிடையில் அரசு எங்கள் காணிகளை விடுவிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். இல்லையேல் எங்கள் அமைதிவழிப் போராட்டதைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம் - என்றனர்.

வட்டுவாகல் மக்களின் போராட்ட களத்துக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முல்லைத்தீவு மாவட்ட இணைத் தலைவர்களில் ஒருவருமான சி. சிவமோகன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் நேரில் சென்று தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். (த-7)

## இப்படியே...

முன்னாள் அமைச்சர் டியூ குணசேகர எச்சரித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்த்து நல்லாட்சி என்று சொல்லப்படும் இந்த கூட்டரசு உருவானது. மகிந்தவின் ஆட்சியில் காணப்பட்ட பல பிரச்சினைகளுக்கு இந்த அரசு தீர்வாக இருக்கும் என்று நாட்டு மக்கள் எதிர்பார்த்தனர்.

ஆட்சிபீடமேறி இரண்டு வருடங்கள் ஆகின்றன. எதுவும் நடக்கவில்லை. இருக்கின்ற நிலமை மேலும் மோசமாகின்றதே தவிர, நல்ல விடயங்கள் எதுவுமே நடக்கவில்லை. வாழ்க்கைச் செலவினம் குறையும் என்று மக்கள் எதிர்பார்த்தனர். அதற்கு மாறாக வாழ்க்கைச் செலவினம் அதிகரித்துக்கொண்டு செல்கின்றது.

வெளிநாட்டு முதலீடுகள் எவையும் நாட்டுக்குள் வரவில்லை. அரச தலைவரும் தலைமை அமைச்சரும் எல்லா நாடுகளுக்கும் சென்று வருகின்றனர். ஆனால்,ஒரு முதலீட்டாளர்கூட நாட்டுக்குள் நுழையவில்லை. வெளிநாடுகள் நட்பாக உள்ளதாக இந்த அரசு கூறிக்கொள்கின்றது. ஆனால்,அந்த நாடுகள் எவையும் பொருளாதார ரீதியில் இலங்கைக்கு உதவுவதாக இல்லை.

மறுபுறம்,போர்க்குற்ற விசாரணையில் வெளிநாட்டுத் தலையீடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பொருளாதாரரீதியில் இலங்கைக்கு உதவுவதற்கு இந்த விவகாரத்தை அந்த நாடுகள் பயன்படுத்துகின்றதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

மொத்தத்தில் எல்லா விடயங்களும் சிக்கலாகவே இருக்கின்றன. இந்த அரசு ஆட்சியைக் கைப்பற்றி இரண்டரை வருடங்கள் ஆகின்றன. கடந்து சென்றதைப் போன்று அரைவாசிக் காலம்தான் தேர்தலுக்கு இருக்கின்றது. இப்படியே எதுவித சாதகமான மாற்றமுமின்றி நாடு சென்றால் நாட்டில் பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டுவிடும். இளைஞர் புரட்சியோ அல்லது இராணுவப் புரட்சியோ ஏற்பட்டுவிடும் - என்றார். (வ-4)

## மகிந்தவின்...

ருந்ததாலேயே மக்கள் மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்த்து எம்மிடம் அரச நிர்வாகத்தை ஒப்படைத்தனர். கடந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் கண்டறியப்பட வேண்டும் என்பதும் ஊழல்வாதிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதும் இந்த நாட்டு மக்களின் விருப்பமாகும். மக்கள் இதற்காகவே எமக்கு ஆணை தந்தனர்.

மகிந்த ஆட்சியில் பல அமைச்சர்கள் பிழையான வழியில் பணம்,சொத்துக்கள் தேடி வைத்துள்ளனர். மகிந்த அணியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அமைச்சராக இருந்தபோது அதிக பணம், சொத்துக்களை தேடிவைத்துள்ளார். இது தொடர்பில் நீதிமன்ற விசாரணையும் இடம்பெறுகின்றது. இது தொடர்பில் அதிகாரிகள் எம்மிடம் இருந்தும் தகவல்களை பெற்றனர். அவரது சொத்துக்கள் அனைத்தும் வேறு நபர்களின் பெயர்களில் உள்ளன. இதனால் இதைக் கண்டுபிடிப்பது மிகவும் சிரமமாக இருக்கின்றது. இவ்வாறான சொத்துக்களையும் வங்கிகளில் பதுக்கி வைத்திருக்கும் பணத்தை கண்டு பிடிப்பதற்காக வெளிநாடுகளின் உதவிகள் கோரப்பட்டுள்ளன.

பத்து வருடங்களாக இடப்பெற்று வந்த இந்த ஊழல் கலாசாரத்தை ஓரிரு வருடங்களில் மாற்றி அமைக்கமுடியாது. இருந்தும்,ஊழலற்ற நாட்டை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கின்றோம். ஊழல்வாதிகள் அனைவரும் தண்டிக்கப்படுவார்கள். இதன்மூலம் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுகிகள் நிறைவேற்றப்படும் - என்றார். (வ-4)

## ஆலய வழிபாட்டிலும்..

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு வட்டுவாகலில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க சப்தகன்னிமார் அம்மன் ஆலயப் பாரம்பரிய வழிபாட்டில் தொடர்ந்து இராணுவம் தலையிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆண்டாண்டு காலமாக எமது முன்னோர்களால் பின்பற்றப்பட்டுவந்த வழிபாட்டு முறையை நாம் இப்போது பின்பற்ற முடியாத அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். அடுத்து வரும் சில மாதங்களில் ஆரம்பமாகும் ஆலயத் திருவிழாவின்போது ஆலயத்தில் இருந்து கடற்கரைக்குச் சென்று நீரைப் பெற்று வந்து அந்த நீரில் விளக்கு எரியும் அற்புத வழிபாட்டைச் செய்து வருவது வழமை. கடந்த பல வருடங்களாக எங்கள் பாரம்பரிய வழிபாட்டு முறையை சிறந்த முறையில் பின்பற்ற முடியாத நிலையில் உள்ளோம். வட்டுவாகல் நந்திக் கடற்கரையில் முகாம் அமைத்துள்ள இராணுவம் கடற்கரைக்குச் செல்லும் வீதியை மூடி வைத்துள்ளது. இதனால் எங்கள் மதவழிபாட்டை சுதந்திரமாக முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. சுதந்திரமாக மதவழிபாட்டை மேற்கொள்வதற்கும், கடற்றொழிலை வட்டுவாகல் நந்திக் கடலில் செய்வதற்கும் அனுமதிக்கவேண்டும்.

எங்கள் காணிகளைப் பலவந்தமாகச் சுவீகரித்து முகாம் அமைத்துள்ள இராணுவம் வெளியேறுவதன் ஊடாகவே இதனை உறுதிப்படுத்த முடியும் - என்றனர். (த-7)

## பேரவலம்...

இவ்வாறு நேற்று வட்டுவாகல் காணி உரிமையாளர்கள் மேற்கொண்ட கவனவீர்ப்புப் போராட்டத்தை ஒளிப்படம் எடுத்த கடற்படையினரிடம் கூறினர் அங்கு நின்ற மக்கள்.

வட்டுவாகலில் பொதுமக்களின் காணிகளை விடுவிக்கக் கோரி நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் பங்கேற்ற காணி உரிமையாளர்களைக் கடற்படையினர் ஒளிப்படம் எடுத்தனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட காணி விடுவிப்புப் போராட்டங்களில் பங்கேற்ற பொதுமக்களை முப்படையினரும் ஒளிப்படம் எடுத்து வருகின்றனர்.இது தமது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் செயற்பாடு எனப் போராட்டங்களில் பங்கேற்ற மக்கள் விசனம் வெளியிட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று வட்டுவாகலில் நடந்த போராட்டத்தையும் கடற்படையினர் ஒளிப்படம் எடுத்தனர்.

இதனை அவதானித்த மக்கள் "எங்கள் காணியைத் தாருங்கள் என்றே உங்களிடம் கேட்கிறோம். இது பெரும் குற்றம் என்றால், மனிதப் பேரவலம் நடந்த இந்த வட்டுவாகல் மண்ணிலேயே எம்மைச் சுடுங்கள்" எனத் தெரிவித்தனர். (த-7)

## மீதொட்டமுல்ல...

அமைச்சில் அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அரச தலைவர் மேற்படி பணிப்புரையை விடுத்தாக, அவரது ஊடகப் பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

மீதொட்டமுல்ல பிரதேசத்தில் இடர் வலயத்திலுள்ள மக்களை மீட்பதற்கு முன்னுரிமையளித்து அவர்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் நடவடிக்கைகளைப் பலப்படுத்தவும், இராணுவத்தின் உதவியுடன் எதிர்வரும் சில மாதங்களில் அந்தப் பிரதேசத்திலுள்ள குப்பைகளை அகற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவும், சட்டவிரோதமாகக் குடியேறுவதைத் தடை செய்வதற்கும் அரச தலைவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கும் நடவடிக்கைகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், நிவாரணங்களை வழங்குவதற்கு இதுவரை உதவி வந்த அனைத்து நிறுவனங்களினதும் உதவியைத் தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாகவும் அரச தலைவர் கூறினார்.

வீடுகளை இழந்த மக்களுக்கு 98 புதிய வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை உடனடியாக இன்றைய தினமே ஆரம்பிக்குமாறு அரச தலைவர் பணிப்புரை விடுத்துள்ளார் - என்றுள்ளது. இதேவேளை வீட்டு உபகரணக் கொள்வனவுக்காக இரண்டரை லட்சம் ரூபா வழங்கவும் அரசு தீர்மானித்துள்ளது. (த-5-4)

## உணர்வுபூர்வமாக...

தமிழர் தாயகமான வடக்குகிழக்கில் அமைதிப்படை என்ற போர்வையில் இந்தியப் படைகள் புரிந்திட்ட அடக்குமுறைகளுக்கு எதிராக அகிம்சை வழியில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்து வீரச்சாவடைந்தார் தியாக தீபம் அன்னை பூபதி. இவரது 29 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று உணர்வெழுச்சியுடன் மக்களால் கடைப்பிடிக்கப்பட்டது.

### கிளிநொச்சி

கிளிநொச்சியில் உள்ள தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அலுவலகமான அறிவகத்தில் நினைவு நிகழ்வு இடம்பெற்றது. இதில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான சு.பசுபதிப்பிள்ளை ப.அரியரத்தினம் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டு அன்னை பூபதியின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

### மட்டக்களப்பு

மட்டக்களப்பு, நாவலடிக் கடற்கரையிலுள்ள அன்னை பூபதியின் கல்லறை அமைந்துள்ள நினைவு வளாகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நினைவு தின நிகழ்வு நடைபெற்றது.

கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அன்னை பூபதியின் நினைவுத் தூபியில் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் நினைவுரைகளும் இடம்பெற்றன.

கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.ஸ்ரீநேசன், ச.வியாழேந்திரன், முன்னாள் நாடாளுன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பா. அரியநேத்திரன், கிழக்கு மாகாண சபை பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மா.நடராசா மற்றும் பெண்கள் அமைப்பினர், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணத்திலும் நினைவு கூரல் நேற்று நடைபெற்றுள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் இந்த நினைவு கூரல் முன்னெடுக்கப்பட்டதாக அந்தக் கட்சி அனுப்பிவைத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4-6)

## மீதொட்டமுல்ல இடர்...

இந்த இடரைத் தடுக்க அரசு தவறியதாகத் தெரிவித்து பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்கள் நேற்றுக் கவனவீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ரஹிரு வீரசேகர,

நாட்டில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு எதிராக நாம் ஒன்று திரண்டுள்ளோம். இது ஒரு சாதாரண விபத்தல்ல. நாட்டின் அரசால் தீர்வு வழங்கப்படாத பிரச்சினை காரணமாகப் பொதுமக்கள் படுகொலைக்கு உள்ளாகியுள்ளனர். வெள்ளைக்கொடியை ஏந்திக் கொண்டு அனுதாபத்தைத் தெரிவிக்க நாம் தயாரில்லை. இந்த இடருக்கு எதிராக நாம் போராடவேண்டும். குப்பை கொட்ட ஆரம்பிக்கப்பட்ட 2011ஆம் ஆண்டு முதல் அந்த மக்கள் அதற்கு எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். சட்டவிரோதமாகப் பொது மக்களின் வீடுகள் காணப்படுவதாக ஆட்சியாளர்கள் இன்று கூறுகின்றனர். குப்பையைக் கொட்டியதே சட்டவிரோதமான விடயம்.

2012ஆம் ஆண்டு மீதொட்டமுல்ல மக்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தியபோது பொலிஸாரைக் கொண்டு அடக்கினர். 2014 ஆம் ஆண்டு இராணுவத்தைக் கொண்டு அடக்கினார்கள். 2015 ஆம் ஆண்டும் இதுதான் நடந்தது. மீதொட்டமுல்லவில் மாத்திரமல்ல கரதியானவிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும். இந்தக் குப்பையால் இலாபமடைந்த பிரதேச சபை உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் அரச தலைவர் ஆகியோர் கொலைகாரர்களாகிவிட்டார்கள். வெளிநாட்டிலிருந்து தலைமை அமைச்சர் அனுதாபம் வெளியிடுகின்றார். அவர்களுக்கு அனுதாபம் வெளியிடவேண்டிய நிலை எதிர்காலத்தில் ஏற்படும் என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றோம். மீதொட்டமுல்ல மக்கள் குப்பையைக் கேட்கவில்லை. ஆட்சியாளர்களின் தவறினால் சிறிய குழந்தைகள் பலியாகியுள்ளனர். இந்தப் பிரச்சினைக்கு அரசு பொறுப்புக் கூறவேண்டும். மக்களின் உயிரை ஒரு இலட்சமென நிர்ணயித்துவிட்டார்கள் - என்றார். (த-5)

# உழைப்பின் மகிமை



ஒரு ஊரில் இரண்டு நண்பர்கள் இருந்தனர். ஒருவன் நல்ல உழைப்பாளி. மற்றவன் முழுச் சோம்பேறி. வேளா வேளைக்கு உண்டு உறங்கி காலங் கழிப்பவன். இருவருக்கும் குறைந்தளவான வயல்கள் இருந்தன. உழைப்பாளி தன் வயலில் இறங்கி நெல் விதைத்து, நீர்பாய்ச்சி, களை எடுத்து பாடுபட்டான். அவனைப் பின்பற்றி வயலில் வேலை செய்யும் தொழிலாளிகளும் "தமது முதலாளியே வயலில் வேலை செய்கிறாரே அவரை ஏமாற்றக் கூடாது என்ற எண்ணத்தில் சுறுசுறுப்புடனும் உற்சாகத்துடனும் வேலை செய்தனர். அதன் பயனாக நிறைய விளைச்சலை அறுவடை செய்தான் உழைப்பாளி. தன்னிடமிருந்த இரண்டு ஏக்கர் நிலத்தை ஐந்து ஏக்கராகவும் பெருக்கிக் கொண்டான். தொடர்ந்து வயலில் பாடுபட்டு உழைத்துக் கொண்டிருந்தான். ஆனால் சோம் பேறி நண்பனோ தனது சோம்பேறித் தனத்தால் இருந்த நிலத்தையும் இழந்து கடன்காரனாகி நின்றான்.

அவன் நண்பனிடம் "நண்பா நீ அதிஷ்டக்காரன் இரண்டு ஏக்கரை ஐந்து ஏக்கராகப் பெருக்கி விட்டாய். உனது வயல்களும் நல்ல விளைச்சல் தருகின்றன. என்னைப் பார்! இருந்ததையும் இழந்து நிற்கிறேன்" நான் துர்அதிஷ்டசாலி" என்றான் மிகவும் வருத்தத்துடன்.

"நண்பா என் வயல் நன்றாய் விளைவதற்கும், நான் மேலும் மூன்று ஏக்கர் வயல் நிலம் வாங்கியதற்கும் காரணம் அதிஷ்டம் இல்லை. என் உழைப்பே காரணம். உன் நிலையை துர்அதிஷ்டம் என்று கூறாதே. உன் சோம்பேறித்தனமே காரணம். நீ உன் நிலத்தில் இறங்கி எப்போதாவது வேலை செய்திருக்கிறாயா? எல்லாவற்றுக்கும் வேலைக்காரர்களை வைத்தாய். சரி. அவர்கள் ஒழுங்காக வேலை செய்கிறார்களா என்றாவது கண்காணித்தாயா? உரிமையாளன் சோம்பேறியானால் வேலைக்காரர்களுக்குக் கொண்டாட்டம் தானே! அவர்கள் ஒழுங்காக வேலை செய்யாது, வீண் அரட்டை அடித்து உன்னிடம் கூலியை மட்டும் ஒழுங்காக வாங்கிச் சென்று விட்டார்கள். உன் பயிர்களை ஆடு மாடுகள் மேய்ந்து விளையாமல் போயிற்று.

நானோ தினமும் வயலில் இறங்கி உழைத்தேன். தொழிலாளிகளோடு நானும் ஒரு தொழிலாளியாகி வேலை செய்தேன். இதில் இன்னொரு இலாபமும் இருக்கிறது. எனக்கு ஒருவருக்கு கொடுக்கும் கூலியும் மிச்சமாகியது. உரிமையாளர் அருகில் இருக்கிறார் என்ற அச்சத்தில் தொழிலாளர் ஒழுங்காக பணியாற்றவும் செய்வர்.

உன் சோம்பேறித் தனத்தை உதறி எறி. இப்போது எஞ்சியிருக்கும் நிலத்தில் உன் உழைப்பைக் காட்டு. நீ விரைவில் உயர்ந்து விடுவாய். மனம் தளராதே! என்று நண்பனைத் தட்டிக் கொடுத்து உற்சாகமூட்டினான் உழைப்பாளி நண்பன்.

**உழைப்பே உயர்வு தரும்**
**உழைக்கும் கைகள்**
**உருவாக்கும் கைகள்**



## இரகசியம் காக்க....

உற்ற நண்பன் தானே என்று கருதி உனக்குள் இருக்கும் இரகசியத்தை அவனிடம் கூறி விடாதே. ஏனெனில் அந்த உற்ற நண்பனுக்கும் இன்னுமொரு உற்ற நண்பன் இருப்பான். அந்த நண்பனுக்கும் வேறொருவன் நண்பனாக இருப்பான். ஆக, நா காக்க; இரகசியம் காக்க.





## வெறும் கற்பனைகள்....

பேய்கள், பிசாசுகள் என்பதெல்லாம் வெறும் கற்பனைகளே! அவை திரிபுக் காட்சிகள் அல்லது பொய்த் தோற்றங்கள் எனப்படுகின்றன. இல்லாத ஒரு பொருள் கண்ணுக்கும் புலனுக்கும் இருப்பது போல காட்சி தருவது திரிபுக் காட்சியாகும். உதாரணம் கானல் நீர். பொய்த் தோற்றத்தில் உண்மையில் எப் பொருளும் இருப்பதில்லை. மன நிலை பாதிக்கப்படும்போதும் போதைப் பொருள்களை உட்கொண்ட போதும் இத்தகைய பொய்த் தோற்றங்கள் தோன்றும். ''மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்'' என்ற ஒரு பழமொழி கூட உண்டு. பேய்கள் இல்லை; ஆனால் பண்டைக் காலம் முதல் நவீன காலமான இன்று வரை பேய்க்கதைகள் நிறைய கூறப்படுகின்றன. இன்றைய சினிமாக்களிலும் தொலைக்காட்சித் தொடர்களிலும் பல பேய்களைத் தாராளமாக சந்தித்து மகிழலாம்.

## அறிந்து கொள்வோம்

1. எஸ்கிமோக்கள் தாய் கற்பவதியாக இருக்கும் போதே பிறக்கப்போகும் குழந்தை... பெயர் வைத்து விடுவர். பிறக்கும் குழ... ஆணாக இருந்தாலும் அல்லது ... ணாக இருந்தாலும் குழந்தைக்கு ... வைக்கப்பட்ட பெயர்தான் வழக்க... இருக்கும்.
2. உலகின் மிகப் பெரிய புத்தகம் 'தலி... ரெட் வில்லியம் பி உட்' என்பவரால் ... வெளியிடப்பட்டது. 7 அடி 2 அங்குல ... கொண்ட இந்தப் புத்தகத்தைத் திற... 10 அடி நீளத்தில் விரியும். இதன் ... 364 மெட்றிக் தொன் ஆகும். விலை 5... சம் ரூபாய். வெளியிடப்பட்ட காலம் 19... –1976 காலப் பகுதியாகும். இந்தப் பு... கத்தை தினமும் 10 மணி நேரம் படிப்பே... மாகில் முழுவதையும் படித்து முடிக்க 6 ஆண்டு காலம் எடுக்கும்.
3. சமாதானத்தின் சின்னமாக வெண் புறாவை அமைத்தவர் 'புதுமுறை ஓவியத்தின் தந்தை' என சிறப்பிக்கப்படுபவரான பபிலோ பிக்காஸோ ஆவார்.
4. தமிழகராதியின் தோற்றத்துக்கு வழிகாட்டியவர் வீரமாமுனிவர் என்ற ஐரோப்பிய தமிழறிஞர். இவர் இத்தாலி நாட்டின் கத்தோலிக்க மதகுருவான வண.பிதா பெஸ்கி ஆவார்.
5. யாழ்ப்பாணத்தில் முதன் முதல் தமிழகராதியைத் தொகுத்தவர் ஆறுமுக நாவலரின் மாணவரும், யாழ்.மத்திய கல்லூரியின் ஸ்தாபகருமான பீற்றர் பார்சிவல் பாதிரியார்.
6. 'உதய தாரகை' இலங்கையில் முதன் முதல் வெளியிடப்பட்ட தமிழ்ப் பத்திரிகை.

## பின்வரும் சட்டத்துக்குள் இருக்கும் எழுத்துக்களைப் பயன்படுத்தி அதன் கீழ் இடம்பெறும் வினாக்களுக்கு விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக

| | | | | |
|---|---|---|---|---|
| சி | லா | ர | ட | ஞ் |
| கு | ல | ம் | க | ச |
| தி | ண் | ற | ள | ப |
| சி | க | ம் | கை | கே |

1. ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று (....................)
2. இலங்கையில் தமிழ் விமர்சனத்துறைக்கு பணியாற்றிய பெரியார் (....................)
3. கையூட்டு என்ற பொருள்தரும் சொல் (....................)
4. யானையை இவ்வாறும் அழைப்பதுண்டு (....................)
5. பல்வகை மலர்களால் ஆகிய மாலை போன்று, பல்வகை யாப்புக்களால் ஆன ஒரு சிற்றிலக்கியம் (....................)

## ஒரு வரிசையில் 4 சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சொல்லிலும் இருந்து ஒரு எழுத்தை மட்டும் தெரிவு செய்து 4 எழுத்துக்களைக் கொண்ட சொல்லை ஆக்குக. சொற்களின் வரிசைக் கிரமப்படியே எழுத்துக்கள் எடுக்கப்படவேண்டும. ஒரு எழுத்தை இருமுறை பயன்படுத்தக் கூடாது.

உ+ம் ஓதுதல், தவிப்பு, வியப்பு; இன்னல் – ஓவியம்

1. பவளம், மதிப்பு, விகடம், சிலம்பு (....................)
2. ஆகாயம், கவிஞன், பயணம், கரும்பு (....................)
3. தானியம், வரலாறு, பாராட்டு, விடுமுறை (....................)
4. கவிதை, புவனம், பாசாங்கு, ஆயிரம் (....................)
5. வாசகர், காழ்ப்பு, விளக்கு, காரிகை (....................)



## நீரில் மூழ்கினால்...

எதிர் பாராத விதமாக திடீரென நிகழும் விபத்துக்களுக்கு வைத்தியரிடம் செல்வதற்கு முன்னர் உடனடியாக தற்காலிகமாகச் செய்யும் பரிகாரமே 'முதலுதவி' எனப்படும். அதன் படி நீரில் விழுந்தவருக்கான முதலுதவி:

ஆழமான நீரில் தவறி விழுந்தவரைத் தண்ணீரில் இருந்து வெளியே எடுத்தவுடன் சுவாச ஓட்டத்தையும், நாடித்துடிப்பையும் பார்த்தறிதல் வேண்டும். நீரில் அமிழ்ந்தியவர்கள் பலவேளைகளில் சாவடைவதற்கு முக்கிய காரணம் மூச்சடைப்பே. நீரில் மூழ்கியவர் காற்றுக்குப் பதிலாக தண்ணீரையே சுவாசக் குழாயின் வழியாக உட்கொள்கிற படியால் சுவாசப் பைகள் தண்ணீரால் நிறைந்து மூச்சடைபட்டுப் போகிறது. இதனால் உடனடியாக நீரில் மூழ்கியவரின் ஆடைகளைத் தளர்த்தி மூழ்கியவரின் காலைப் பிடித்து கால்கள் மேலாகவும் தலை கீழாகவும் தூக்க வேண்டும். அப்போது உட்கொண்ட தண்ணீர் வெளியே வரும். பின்னர் அவரை மல்லாக்காகப்படுக்க வைத்து அவரின் இரு கைகளையும் மார்பின் அடிப் பாகத்தில் குறுக்காக வைத்து நன்றாக அமுக்க வேண்டும். இதுதான் மறுபடியும் சுவாசத்தை உண்டாக்கும் வழி.



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 20
யாழ்ப்பாண மாவட்ட ஹொக்கிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தத் திட்டமிட்ட விலகல் முறையிலான ஹொக்கித் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன. இன்று மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# மனோன்மணி மகுடம் சூடியது

## சகலதுறைகளிலும் நிதர்சன் சிறப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 20
பருத்தித்துறை பிரதேச செயலக இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் கொம்மந்தறை மனோன்மணி இளைஞர் கழகம் கிண்ணம் வென்றது.
நெடியகாடு இளைஞர் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில், கொம்மந்தறை மனோன்மணி இளைஞர் கழகமும் பருத்தித் துறை வீனஸ் இளைஞர் கழகமும் மோதின.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொம்மந்தறை மனோன்மணி இளைஞர் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிதர்சன் 37 ஓட்டங்களைப் பெற்றார்.
30 பந்துகளில் 56 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய வீனஸ் இளைஞர் கழகம் 4.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 28 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.
பந்து வீச்சில் நிதர்சன் அதிகபட்சமாக 2 இலக்குகளை வீழ்த்தினார். (ம-108)

## நியூவொரியர்ஸ் வென்றது

மாதகல் சென். தோமஸ் ஐக்கிய விளையாட்டுக் கழகம் கிறிஸ்து உயிர்ப்பு விழாவை முன்னிட்டு நியூ வொரியர்ஸ் அணியை அழைத்து நடத்திய நட்பு ரீதியான ஆட்டத்தில் நியூவொரியர்ஸ் அணி வெற்றிபெற்றது. 3:0 என்ற கோல் கணக்கிலேயே நியூவொரியர்ஸ் அணி வெற்றி பெற்றது. (ம-23)

## விண்மீன் அணி அரையிறுதியில்

கரணவாய், ஏப். 20
பருத்தித்துறை ஐக்கியத்தின் கால்பந்தாட்டத் தொடரில் யங்கம்பன்ஸை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது பலாலி விண்மீன் அணி.
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடர் திக்கமுனை மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் கம்பர்மலை யங் கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக் கழகம் மோதியது.
முதல் பாதியின் நிறைவில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது விண்மீன். அந்த அணி இரண்டாவது பாதியிலும் தனது ஆதிக்கத்தை தக்கவைத்து முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-108)



## சைக்கிளோட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 20
சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு சிறிலங்கா ரெலிகொம் நிறுவனம் தேசிய ரீதியில் சைக்கிள் ஓட்டப் போட்டியை நடத்தி வருகிறது. யாழ்ப்பாண மாவட்டத்துக்கான போட்டி 100 கிலோ மீற்றர் தூரமுடையதாக நாளை நடைபெறவுள்ளது. யாழ்ப்பாண மாநகரசபை முன்றிலில் காலை 7.30 மணிக்குப் போட்டி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது. (ம-23)

# பங்களாதேஷ் அணிக்கு பணமழை இலங்கையைத் தோற்கடித்தமைக்கு

இலங்கைக்கு எதிரான டெஸ்ட், ஒருநாள், ரி-20 தொடர்களை சமநிலையில் முடித்தமைக்காக பங்களாதேஷ் அணிக்கு இரண்டு கோடி ரூபா (இலங்கை மதிப்பில்) பரிசாக அறிவித்தார் அந்த நாட்டின் அதிபர் சேக் ஹசினா.
அண்மையில் இலங்கைக்குச் சுற்றுப்பயணம் செய்த பங்களாதேஷ் டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி-20 என்று மூன்று விதமான தொடர்களையும் சமநிலையில் முடித்தது. குறிப்பாக டெஸ்ட் தொடரில் இலங்கையை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி 1:1 என்று சமன்செய்தமை பன்னாட்டு ஊடகங்களாலும் கிரிக்கெட் விமர்சகர்கள் மற்றும் ரசிகர்களாலும் வெகுவாகப் பாராட்டப்பட்டது.
இவ்வாறு மகத்துவமான சாதனையைப் படைத்ததை அடுத்தே பங்களாதேஷ் வீரர்களுக்கு 2 கோடி ரூபா பரிசுத் தொகை அறிவித்தார் ஹசினா. (ம)



## துடுப்பாட்டத் தொடர் விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 20
மல்லாகம் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் 6 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. எனவே இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் தமது பதிவை இன்று மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம-23)

## இளநிலைப்பிரிவு மெய்வன்மை

யாழ்ப்பாணம், ஏப். 20
இலங்கை மெய்வன்மைச் சங்கம் நடத்தும் இளநிலைப் பிரிவு மெய்வன்மைத் தொடர் தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டரங்கில் எதிர்வரும் 23ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இந்தத் தொடரில், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, அருணோதயக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, பாசையூர் சென். அன்ரனிஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் பாடசாலை அணிகள் கலந்துகொள்கின்றன. (ம-23)

# முன்பின் முரணான போட்டி அட்டவணைகளால் திண்டாடுகிறது தெல்லிப்பழை கரப்பந்து அணி

யாழ்ப்பாணம், ஏப். 20
வடமாகாண மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இளையோர் நிலை மெய்வன்மை ஆகிய போட்டிகள் அடுத்தடுத்தும், ஒரே நேரப் பகுதியிலும் வருவதால் தெல்லிப்பழை கரப்பந்து அணியின் பங்குபற்றல் மிகவும் சிக்கலானதாக மாறியுள்ளது.
கடந்த பல ஆண்டுகளாக தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தெரிவு அணி மாவட்ட மற்றும் மாகாண மட்ட பெண்கள் பிரிவு கரப்பந்தாட்டத்தில் சம்பியனாகி வருகிறது. நடப்பு வருடத்துக்கான மாவட்ட மட்ட இளைஞர் சேவை மன்ற அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும் வடமாகாண திணைக்களத்தால் மாவட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்படும் தொடர் எதிர்வரும் சனிக்கிழமையும் நடைபெறவுள்ளன.
இதே காலப்பகுதியில் கொழும்பு தியகம மகிந்த ராஜபக்ஸ மைதானத்தில் கனிஷ்ட பிரிவு மெய்வன்மைப் போட்டிகள் நடைபெறவுள்ளன.
தெல்லிப்பழை கரப்பந்தாட்ட அணி வீராங்கனைகளில் 4 வீராங்கனைகள் தேசிய மட்ட கனிஷ்ட பிரிவினருக்கான மெய்வல்லுநர் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளதால் வடமாகாண மற்றும் யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் சேவை மன்ற அணிகளுக்கு இடையிலான தொடரை பிற்போட்டுத் தருமாறு தெல்லிப்பழை அணியால் முன்வைக்கப் பட்ட கோரிக்கை ஏற்பாட்டுக் குழுவால் நிராகரிக்கப்பட் டுள்ளது.
இது தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் சேவை மன்ற இணைப்பாளர் தபேந்திரனிடம் கேட்ட போது, "எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் தேசிய மட்ட போட்டிக்கான விண்ணப்பங்கள் அனுப்பி வைக்க வேண்டிய தேவை உள்ளது. தெல்லிப்பழை பெண்கள் அணி சிறந்த அணி என்பதை நாம் அறிவோம். ஆனால் இந்தத் திகதியைத் தவிர பிறிதொரு திகதியை எடுப்பதில் சிரமமாக உள்ளது. எனவே இதனை தேசிய மட்டத்துக்கான தெரிவாகக் கருதி ஏனைய வீராங்கனைகளைக் கொண்டு விளையாடி போட்டியை நிறைவு செய்ய தெல்லிப்பழை பிரதேச செயலக அணி முன்வர வேண்டும்" என்றார். (ம-422)




# எனது திறனில் உயிர்ப்புள்ளது

## கெய்ல் மிரட்டல்

எனது திறனில் இன்னமும் உயிர்ப்புத் தன்மை உள்ளது. அது வீழ்ச்சியடைந்து விடவில்லை. இவ்வாறு தெரிவித்தார் ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணிக்காக விளையாடிவரும் ஆரம்ப வீரர் கெய்ல்.
நேற்றுமுன்தின ஆட்டத்தில் குஜராத்தை பெங்களூர் வெல்வதுக்கு கெய்ல் முக்கிய பங்காற்றினார். 38 பந்துகளில் 77 ஓட்டங்களைக் குவித்து மிரட்டினால். இந்த ஆட்டத்தின் நாயகனாகவும் தெரிவானார். பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இது ஒரு சாதனை ஆட்டம். ரசிகர்கள் இன்னமும் கிறிஸ் கெய்லுக்காக பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இந்த உலகின் ராஜா இன்னும் இங்குதான் இருக்கிறேன். உயிருடன் இருக்கிறேன். எனது திறனில் தொய்வோ வீழ்ச்சியோ இல்லை. அவை உயிர்ப்புடன் உள்ளன. தொடர்ந்து ரசிகர்களுக்கு அதிரடி மூலம் விருந்து படைப்பேன் என கெய்ல் மேலும் தெரிவித்தார். (ம)

# கெய்ல் 10,000

பன்னாட்டு ரி-20 ஆட்டங்களில் தேசியம், கழகங்கள் என ஒட்டுமொத்தமாகச் சேர்த்து 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த முதல் வீரர் என்ற அடைவை எட்டினார் மேற்கிந்தியத் தீவுகளின் வீரர் கிறிஸ் கெய்ல்.
ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தின ஆட்டத்தில் குஜராத்துக்கு எதிராக 38 பந்துகளில் 5 பவுண்டரிகள் 7 சிக்சர்கள் அடங்கலாக 77 ஓட்டங்களைக் குவித்தார் கெய்ல். இந்த் ஓட்டங்களின் உதவியுடனேயே அவர் இந்த மைல்கல்லை எட்டினார்.
கெய்லின் இந்த அடைவுக்கு முன்னாள், இன்நாள், பெங்களூரின் சக வீரர்கள் எனப் பலரும் தமது பாராட்டைத் தெரிவித்தனர். (ம)



# சச்சினுக்கு ரஜனி வாழ்த்து

சச்சினின் வாழ்க்கை வரலாற்றை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்ட 'சச்சின் ஏ பில்லியன் ட்ரீம்ஸ்' என்ற திரைப்படம் அடுத்த மாதம் 26 ஆம் திகதி திரைக்கு வருகிறது. இதற்காக ரஜனி, சச்சினுக்கு தனது வாழ்த்தைத் தெரிவித்தார்.
ரஜனியின் ருவிற்டர் பதிவிக்கு பதிலழித்த சச்சின், நன்றி தலைவா! தமிழில் இந்தப் படத்தை நீங்கள் ரசிப்பீர்கள் என்று நம்புகிறேன் என்று குறிப்பிட்டார். சச்சினின் இந்தப் படம் தமிழ், மராத்தி, இந்தி, தெலுங்கு, ஆங்கிலம் என ஐந்து மொழிகளில் வெளிவருகிறது. (ம)




# ரொனால்டோ நெருப்பாட்டம்

## மூனிச்சை வென்றது மட்ரிட்




ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி இரண்டாவது சுற்றில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றது மட்ரிட்.
சம்பியன்ஸ் லீக் தொடரின் விதிமுறையின்படி காலிறுதி மற்றும் அரையிறுதிக்குத் தகுதிபெறும் அணிகள் தன்னுடன் விளையாடும் அணியை எதிர்த்து உள்ளூர், வெளியூர் என தலா ஓர்வொரு முறை மோதவேண்டும். இரண்டு ஆட்டங்களின் நிறைவில் எந்த அணி கூடுதல் கோல்களைப் பெறுகிறதோ அந்த அணியே வெற்றிபெறும். காலிறுதியின் முதலாவது சுற்றில் மட்ரிட் 2:1 என்ற கோல் கணக்கில் வென்றிருந்தது. இரண்டாவது சுற்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அரையிறுதிக்குத் தகுதிபெற ஓர் கோல் வித்தியாசத்தின் அடிப்படையில் பெயன்மூனிச் வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாயம் அந்த அணிக்கு இருந்தது.
இரு அணிகளும் ஆகச் சிறந்த போராட்டத் தன்மையை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. 53ஆவது நிமிடத்தில் லெவன்டஸ்கி, மூனிச்சின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 76ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தார் றொனால்டோ. அடுத்த நிமிடத்திலேயே மூனிச் தனது இரண்டாவது கோலைப் பதிவுசெய்தது. மாற்றங்கள் இல்லாமல் 90 நிமிடங்களும் ஓடி மறைந்தன. ஒட்டுமொத்த கோல்களின் அடிப்படையில் இரு அணிகளும் தலா 3 கோல்களைப் பெற்றிருந்தன.
வழங்கப்பட்ட மேலதிக நிமிடங்களில் 104 ஆவது மற்றும் 109 ஆவது நிமிடங்களில் றொனால்டோ மின்னல் வேகத்தில் செயற்பட்டு அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்து ஹற்றிக் படைத்தார். அசென்சோ 112ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் 4:2 (ஒட்டுமொத்த அடிப்படையில் 6:3) என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட். (ம)

# பொறுப்பு அவசியம்

## கோக்லி வலியுறுத்தல்

ஐ.பி.எல். தொடரில் கடும் பின்னடைவைச் சந்தித்துள்ளது பெங்களூர். இந்த அணியின் தலைவராக கோக்லி உள்ளார். அவர் அடுத்தடுத்த ஆட்டங்களில் வீரர்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.
கடந்த ஆட்டங்களைப் போன்று மோசமான பெறுபேற்றை வெளிப்படுத்தினால், வெற்றிபெறுவதற்கான அணியாகவோ அல்லது கிண்ணம் வெல்வதற்குத் தகுதியான அணியாகவோ இருக்க இயலாது. எனவே எஞ்சியிருக்கும் ஆட்டங்களை சிறப்பாகப் பயன்படுத்தி அணியின் வெற்றிக்குப் பங்காற்ற வேண்டும் என கோக்லி மேலும் தெரிவித்தார்.
நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத்துக்கு எதிராக 213 ஓட்டங்களை பெங்களூர் குவித்திருந்த போதிலும் அந்த அணியால் இலகு வெற்றியொன்றைப் பெய இயலவில்லை. இலக்கை மிகச் சிறப்பாக விரட்டிவந்த குஜராத் 21 ஓட்டங்களாலேயே வெற்றியைத் தவறவிட்டது.
இதுவரை 6 ஆட்டங்களில் களமிறங்கியுள்ள பெங்களூர் 2 வெற்றி 4 தோல்விகளுடன் ஆறாவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



# ஐ.பி.எல்லில் வேண்டும் பரிசீலனை

ஐ.பி.எல். தொடரின் விதிமுறைகள் சிலவுக்கு குறிப்பாக நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறை இல்லாமைக்கு கிரிக்கெட் வட்டாரங்களும் இந்திய ஊடகங்களும் கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளன.
ஐ.பி.எல். தொடரில் நடுவர் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறை இல்லை. இதனால் அவரின் முடிவே இறுதியானது என்பதற்கு அமைய நடுவர்கள் விடும் தவறால் ஆட்டமிழப்பற்றவர் பவிலியனுக்குச் செல்வதும், ஆட்டமிழக்க வேண்டியவர் தொடர்ந்து துடுப்பெடுத்தாடுவதுமான சம்பவங்கள் நடைபெறுகின்றன. இதனால் ஐ.பி.எல். தொடரிலும் மறுபரிசீலனை முறை வேண்டும் என்று குரலெழுப்பப்பட்டுள்ளது. (ம)



ஐரோப்பிய கால்பந்துக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்று நள்ளிரவு (இலங்கை நேரப்படி) இடம்பெற்ற காலிறுதி இரண்டாவது சுற்றில் யுவன்டாஸும் பார்சிலோனாவும் மோதின. இந்த ஆட்டத்துக்காக கடந்த இரு தினங்களாகவும் நேற்றுக் காலையும் (இலங்கை நேரப்படி) பார்சிலோனா கடும் பயிற்சியில் ஈடுபட்டது. அரையிறுதிக்குத் தகுதிபெற மூன்று கோல்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற சிக்கல் பார்சிலோனாவுக்கு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சஞ்சீவை வறுத்தெடுக்கும் டோனியின் ரசிகர் கூட்டம்

டோனி தனது பழைய திறனுக்கு திரும்பிக் கொண்டிருக்கும் அறிகுறிகளை வெளிப்படுத்தியதை அடுத்து, புனே அணியின் உரிமையாளர் சஞ்சீவை டோனியின் ரசிகர்கள் வறுத்தெடுக்க ஆரம்பித்துள்ளனர்.

கடந்த வருடம் புனே அணியின் தலைவராக இருந்தார் டோனி. ஆனால் அந்த அணியின் செயற்பாடுகள் சிறப்பாக அமையவில்லை என்பதால் அவரைப் பதவியில் இருந்து நீக்கி சிமித்தை தலைவராக்கியது புனே நிர்வாகம். டோனியின் திறனில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்குக் காரணம் என்று சொல்லப்பட்டது. ஆனால் புனே கடைசியாக எதிர்கொண்ட பெங்களூருக்கு எதிரான ஆட்டத்தில் புனே வெற்றிபெற டோனி முக்கிய பங்காற்றினார். அவர் இமாலய சிக்சர் ஒன்றையும் விளாசினார். இதனையடுத்து அவரின் ரசிகர்கள் சஞ்சீவை சமூக வலைத்தளங்களில் வறுத்தெடுக்க ஆரம்பித்துள்ளனர். (ம)





## ஜோகோவிக் சிறப்பாட்டம்

மொனாக்கோ ரென்னிஸ் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் ஜோகோவிக் வெற்றிபெற்றார்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தில் உள்ளவரான சேர்பிய வீரர் ஜோகோவிக்கை எதிர்த்து பிரான்சின் ஜிலெஸ் சிமோன் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் ஜோகோவிக். இரண்டாவது செற்றை 3:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார். முதல் இரு செற்களின் நிறைவில் இருவரும் தலா ஓர் வெற்றியுடன் இருந்தனர். மூன்றாவதும் இறுதியானதுமான செற்றை கைப்பற்றுபவரே வெற்றியாளர் என்ற நிலை. அந்த செற் இரு வீரர்களினதும் விடாப் போராட்டத்துக்கு ஏற்ப இழுபறியாக நீண்டு சென்றது. முடிவில் 7:5 என்ற கணக்கில் வசமாக்கி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார் ஜோகோவிக். (ம)

# வில்லியம்சன் விளாசல்; வென்றது ஹைதராபாத்

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் வில்லியம்சனின் அதிரடியாட்டம் கைகொடுக்க டெல்லியை வென்றது ஹைதராபாத்.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. நான்கே ஓட்டங்களுடன் வோர்ணரை வீழ்த்தினார் மொறிஸ். தவான், வில்லியம்சன் இணை அணியை மிகச் சிறப்பாக வழிநடத்திச் சென்றது. ஆரம்பத்தில் இருந்தே அடித்தாடினார் வில்லியம்சன். அவரின் அரைச்சதம் 33 பந்துகளில் பதிவானது. அரைச்சதத்தின் பின்னர் அதிரடியை இரட்டிப்பாக்கினார். தவானும் தனது பங்குக்கு அரைச்சதம் கடந்தார். இணைப்பாட்டமாக 136 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் 89 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வில்லியம்சன். 70 ஓட்டங்களுடன் தவானும் ஆட்டமிழந்தார். மத்திய வரிசை வீரர்கள் கிடைத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்த முடிவில் 4 இலக்குகள் இழப்புக்கு 191 ஓட்டங்களைக் குவித்தது ஹைதராபாத்.

பந்துவீச்சில் மொறிஸ் அத்தனை இலக்குகளையும் கைப்பற்றினார். மத்தியூஸ் 3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி இலக்கு எதையும் கைப்பற்றாமல் 41 ஓட்டங்களை வாரி வழங்கினார்.

பதிலுக்குக் களமிறங்கிய டெல்லிக்கு ஆரம்ப வீரரான சாம்சன் 42 ஓட்டங்களைக் குவித்தார். எனினும் அதற்காக அவர் 33 பந்துகளை எதிர்கொண்டார். ஒரு விதத்தில் இது வீணடிப்பே. பில்லிங்ஸை வெளியேற்றினார் சிராஜ். பன்டை ஒரே பந்தில் பவிலியனுக்கு அனுப்பினார் யுவராஜ். டெல்லி அணி வெற்றிபெறுவதற்கான நம்பிக்கை படிப்படியாக இல்லாமல் போனது. அய்யர், மத்தியூஸ் இணைந்து ஆட்டத்தை மாற்ற சிறிது பாடுபட்டனர். 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மத்தியூஸ். முடிவில் 15 ஓட்டங்களால் வென்றது ஹைதராபாத். (ம)

## சோங்கா படுதோல்வி

மொனாக்கோ ரென்னிஸ் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் தரப்படுத்தலில் முதல் 50 இடங்களுக்குள் இல்லாத வீரரிடம் வீழ்ந்தார் சோங்கா.

பிரான்ஸ் வீரர் சோங்காவை எதிர்த்து அதே நாட்டின் வீரர் அட்ரியன் மோதினார். முதலாவது செற்றை 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி சிறப்பாகவே ஆரம்பித்தார் சோங்கா. ஆனால் அவரால் தனது ஆதிக்கத்தை தக்கவைக்க இயலவில்லை. அடுத்த இரு செற்களையும் முறையே 2:6, 3:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அட்ரியானிடம் இழந்து 1:2 என்ற செற் கணக்கில் படுதோல்வியடைந்தார்.

கடந்த பல மாதமாக சோங்கா முக்கிய கிண்ணமொன்றைக் கைப்பற்ற மிகவும் தடுமாறி வருகிறார். பன்னாட்டு அங்கீகாரம் பெறாத தொடர்களில் ஒன்றான மொனாக்கோ தொடரிலும் அவர் படுதோல்வியடைந்தமை மிகையாகவே விமர்சிக்கப்படுகிறது. (ம)



# முதலிரு இடங்களிலும் கொல்கத்தா, மும்பை

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரின் புள்ளிப்பட்டியலில் முதலிரு இடங்களிலும் கொல்கத்தா மற்றும் மும்பை அணிகள் உள்ளன.

ஒவ்வொரு அணியும் மற்றைய அணியுடன் தலா இரு முறை மோதவேண்டும். புள்ளிப்பட்டியலில் முதல் நான்கு இடங்களைப் பிடிக்கும் அணிகள் பிளே ஓவ் சுற்றுக்கு முன்னேறும் என்பது ஐ.பி.எல். தொடரின் விதி.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் இதுவரை முடிவடைந்த ஆட்டங்களின் அடிப்படையில் மும்பை மற்றும் கொல்கத்தா அணிகள் முறையே முதலிரு இடங்களிலும் உள்ளன. இரு அணிகளும் தலா 5 ஆட்டங்களில் விளையாடியுள்ளன. 4 வெற்றிகளையும் ஓர் தோல்வியையும் சந்தித்துள்ளன. நிகர சராசரியின் அடிப்படையிலேயே கொல்கத்தாவுக்கு முதலிடம் கிடைத்தது.

6 புள்ளிகளுடன் ஹைதராபாத் மூன்றாவது இடத்தில் உள்ளது. அந்த அணி 5 ஆட்டங்களில் 3 வெற்றிகள் 2 தோல்விகளைச் சந்தித்துள்ளது. நான்காவது இடத்தில் 4 புள்ளிகளுடன் டெல்லி உள்ளது. அந்த அணி 4 ஆட்டங்களில் 2 வெற்றிகளையும், 2 தோல்விகளையும் சந்தித்துள்ளது. ஐந்து முதல் 8 வரையிலுமான இடங்களில் முறையே பஞ்சாப், பெங்களூர், புனே, குஜராத் ஆகிய அணிகள் உள்ளன.

நேற்று இரவு நடைபெற்ற ஹைதராபாத் - டெல்லி அணிகளுக்கிடையிலான ஆட்டம் தரப்படுத்தலில் உள்வாங்கப்படவில்லை. (ம)

சிங்களம்
செவிமடுத்தல் மற்றும் வாய்மூல பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள்
சனி 01.00-02.00pm
ஞாயிறு 06.00-07.00pm
ஸ்ரீமாஸ்ரர்
72, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
077 703 3729

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.